உ

தசக்கிரீவன்

சென்னை, திருவல்லிக்கேணி
ஆரியன் புத்தகசாலையாரால்
வெளியிடப்பெற்றது.

1925.

க பிரைட்.] [விலை அணு 14.

85518

O-,1FKA,R:8
N25

நூன்முகம்.

பிரமசிருஷ்டியால் தோன்றிய பல்வகைப் பிறப்புக்களுள் உயர்திணைப் பிறப்புக்களே சிறந்தனவாகும். எனினும், அவ் வகுப்புக்களிற் பிறந்தவர்களுள் கல்வி, வீரம், தானம், தயை, பொறுமை, பிதுர்வாக்கிய பரிபாலனம், பெரியோர்க் கடங்கல், சகோதரவாஞ்சை, சுற்றந்தழுவல், நட்பினரை யாதரித்தல், அடைக்கலங் காத்தல், பரோபகாரம், தெய்வபக்தி, குருபக்தி, தவம் முதலிய நற்குண நற்செய்கைகளை யுடையவர்களே எவ்வுலகத்தாராலும் எப்பொழுதும் நன்கு மதிக்கப் பெறுவர்; உயர்ந்தபதவிகளையும் அடைவர். பொறாமை, வஞ்சம், கொடுங்கோன்மை, பெரியோரைத் துன்புறுத்தல், கன்னியரைக் கலக்கல், முதியோர் மொழியை அவமதித்தல், தற்பெருமை, தெய்வநிந்தை, தவஞ்சிதைத்தல், அறங்கெடுத்தல், புறங்கூறல், புன்மொழி பகர்தல், முதலிய குணக் கேடுகளையும், தீச் செயல்களையு முடையார், எக்குலத்தவ ராயினும், எத்தகைய வரங்களைப் பெற்றவ ராயினும், இணையற்ற வீராயினும், குறைவற்ற செல்வமுடையவராயினும், பேராற்றல் படைத்தவராயினும் எவராலும் எக்காலத்தும் இகழப் படுவர்; முடிவில் எல்லாச் சிறப்புக்களையு மிழந்து பொல்லாத தீக்கதியினுட் புகுந்து பல்லூழிக் காலம் வரை அல்லலுற் றழுங்குவர். இவை, அறநூல்களுட்

கூறப்பட்ட உண்மைகளாம். அவற்றுள், இராமாவ தாரமும், இராவணனுடைய சரிதையும் ஈண்டு விரித் துரைத்த நீதிகளை நன்கு விளக்குவனவாம்.

இந் நன்னெறிகளை, கல்விபயிலும் மாணவர்கள் உணரின் சன்மார்க்கங்களில் நடந்து மேம்பாடுறுதற் கேதுவுண்டாம். ஆதலின் அவர்க்குப் பயன்படுமாறு இவற்றை வற்புறுத்திக் கூறும், மேற்கூறிய இருவர் வரலாறுகளும் அடங்கிய இராமாயணத்தி லிருந்து சில பகுதிகளைத் தொகுத்து, " தசக்கிரீவன் " என்னும் பெயரிய இந்நூலாக நாம் வெளியிட்டிருக்கின்றோம். இராவணனுடைய வரலாறுகளே இதில் மிகுதியுங் கூறப்படுகின்றமையின் இதற்கு " தசக்கிரீவன் " என்னும் பெயர் சூட்டப்பட்டுளது. இந்நூல், படிப்பார்க் குப் பல அரிய நீதிகளை யுணர்த்தி நற்பய னளிக்கத் தக்கதாதலின், தமிழ் வளர்ச்சியை அவாவும் ஆசிரியர் களும், தமிழ்த் துறையிற் பயிலும் மாணவர்களும் இதனை அன்புடன் ஆதரிக்க, தமிழார்வமுள்ள இறைவன் தண்ணருள் புரிவானாக.

ஆரியன் புத்தகசாலையார்.

பொருளடக்கம்.

அத்தியாயம்.	விஷயம்.		பக்கம்.
1.	இலங்கை வரலாறு	...	1
,,	குபேரன் இலங்கையை ஆளுதல்	...	10
2.	இராவணன் முதலியோர் உற்பவம்	...	14
3.	இராவணன் இலங்கை புகுதல்	...	19
4.	இராவணாதியர் சந்ததிகளைப் பெறல்	...	21
5.	இராவணன் திக்கு விஜயம்	...	23
,,	இராவணன் தேவரை ஜெயித்தல்	...	26
,,	குபேரன் நந்தவன மழிதல்	...	27
,,	குபேரன் சண்டை	...	29
,,	இராவணன் நந்தியிடம் சாபம் பெறல்	...	33
,,	இராவணன் கைலையைப் பெயர்த்தல்	...	34
,,	தசமுகன் வேதவதியின் சாபம் பெறல்	...	39
,,	இராவணன் மருத்துவை அடக்கல்	...	41
,,	எமன் சண்டை	...	45
,,	இராவணன் சேடனோ டெதிர்த்தல்	...	55
,,	தசமுகன் நிவாதகவசரோ டெதிர்த்தல்	...	58
,,	தசக்கிரீவன் காலகேயருடன் எதிர்த்தல்	...	68

,,	வருண குமாரர் பணிவு	...	73
,,	தேவமாதர் சிறையாதல்	...	75
,,	இயக்ககின்னர மாதர் சிறைப்படல்	...	77
6.	சூர்ப்பனகி புலம்புதல்	...	78
7.	தசமுகன் மதுவினை டெதிர்த்தல்	...	80
8.	இராவணனுக்கு அரம்பையும், நளகூபரனும் சாபமிடல்	...	83
9.	இந்திரன் சிறைப்படல்	...	84
10.	இராவணன் கட்டுப்படல்	...	90
11.	இராவணன் வாலியால் துயருறல்	...	93
12.	இராமாவதாரம்	...	96
13.	சீதை பிரிவு	...	102
14.	இராவண சம்மாரம்	...	108
15.	ஜானகி மகிமை	...	141
16.	இராமர் மீட்சி	...	150
17.	ஸ்ரீ இராமர் பட்டாபிஷேகம்	...	166

உ

கடவுள் துணை.

தசக்கிரீவன்.

கடவுள் வணக்கம்.

நேரிசை வெண்பா.

திருவருளும் நல்வாழ்வுஞ் சித்திக்குஞ் சித்தங்
கருதுசெயல் கைகூடுங்கல்வி—பெருகுமுயர்
ஆதிபரன் பொன்மலர்த்தாள் ஆதரவு கொண்டுநிதம்
நீதியுடன் போற்ற நிலத்து.

அத்தியாயம்—1.

இலங்கை வரலாறு.

பூர்வத்தில் பிரமதேவர் பதினான்கு உலகங்களையும் படைத்துச் சராசரப் பொருள்களை யெல்லாம் உண்டாக்கி, எண்பத்து நான்கிலக்ஷம் பிறப்புப் பேதங்களை உற்பத்திசெய்து அவற்றுள் அறிவுடைய வகுப்பிற் பிறந்தவர்களை நோக்கி, "நீங்கள் உலகங்களை ஆட்சிபுரிந்து கொள்வீர்களாக" என்று சொன்னார். அதைக் கேட்டவுடன் அந்த ஜீவர்களில் பலர் 'நமக்கு உலகங்களை ஆளும் திறமேது? பிரமாவே யாரை நியமிக்கின்றாரோ அவரே ஆட்சிபுரியட்டும்' என்று பேசாமலிருந்தார்கள். சிலர், பிரமாவின் வாக்கியத்திற்குப் பிரதி யுத்தரமாக 'யக்ஷயக்ஷ' என்று சொன்

ணர்கள் ; சிலர், 'ரட்ச ரட்ச' என்று சொன்ஞர்கள். அவற்றைக் கேட்டதும் பிரமா 'யக்ஷ யுக்ஷ' என்றவர்களே நோக்கி, 'நீங்கள் உங்கள் வாக்கியத்தை யனுசரித்து யக்ஷராகக் கடவீர்கள்' என்றும் 'ரட்ச ரட்ச' என்றவர்களேப் பார்த்து 'நீங்கள் இராக்ஷஸராகக் கடவீர்கள்' என்றும், 'நீங்கள் உலகங்களில் வல்லமையான காரியங்களேச் செய்யக்கடவீர்கள்' என்றும் சொன்ஞர். அப்படியே அவர் சொன்ன இரண்டு வகுப்பாரும் ஆயினுர்கள்.

அவர்களில் இராக்ஷத வகுப்பிலே ஏதியென்றும், பிரகேதி யென்றும் இரண்டு சகோதரர்கள் தோன்றிஞர்கள். அவர்களுள் பிரகேதி நற்குண முடையவஞய் தவஞ் செய்யப் போயினுன். ஏதி, தனக்குச் சமான மானவ ரெவருமில்லே யென்று அகங்காரங்கொண்டு மிக்க வலிமையுடையவஞய் உலகத்தை யாளக்கருதித் தனக்குப் பொருத்தமான ஒரு கன்னிகையை மணஞ் செய்துகொள்ள விரும்பிப் பெண் விசாரித்து வரும்படி தூதர்களே நாலா திக்குகளிலும் அனுப்பினுன். அவர்கள் ஆங்காங்கே சென்று விசாரித்து யமனுடைய தங்கை பயை யென்பவளே அவனுக்குத் தகுதியானவளென்றுணர்ந்து திரும்பி வந்து அவளேப்பற்றி ஏதியிடம் தெரிவித்தார்கள். ஏதி யமனுடைய சம்மதத்தின் பேரில் அவளே மணந்தான். அவள் வித்யுத் கேசன் என்பவனேப் பெற்ருள். அவன் பருவமடைந்து காந்தர்வ ஸ்திரீயாகிய சந்தியென்பவள் பெற்ற சால கடங்கடை யென்பவளே விவாகஞ் செய்து கொண்டான்.

அவ்விருவரும் சந்தோஷமாக வாழுங்காலத்தில் அந்தப்பெண் ஒருநாள் ஒரு சோலேயிலே ஆண்

குழந்தை யொன்றைப் பெற்று அவ்விடத்திலேயே போட்டுவிட்டு, அதன்மீது அன்பில்லாமற் சென்ற தன் புருஷனுடனே போய் விட்டாள். அதன்மேல் அக்குழந்தை கிடந்தவிடத்தில் காற்றும், மழையும், இருளும் அதிகமாயின. அவற்றிற் கிடையில் அக் குழந்தை அழுதுகொண்டு கிடந்தது. அப்போது இந்திரன் முதலிய தேவர்கள் அக் குழந்தையைக் கண்டிரங்கி, சிவபெருமானைத் தியானித்து, "எம்பெரு மானே! நீரே இக்குழந்தையைக் காப்பாற்ற வேண் டும்" என்று துதித்தார்கள். சிவபெருமான் அவர் களுக்குக் காட்சி கொடுக்க உமாதேவியோடு அங்கே ரிஷபாரூடராய் வந்தார். அப்போது உமாதேவி அக் குழந்தையைப் பார்த்துவிட்டுப் பரிதபித்துச் சிவ பெருமானை நோக்கி, "சுவாமி! இக் குழந்தையை நீரே காத்தருளவேண்டும்" என்று கூறினாள். சிவ பெருமான் அப்படியே அந்தக் குழந்தையைக் கருணையோடு பார்த்து "உனக்கு நிறைந்த ஆயுளும், அழகும், வலிமையும், சுகேச னென்ற பெயரும் உண் டாகக் கடவன" என்று அனுக்கிரகஞ் செய்தார். பார் வதியும், அந்தக் குழந்தையின் வமிசத்தி லுண்டாகும் எல்லாருக்கும் கருத்தரித்தவுடனே பிள்ளை பிறக்கவும், அப்படிப் பிறந்த பிள்ளைகளுக்கு, அப்போது தாய்க் குள்ள பருவம் உண்டாகவும் அவனுக்கு வரங்கொடுத் தாள். அதன்மேல் சுகேசன் செல்வமும் வெற்றியும் பொருந்தி ஒரு வளம் பொருந்திய நகரத்திலே குடி யேறி யிருந்தான். அவனுடைய மேன்மையை ஒரு கந்தருவன் கேள்விப்பட்டுத் தெய்வவதி யென்னும் தன் புத்திரியை அவனுக்கு மணஞ்செய்து கொடுத் தான். அந்தத் தெய்வவதிக்கும் சுகேசனுக்கும்

மாலியவான், சுமாலி, மாலி யென்னும் மூன்று புத்தி ரர்கள் பிறந்தார்கள்.

அம்மூவரும் எல்லோரும் நடுங்கும்படி பல பராக்கிரமமுடையவர்களாய் வளர்ந்து, மேருவுக்கு வட பாரிசத்தில் போய்ப் பெரிய வரங்களைப் பெறுதற்குப் பிரமனை நோக்கித் தவஞ் செய்தார்கள். பிரமன் அவர்களுக்கு முன்னே பிரசன்னமாகி, 'உங்களுக்கு என்னவரம் வேண்டும்?' என்று கேட்டான். அவர்கள், "மூன்றுலகங்களிலும் எவராலும் ஜெயிக்கமுடியாத பலமும், ஆயுளும், ஆயுதங்களும் எங்களுக்குக் கொடுத்தருள வேண்டும்" என்றார்கள். பிரமன் அவ்வாறே அவற்றை அவர்களுக்குக் கொடுத்துச் சென்றான். அதன்மேல் அந்த மாலியவான் முதலிய மூன்று பேர்களும் விருத்தியடைந்து தேவர்களையும், மற்றவர்களையும் வென்று சகலருக்கும் துன்பத்தைச் செய்து எங்கும் தங்கள் ஜெயக்கொடியை நாட்டியிருந்தார்கள்.

அப்படி யிருக்கும்போது அவர்கள் தேவதச்சனை யழைத்து அவனிடம், தாங்களிருப்பதற்கு, எல்லாவற்றினும் மேலான ஒரு நகரத்தை உண்டாக்குவதற்குத் தக்கவிடத்தை ஆராய்ந்து தெரிவிக்கும்படி கூறினார்கள். அதற்கவன் அவர்களை நோக்கி, "அசுரேந்திரர்களே! முன்னொருகாலத்தில் ஆதிசேஷனுக்கும் வாயுபகவானுக்கும் பலத்தைப்பற்றி வாது நிகழ்ந்தது. அப்போது, சேஷன் மேருவை மூடிக்கொள்ள, வாயு அவனைப் பெயர்த்துவிட்டால் வலிமையிற் சிறந்தவனென வும், அவனால் அது முடியாவிட்டால் சேஷனே வலியுடையவ னெனவும், தீர்மானித்துக் கொள்ளலா

மென்று அவர்கள் முடிவுசெய்து கொண்டார்கள். அதன்படி சேஷன், தன்னுடைய படங்களாலும் உடலாலும் மேருவைச் சுற்றி மூடிக்கொண்டான். வாயு மோதி மோதி அவன்மேல் அடித்தான். சேஷன் சற்றும் அசையாமலிருந்தான். அதனுல் வாயு வெட்கப்பட்டு ஒருவருக்குந் தெரியாத ஓரிடத்தில் மறைந்திருந்தான்.

வாயு சஞ்சரிக்காமற் போகவே எல்லா உலகங்களிலும் உள்ள ஜீவன்கள் மூச்சுவிட முடியாமல் சகலருக்கும் உபத்திரவ முண்டாயிற்று. அதனுல் தேவர்களும் முனிவர்களும் சேஷனிடம் சென்று அத் துன்பத்தை நீக்கும்படி முறையிட்டார்கள். அவன் அதை நீக்குவதற்கு ஓர் உபாயத்தைத் தேடி அவர்களைப் பார்க்கிறவனைப் போல் ஒரு தலையைச் சற்றே தூக்கினுன். அப்போது வாயுபகவான் இதுதான் தருணமென்று வெளியேறி வேகங்கொண்டு அவ்விடத்தில் மோதினுன். அதனுல் மேருவின் ஆயிரத் தெட்டுச் சிகரங்களில் மூன்று சிகரங்கள் பெயர்ந்து தென் சமுத்திரத்தில் வீழ்ந்தன. அவை வீழ்ந்த இடம் மிக விசாலமாயும் பொன் மயமாயு மிருக்கின்றது. அதுவே நீங்கள் நகரமுண்டாக்கி வசித்தற்குத் தக்கவிடம்" என்று கூறினுன்.

அவர்கள் மூவரும், "அப்படியானுல் அவ்விடத்திலேயே ஓர் அலங்காரமாகிய நகரத்தை நிருமிக்கக் கடவாய்" என்று விசுவகர்மாவுக்குக் கட்டளை யிட்டார்கள். அப்படியே விசுவகர்மா அங்கே சகல அரண்களுடனும் சுவர்க்கத்துக்கு நிகராகிய நகரமொன்றைச் சிருஷ்டித்து அதற்கு இலங்கை யென்று பெயரிட்டான்.

அதன்மேல் அந்த மாலியவான் முதலிய மூவரும் நல்ல முகூர்த்தத்தில் இலங்கா நகரத்தில் குடியேறி மூவுலகத்தாரும் வணங்க அரசு செய்து கொண்டிருந்தார்கள். அப்படி யிருக்குங் காலத்தில் தருமநதை யென்னும் கந்தருவஸ்திரீயின் புத்திரிகளாகிய மூவரில் மூத்தவளாகிய சுகந்தரி யென்பவளை மாலியவானும், அவளுக் கிளையவளாகிய கேதுமதி யென்பவளை சுமாலியும், அவளுக் கிளையவளாகிய கன்னியை மாலியும் விவாகஞ்செய்து கொண்டார்கள். மாலியவானுக்கு பிரகஸ்தன், வச்சிரமுஷ்டி, விருபாக்ஷன், துன்முகன், பாபசித்தன், நியாயகோபன், மத்தன், உன்மத்தன் என்னும் எட்டுப் பிள்ளைகள் பிறந்தார்கள். சுமாலிக்கு கேகசி, கும்பிநசி என்ற இரண்டு புத்திரிகள் பிறந்தார்கள். மாலிக்கு குரூர யுத்தன், நீலன், நிலயன், சம்பாதி என்னும் நான்கு புத்திரர்கள் பிறந்தார்கள். இவர்கள் தவிர இன்னும் பிரமதேவன் கொடுத்த வரத்தினுலே மாலியவான் முதலிய மூவர்களுக்கும் இரதகஜதுரக பதாதிகளும், சகல ஆயுதங்களு முண்டாயின.

அப்படி அவர்கள் பலமுடையவர்க ளாகவே, அகங்கரித்து உலகத்திலுள்ள சகல பிராணிகளையும் வதைத்துத் தேவர்களை ஹிம்சித்து அமராவதிப் பட்டணத்தைக் கொள்ளைகொண்டு எங்கும் உபத்திரவத்தைச் செய்துகொண் டிருந்தார்கள். அதைச் சகிக்க முடியாமல் தேவர்களும், நாகரும், முனிவரும் சிவபெருமானிடம் முறையிட்டார்கள். அதற்கவர், "எனக்கு மிகுந்த பக்தனுகிய சுகேசன் வழியில் வந்த இராக்ஷதர்கள் கொடியவர்களானுலும் அவர்களை நான் அழிப்பது தகுதியாகாது; நீங்கள் மகாவிஷ்ணுவி

னிடம் சென்று உங்கள் குறையைச் சொன்னால் அவர் நீக்கி வைப்பார்” என்று கூறினர். உடனே அத் தேவர் முதலானவர்கள் திருப்பாற்கடலின் மத்தியிலே ஆலிலைமேல் சேஷசயனத்தில் யோக நித்திரைசெய்து கொண்டிருந்த விஷ்ணு மூர்த்தியிடம் சென்று தங்கள் துன்பத்தை நீக்கவேண்டுமென்று ஸ்தோத்திரம் செய்தார்கள். மகாவிஷ்ணு, “நான் அந்த இராக்ஷதர்களை நாசஞ்செய்து உங்கள் துன்பத்தைப் போக்குகிறேன்” என்று அவர்களுக்கு அபயங்கொடுக்க, அவர்கள் திரும்பித் தங்கள் தங்கள் இடங்களுக்குச் சென்றார்கள். அதன்மேல், அத்தேவர்கள் விஷ்ணுவினிடம் சென்றதையும், அவர் இராக்ஷதர்களை அழிப்பதாக அவர்களுக்கு வரங்கொடுத்ததையும் இராக்ஷத தூதர்கள் அறிந்து மாலியவான் முதலியவர்களுக்குத் தெரிவித்தார்கள். அவர்கள் மூவரும், ‘இப்பொழுதே தேவர்களை ஒழித்துவிட வேண்டும்’ என்று சீறியெழுந்து போர்க்கோலங் கொண்டு புத்திரர்களுடனும், மற்ற வீரர் படைகளுடனும், தேரேறிப் புறப்பட்டுச் சுவர்க்கலோகத்தை நாடிச் சென்றார்கள்.

அவர்களைக் கண்டவுடன் தேவர்கள் நடுங்கி நாலா திக்குகளிலும் ஓடித் தங்கள் ஆபத்தான நிலைமையைத் தெரிவிக்கும்படி ஒரு தேவ தூதனை நாராயணமூர்த்தியிடம் அனுப்பினார்கள். அவன் சென்று விஷ்ணு மூர்த்தியிடம் மாலியவான் முதலியவர்களுடைய செய்கையைக் கூறினன். உடனே விஷ்ணுமூர்த்தி எழுந்து சங்கு, சக்கரம், தண்டம், கோதண்டம், கட்கம் ஆகிய பஞ்சாயுதங்களுடன் யுத்த கோலங் கொண்டு கருடன் மீதேறிப் புறப்பட்டு, மாலியவான்

முதலியவர்களுடைய சேனையிற் புகுந்தார். அப்போது கருடன் பாய்ந்த வேகத்தினால் அவனுடைய இறகுகளின் காற்றி லடிபட்டு அநேகம் இராக்ஷத சேனைகள் மாண்டன. அதைக்கண்டு சுமாலி யென்பவன் தன்னுடைய படைகளுடன் நெருங்கி மகா விஷ்ணுவினுடைய சரீர முழுமையும் மறையும்படி சரங்களைப் பொழிந்து உக்கிரமாக யுத்தம் பண்ணினான். அப்போது விஷ்ணு அநேக பாணங்களால் சுமாலி ஏவிய பாணங்களைப் போக்கி மேலும் கொடிய அம்புகளைப் பிரயோகித்து இராக்ஷத சேனைகளை மடித்துச் சுமாலியினுடைய சரீரத்தைச் சல்லடைக் கண்களாகத் துளைத்து அவனையும் மூர்ச்சிக்கும்படி செய்தார்.

அதன்மேல் அவன் தம்பியாகிய மாலியென்பவன் தன்னுடைய சேனைகளுடன் வந்து விஷ்ணுவினோ டெதிர்த்து யுத்தம் பண்ணினான். மகா விஷ்ணு அஸ்திரப் பிரயோகஞ்செய்து அவனுடைய சேனைகளையும் சின்னாபின்னப் படுத்திவிட்டார். அதன் மேல் அந்தமாலி மிகுந்த கோபங்கொண்டு ஒரு வஜ்ஜிர தண்டத்தை யெடுத்துக் கொண்டு பாய்ந்து மகா விஷ்ணுவைத் தாங்கிக்கொண் டிருந்த கருடனுடைய இரத்தினகிரீடம் நகர்ந்து வீழும்படி அத்தண்டத்தினாலே ஓங்கி அவன்மேல் அடித்தான். அந்த அடியினால் கருடன் சற்றே மயங்கிச் சோர்ந்தான். அதைக் கண்டு விஷ்ணு, அந்த மாலியின்மீது தம்முடைய சக்கரத்தைப் பிரயோகம்பண்ணினார். அந்தச்சக்கரம் விரைந்து சென்று அந்த மாலியின் சிரசை யறுத்துத்தள்ளி அவனுடைய சேனைகளையும் நாசஞ் செய்து விட்டது.

அப்போது, மூத்தவனுன மாலியவான், மாலியும், மற்ற சேனைகளும் இறந்து கிடப்பதையும், சுமாலி மூர்ச்சையடைந்து கிடப்பதையும் கண்டு, மகா விஷ்ணுவினேடு எதிர்த்து நிற்கப் பயந்து தன் சேனைக ளுடன் புறங்காட்டி ஓடினுன். மகாவிஷ்ணு 'இவனை உயிருடன் வைக்கக்கூடாது' என்று அவனைக் கொல்லு தற்கு உக்கிரமாகத் தொடர்ந்து போனுர். அத்தரு ணத்தில், முன்னே மூர்ச்சையாகிக் கிடந்த சுமாலி, தெளிந்து தன்னுடைய தம்பியும், இராக்ஷத சேனை களும் மடிந்து கிடப்பதையும், தமையன் பயந்தோட அவனை விஷ்ணு துரத்திச் செல்வதையும் கண்டு ஆத் திரத்தோடு விரைந்துசென்று விஷ்ணுவுக்கெதிரில் நின்று, "யுத்தத்தில் இளைத்தோடுகிறவர்கள்மீது ஆயு தந் தொடுப்பது கூடாதென்று தரும சாஸ்திரங்கள் கூறுகின்றன; அப்படி யிருந்தும் ஏதோ ஒரு காரணத் தால் யுத்தஞ்செய்யாமல் என்னைத் தேடிச்செல்கின்ற என் தமையனை நீ துரத்திக் கொல்லப்போகின்ருய்; உன்னுடைய வீரம் நன்ருயிருக்கின்றது; உனக்கு வன்மை யுண்டானுல் நீ என்னேடு சண்டை செய்" என்று ஒரு வேலாயுதத்தை எடுத்து மகாவிஷ்ணுவி னுடைய மார்புக்கு நேரே குறிவைத் தெறிந்தான். அந்த வேலானது விஷ்ணுவின் மார்பிற் பாய்ந்தது. உடனே விஷ்ணு அந்த வேலைத்தானே பிடுங்கிக் கொண்டு சுமாலியின் மார்பிலெறிந்தார். அந்த வேல் சுமாலியின் மார்பிற்பட்டு ஊடுருவி அநேகம் இராக்ஷ தர்களையும் மடித்துச் சென்றது. சுமாலி அப்போதும் இளைக்காமல், முன்னே தனக்குப் பரமசிவன் கொடுத்த சூலத்தையெடுத்து விஷ்ணுவின்மே லெறிந்தான். அந்தச் சூலமானது விஷ்ணுவின் மார்பிலே பட்டு

உள்ளே பாயமுடியாமல் பந்துபோலக் குதித்துக் கீழே வீழ்ந்துவிட்டது.

அதைக்கண்டு சுமாலி, "நமக்கு அபஜெயமுண்டாகி வருவதால் நாம் இனி யுத்தஞ் செய்வதிற் பயனில்லை; உயிர் தப்பியோடுவதே நல்லது; இப்போது பிழைத்திருந்தால் பின்னொரு காலத்தில் வலிமையையுண்டாக்கிக்கொண்டு எதிரிகளை வெல்லலாம்" என்று எஞ்சியிருந்த சேனைகளையும், தன் தமையன் மாலியவானையும் அழைத்துக்கொண்டோடி இலங்காபட்டணம் புகுந்து அங்குள்ள தன் சுற்றத்தார்களையும் அழைத்துக்கொண்டு விரைந்துசென்று ஒருவருக்கும் தெரியாமல் இருள் சூழ்ந்திருக்கின்ற பாதாளலோகத்திற் போய் மறைந்தான்.

குபேரன் இலங்கையை ஆளுதல்.

அப்படி மாலியவானும், சுமாலியும் போய் மறைந்தபின்பு, ஒருகாலத்தில் பிரமதேவர் புத்திராகிய புலஸ்தியர் மேருகிரியைச் சார்ந்த தபோவனத்திற் சென்று தவஞ் செய்துகொண் டிருந்தார். அப்போது தேவகன்னியர்களும், நாககன்னியர்களும், முனிவர் கன்னியர்களும் அங்கே தினந்தோறும் வந்து கூடி விளையாடிச் செல்வது வழக்கமாயிருந்தது. அப்படி யிருக்கும்போது ஒருநாள் புலஸ்தியர் தவம்பண்ணிக்கொண் டிருக்குமிடத்திற்குச் சமீபத்திலே அந்தப் பெண்கள் ஆடிப்பாடி விளையாடிக் கொண்டிருந்தார்கள். அவர்களின் விளையாட்டால் உண்டான தொனி அந்த முனிவரின் காதில் கேட்டது. அதனால் அவருடைய தவத்திற் கிடையூறுண்டாயிற்று. அவ்வாறுக்கவே அவர் மிகுந்த கோபங்கொண்டு அந்தக் கன்னி

யர்களை நோக்கி, "இனிமேல் நீங்கள் என் கண்ணெதிர்ப்படுவீர்களானால் உங்களுக்குப் பொல்லாத உற்பாதமான கருப்பமுண்டாகக் கடவது" என்று சாபமிட்டார். அதைக்கேட்டு அந்தப் பெண்கள் நடுங்கியோடி அதுமுதல் அங்கே வாராதிருந்து விட்டார்கள்.

அதன்மேல் ஒருநாள் திரணபிந்து முனிவருடைய புத்திரியாகிய குணவதி யென்னும் பெண் புலஸ்தியருடைய சாபத்தை யுணராமல் தன் தோழிகளுடன் அவரிருக்கும் வனத்திற்புகுந்து விளையாடி ஓரிடத்தில் அத்தோழிகளைவிட்டுப் பிரிந்து தனிப்பட்டு அவர்களைக் கூவி அழைத்துக்கொண்டு போனாள். அப்போது புலஸ்தியர் வேதகானத்தால் கடவுளை ஸ்தோத்திரம்செய்து கொண்டிருந்தார். அந்தக் கானம் அப்பெண்ணின் காதிற்பட்டது. அதைக் கேட்டவுடனே அவள், "இஃதேதோ அருமையான புருஷரின் கானமாயிருக்கின்றது; இந்தக்கானம் செய்பவரை நாம் காணவேண்டும்" என்று அந்தக் கானம் வந்தவழியே சென்று அவரைக் கண்டாள். அவ்வாறு பார்த்த மாத்திரத்தில் அம்முனிவரிட்ட சாபப்படியே அவளுக்குக் கருவுண்டாய் அதன் சின்னங்கள் தோன்றின. அவள் உடனே பயந்து திரணபிந்து முனிவரிடம் சென்று தனக்கு நேர்ந்ததைக் கூறினாள். அவர், ஞானதிருஷ்டியால் அது புலஸ்தியருடைய சாபத்தால் நேர்ந்ததென்பதை உணர்ந்து கொண்டு அவளுடன் புலஸ்தியரிடம் சென்று, அவள் மிக்க குணவதி யென்பதையும், அவளுக்குக் கருப்பமுண்டான காரணத்தையும் சொல்லி, 'இவளை நீரே மணஞ்செய்து கொள்ளவேண்டும்'

என்று வேண்டினர். புலஸ்தியர் அவ்வாறே அவளை மணம்புரிந்து கொண்டார்.

குணவதி புலஸ்தியருடன் வாழ்ந்துவருங் காலத்தில், ஒருநாள் அவர் அவளை நோக்கி, "பெண்ணே! நீ முன்னே என்னுடைய சாபத்தை யுணராமல் நான் பாடிய கானத்தைக் கேட்டு என்னிடம் வந்ததால் உனக்குக் கருப்பமுண்டாயிற்று; அந்தச் சிசுவும் அப்போது என்னுடைய கானத்தைச் சிரவமென்னும் காதினாலே கேட்டபடியால் விச்சிரவா என்னும் பெயருடைய ஒரு புத்திரனாகப் பிறக்கும்" என்று சொன்னார். அவரனுக்கிரகப்படியே அவள் விச்சிரவாவென்பவனைப் பெற்றாள். அந்த விச்சிரவா வென்பவன் வளர்ந்து புலஸ்தியரால் வித்தியாரம்பம் உபநயனம் முதலிய கிரியைகளெல்லாம் செய்யப்பெற்று அவரனுக்கிரகத்தினாலேயே சகல வேத சாஸ்திரங்களையும் ஓதி யுணர்ந்து தவத்திலும் சிறந்து விளங்கினான்.

அதன்மேல் அவனுடைய யோக்கியதைகளை யுணர்ந்த பாரத்துவாசர், தம்முடைய புத்திரியாகிய தேவகன்னி யென்பவளைப் புலஸ்தியருடைய அனுமதி பெற்றுச் சகல முனிவர்களுக்கும் முன்னிலையில் விச்சிரவாவுக்கு மணஞ்செய்து கொடுத்தார். அந்த விச்சிரவாவும் தேவ கன்னியும் மகிழ்ச்சியுற்று வாழ்ந்து வருங் காலத்தில் தேவ கன்னியின் வயிற்றில் சுப முகூர்த்தத்தில் ஒரு சற்புத்திரன் பிறந்தான். அப்போது தேவர்களெல்லோரும் அங்கே வந்து அந்தப் புத்திரனைக் கொண்டாடி அவனுக்கு வைச்சிரவணன் என்று நாமஞ்சூட்டி அவனை ஆசீர்வதித்துச் சென்றார்கள். அதன்மேல் அப் புத்திரன் வளர்ந்து பதினாறு

வயதுக்குள் சகல வேத சாஸ்திரங்களையும் ஓதி யுணர்ந்து தபோவனஞ் சென்று பிரமதேவரை நோக்கிக் கடுந்தவஞ் செய்துகொண் டிருந்தான்.

அப்போது ஒரு சமயத்தில் பிரமதேவர் அந்த வைச்சிரவண னிடத்தில் பிரசன்னமாகி, "உன் தவத்தை நான் மெச்சினேன்; நீ உனக்கு வேண்டிய வரத்தை என்னிடம் கேட்டுக்கொள்" என்றார். அதற்கவன், "சுவாமி! திக்குப்பாலகர்களுள் நானு மொருவனாதல் வேண்டும்; எடுக்க எடுக்கக் குறையாத நவநிதிக்குரியவனு யிருத்தல்வேண்டும்" என்று சொன்னான். பிரமதேவர் அப்படியே அவனுக்கு அவை யுண்டாகுமாறு வரங்கொடுத்து, மேலும் நினைத்த பொருள்களெல்லாம் அந்நிதிகளிலே பெருகும்படிக்கும் அனுக்கிரகஞ் செய்து, புஷ்பக விமானத்தையுங் கொடுத்துப் போயினார். அதன்மேல் அவன் தன் தந்தையாகிய விச்சிரவாவிடம் சென்று வணங்கித் தான் பிரமதேவரிடம் வரம்பெற்ற விதத்தைக் கூறி மேலும் அவனை நோக்கி, "தந்தையே! நான் வாசஞ் செய்வதற்குத் தகுதியான ஓரிடத்தை எனக்குத் தெரிவிக்கவேண்டும்" என்றான். அதற்கு விச்சிரவா, முன்னே இராக்ஷதர்கள் விட்டோடிய இலங்கையே தக்கதென்று கூறினான். வைச்சிரவணன் தன்னுடைய வமிசத்தாருடனே இலங்கையில் குடியேறி அதனைப் புதுக்கிக் குபேரன் என்னும் பெயருடன் சகல சிறப்புக்களும் பெற்று அந்நகரத்தில் வாழ்ந்துகொண்டிருந்தான்.

அத்தியாயம்—2

இராவணன் முதலியோர் உற்பவம்.

இவ்வாறு குபேரன் இலங்கையிலிருந்து அரசு புரிந்துவருங் காலத்தில், முன்னே அவ்விலங்கையை விட்டுப் பாதாளலோகத்திற் போய் மறைந்திருந்த மாலியவானும் சுமாலியும், "நாம் எத்தனை காலம் வரை தான் இப்படித் துன்பத்தை அனுபவித்துக்கொண் டிருப்போம்; சுகப்படுதற்கு ஏதேனுமொரு மார்க்கத்தைத் தேடவேண்டுமே" என்று ஆலோசிக்கத் தொடங்கினர்கள். அப்போது மாலியவான் சுமாலியை நோக்கி, "தம்பி! உன்னுடைய மூத்தபெண் கேகசி உத்தம லக்ஷணங்களை யுடையவளா யிருக்கிருள்; அவளை ஒரு சிறந்த புருஷனுக்குக் கொடுத்து நம்மரபை விருத்திசெய்து கொண்டால் நாம் சிறப்படையலாம்" என்று சொன்னன். சுமாலி அதற்கிசைந்து கேகசியுடன் பூலோகத்திற்கு வந்து இங்கே சஞ்சரித்துக் கொண் டிருந்தான்.

அப்போது குபேரன் புஷ்பக விமானத்திலேறிக் கொண்டு சிவபெருமானைத் தரிசித்து வருவதற்கு அந்தச் சுமாலியிருக்கு மிடத்திற்கு நேரே சென்றுன். சுமாலி குபேரனைக் கண்டதும் பொறாமைகொண்டு தன் குமாரத்தியை நோக்கி, "மகளே! இந்தக் குபேரன் நம்முடைய இலங்கையிற் புகுந்து ஐசுவரியங்களையெல்லாம் அனுபவித்துக்கொண் டிருக்கின்றுன்; இவனைப் போக்கி இலங்கையை நாம் கைப்பற்ற முயற்சி செய்யவேண்டும்; இந்தக் குபேரனுடைய தந்தையாகிய விச்சிரவா வென்பவருடைய தபோமகிமை

யினாலேயே இவனுக்கிவ்வளவு சிறப்புண்டா யிருக்கின்றது ; ஆதலின் நீ அந்த விச்சிரவாவிடம் சென்று அவருடைய தயவைப்பெற்று அவருக்கு மனைவியாகிச் சந்ததிகளை விருத்தி செய்தால் நாம் இந்தக் குபேரன் முதலியவர்களை வென்று சிறப்படையலாம்" என்று சொன்னான்.

அவள் அதற்கிசைந்து தன்னை அலங்கரித்துக் கொண்டு விச்சிரவாவிருக்கும் ஆச்சிரமத்திற் கருகில் சென்று அவர் கண்ணுக்கெதிரில் உலாவினாள். விச்சிரவா அவளைக் கண்டவுடன் அவள்மீது அன்புடையவராய் "பெண்ணே! நீ யார்? இங்கே வந்த காரணமென்ன?" என்று வினவினார். கேகசி அவரிடம் தன்னுடைய வரலாற்றைக்கூறி, "சுவாமி! என்னுடைய நோக்கம் தங்களுக்குத் தெரிந்தே யிருக்கும்" என்று சொன்னாள். விச்சிரவா அவள் சந்ததி விருத்தியைக் கருதித் தம்மை மணஞ்செய்துகொள்ள வந்திருக்கின்றாளென்பதைத் தெரிந்துகொண்டு, அவளை நோக்கி, "பெண்ணே! உன்னுடைய எண்ணத்தை நான் தெரிந்து கொண்டேன் ; இப்பொழுது நீ என்னை மணம் புரிந்துகொண்டால் உனக்குத் துஷ்டப்பிள்ளைகளே பிறப்பார்கள்" என்றார். அதற்குக் கேகசி, "உமக்குப் பிறக்கும் பிள்ளைகள் உம்மைப்போல சிறப்புடையவர்களாக இருந்தாலல்லவோ மேன்மை யுண்டாகும் ; துஷ்டப்பிள்ளைகள் உண்டானால் மேன்மையாகுமோ ?" என்று கூறினாள். அப்போது விச்சிரவா, "துஷ்டப்பிள்ளைகள் பிறந்தாலும் அவர்களில் இளையவன் யோக்கியனா யிருப்பான்; அவனால் நமக்குச் சிறப்புண்டாகும்" என்று சொல்லி அப்பொழுதே

அவளை மணந்துகொண்டார். பின்னர் அவளிடத்தே பத்துத்தலைகளும், இருபது கைகளுமுடைய தசகண்டன் என்னும் இராவணனும், நீலகிரிபோன்ற சரீரமும், நெருப்புச்சிகையும், வக்கிரதந்தங்களு முடைய கும்பகர்ணனும், விகார சொரூபமுடைய சூர்ப்பனகையும், நற்குணமுடைய விபீஷணனும் பிறந்தார்கள்.

அவர்களுள் புத்திரர்கள் மூவரும் விருத்தியடைந்து தந்தையினிடத்திலே சகல வித்தைகளையுங் கற்று மிகுந்த பராக்கிரமசாலிகளாய் விளங்கினார்கள். அவர்களுள் முதலிருவரும் கொடியர்களாய் முனிவர்களுக்கும் மற்றவர்களுக்கும் துன்பத்தைச் செய்துகொண் டிருந்தார்கள். இளையவன் பிதாவுக்குப் பணிவிடை செய்துகொண்டு சகலரும் கொண்டாடத் தக்க யோக்கியனா யிருந்தான். சூர்ப்பனகையோ மகா துர்க்குணமுடையவளாய் எதிர்ப்பட்ட முனிவர்களையும் மற்றவர்களையும வருத்தி அவர்களுடைய தவங்களைக் கெடுத்துக்கொண்டு திரிந்தாள்.

இப்படி யிருக்கும்போது ஒரு சமயம் எல்லோரும் விச்சிரவாவின் ஆச்சிரமத்திற் கூடியிருந்தார்கள். அப்போது கேகசி, இராவணன் முதலியவர்களை நோக்கி, "பிள்ளைகளே! உங்கள் தாயாதியாகிய குபேரனே தன் தவமகிமையினால் உங்களுடைய பாட்டன்மாரின் இலங்கையைக் கைப்பற்றிக்கொண்டு சகல சிறப்புக்களுடன் வாழுகிறான்; நீங்களோ ஒரு சிறப்புமில்லாமல் வனத்தில் சஞ்சரிக்கிறீர்கள்" என்று சொன்னாள். இதைக் கேட்டவுடனே அந்தப் பிள்ளைகள் மூவரும் தாயைநோக்கி, "அம்மா! நாங்களும் தவஞ்செய்து சிறப்படைந்து உன்னுடைய மனக்குறை

களைத் தீர்க்கின்றோம்" என்று சொல்லி அவளிடம் விடை பெற்றுக்கொண்டு போய்த் தபோவனஞ் சேர்ந்து தவஞ்செய்யத் தொடங்கினார்கள். அவர் களில் கும்பகர்ணன் பஞ்சாக்கினி மத்தியிலிருந்தும், மழையிலும் பனியிலும் நனைந்தும், ஜலத்தில் மூழ்கி யும் ஆகாரமும் நித்திரையுமின்றிப் பிரமதேவனை நோக்கிப் பதினாயிரம் வருஷம் தவஞ்செய்தான்.

விபீஷணன் ஊசியை நிறுத்தி அதன்மேல் ஒரு காற் பெருவிரலை யூன்றி மற்றொருகாலை முடக்கிக் கொண்டண்ணாந்து நின்றபடி கைகளை மேலே தூக்கிக் குவித்துக் கண்களிமையாமற் சூரியனைப்பார்த்து ஐயா யிரம் வருஷமும், பின் மடித்த காலையூன்றி, ஊன்றிய காலை முடக்கி மேற்கூறிய செய்கைகளைச் செய்து ஐயாயிரம் வருஷமும் ஆகப்பதினாயிரம் வருஷம் நான் முகனை நோக்கித் தவஞ்செய்தான்.

மூத்தவனாகிய இராவணன் வேதவிதிப்படி யாக சாலை அமைத்து, அதனடுவில் ஓமகுண்டம் ஏற்படுத்தி, அதற்குள் சமித்துக்களை நிறைத்து, அக்கினியை மூட்டி வளர்த்துப் பிரமனைநினைத்து, மந்திரம் ஜெபித்து ஆயிரம் வருஷத்துக்கொரு சிரசுவிகிதம் ஒன்பதினாயிரம் வருஷத்தில் தன்னுடைய ஒன்பது சிரசுகளை அறுத்து அதில் ஆகுதியாகப் பெய்து பதினாயிரம் வருஷம் சென் றபின் மிஞ்சி நின்ற ஒரு சிரசையும் அறுத்து ஆகுதி கொடுக்கப்போனான்.

அத்தருணத்தில் பிரமதேவர் மனதிரங்கி அவன் முன் தோன்றி, "உனக்கென்ன வரம் வேண்டும்?" என்றார். அதற்குத் தசக்கிரீவன், மனிதர்களை யொரு பொருட்டாக வெண்ணமல் தள்ளிவிட்டு, "தேவர்

களும் இராக்ஷதர்களும் என்னுடைய ஏவல்கேட்டு நடக்கும்படியான வல்லமையையும் மூன்றரைக் கோடி ஆயுளையும் நீர் எனக்குத் தரவேண்டும்" என்று கேட்டான். பிரமதேவர் அப்படியே வரங் கொடுத்தார். விஷ்ணு தந்திரத்தால் அந்த இராவண னுடைய ஆயுளை அரைக் கோடியாக மாறும்படி செய்து விட்டார்.

அதன்மேல் பிரமா, விபீஷணனிடம் பிரசன்ன மாகி "உனக்கு வேண்டியது யாது?" என்று வினவி னார். அவன், "நான் பாபகிருத்தியங்களைச் செய்யா திருக்கவும், தேவர்களாலும் ஜெயிக்கப்படாத வெற்றி யைப் பெறவும் நீர் எனக்கு வரந்தரவேண்டும்" என் றான். நான்முகக் கடவுள் அவ்வாறே அவனுக்கும் வரத்தைக்கொடுத்து அவன் எப்பொழுதும் சிரஞ் சீவியா யிருக்கும்படிக்கும் அனுக்கிரகம் பண்ணிக் கும்பகர்ணனுக்கு வரங்கொடுக்கப் போனார்.

அப்போது தேவர்கள், 'கும்பகர்ணன் பிரமதேவ ரிடம் வரம் பெற்றால் நம்மை ஒழித்துவிடுவான்' என்று பயந்து பிரமதேவரை நோக்கி, "நீர் கும்பகர்ணனுக்கு வரங்கொடுத்தால் நாங்கள் ஒழிந்துபோவோம்" என்று வருந்தினார்கள். அப்போது நான்முகர், 'உங்களுக்குத் துன்பம் வராத ஒருபாயத்தை நான் செய்கின்றேன்' என்று தேவர்களுக்குச் சொல்லிவிட்டுச் சரஸ்வதியை நோக்கி, "கும்பகர்ணன் வரங்கேட்கும்போது நீ அவ னுடைய வாக்கிலிருந்து வார்த்தையைப் புரட்டி அவன் எண்ணத்திற்கு மாறுபாடுண்டாகும்படி செய்து விடு" என்று கூறிப் பின்னர்க் கும்பகர்ணனிடம் சென்று, "உனக்கு வேண்டிய வரத்தைக் கேள், நாம்

தருகிறோம்" என்றார். கும்பகர்ணன் தான் என்று மழியாதிருக்கும்படியான வரத்தைப் பெறக் கருதி, 'எனக்கு நீர் நித்தியதத்துவம் தரவேண்டும்' என்று சொன்னான். அப்போது சரஸ்வதி தன் நாயகன் கூறியிருந்தபடியே கும்பகர்ணனுடைய நாவிலிருந்து அவன் கூறிய 'நித்தியதத்துவம்' என்ற வார்த்தையை 'நித்திராதத்துவம்' என்று வெளிப்படும்படி புரட்டி விட்டாள். அப்போது பிரமதேவர், 'உன்னுடைய வார்த்தைப்படியே அத்தத்துவம் ஆகக்கடவது'என்று கும்பகர்ணனுக்கு வரங்கொடுத்துப் போய்விட்டார்.

அந்த மாறுபாடான வரத்தால் கும்பகர்ணனுக்கு அப்பொழுதே சோம்பலும் நித்திரையும் உண்டாய் விட்டன. உடனே அவன், 'இது தேவர்கள் செய்த வஞ்சனையா லுண்டானது' என்றுணர்ந்து விசனித்து, இராவணனிடத்தும் விபீஷணனிடத்தும் தான்பெற்ற மாறுபாடான வரத்தின் விவரத்தைக் கூறித் துக்கப் பட்டான். அவர்கள் அவனுக்குத் தேறுதல் கூறி, அவனை அழைத்துக்கொண்டுபோய் முன்னே வசித் திருந்த வனத்தில் தங்கி யிருந்தார்கள்.

அத்தியாயம்—3.

இராவணன் இலங்கை புகுதல்.

அப்படி யிருக்கும்போது பாதாள லோகத்தி லிருந்த மாலியவான், தன் தம்பி சுமாலியின் முயற்சி யால் கேகசிக்கு இராவணன் முதலியவர்கள் பிறந்து வரம் பெற்றிருப்பதைத் தூதுவரால் உணர்ந்து மகிழ்ந்து உடனே புறப்பட்டு வந்து இராவணன்

முதலியவர்களைக் கண்டு புகழ்ந்து அவர்களுடன் கூடி யிருந்தான். அப்போது சுமாலி இராவணனிடத்தில், குபேரனுண்டுகொண் டிருக்கும் இலங்கை தங்க ளுடையதென்றும், அதைக் கைப்பற்றிக்கொள்ள வேண்டுமென்றும் சொன்னான். அதற்கு இராவணன், "குபேரனே எனக்குத் தமையனு யிருக்கின்றான்; ஆதலின் அவனிடமிருக்கும் அரசாட்சியை நாம் கைப் பற்ற நினைப்பது தர்மமாகாது" என்றான்.

அப்போது அவனுடைய மாமனாகிய பிரகஸ்தன் அவனை நோக்கி, "நீ நினைக்கிறபடி குபேரன் நினைத் தானு? உன்னுடைய பாட்டன்மாருடைய இலங்கை யை அவன் கைப்பற்றியிருத்தல் நீதியாகுமா? எப் பொழுதும் பங்காளிகளில் ஒருவரையொருவர் கெடுக் கவே நினைப்பார்கள்; உங்கள் தாயாதிகளாகிய தேவர் கள் உங்கள் வர்க்கத்தாருக்கு இடைஞ்சல் செய்துவரு வதை நீ பார்த்துக்கொண்டு தானே யிருக்கின்றாய்; ஆதலால் தாயாதிகளை மீறவிடாதிருத்தலே நல்ல தாகும்" என்று மித்திரபேதமான வார்த்தைகளைச் சொன்னான்.

அவற்றைக் கேட்டவுடனே இராவணனுக்குக் கெட்டவழியில் புத்தி திரும்பிவிட்டது. அதனால் அவன் பிரகஸ்தனை நோக்கி, "நீயே குபேரனிடம் தூதனுகச் சென்று, 'இலங்கையை விட்டுவிடுகின் றாயா? அல்லது சண்டைக்கு வருகின்றாயா?' என்று கேட்டுவா" என்று சொன்னான். அவன் அப் பொழுதே குபேரனிடம் சென்று இராவணன் கூறிய வற்றைத் தெரிவித்தான். குபேரன் 'இராவணனோடு சண்டை செய்வது தகுதியல்லவென்று நினைத்துப்

பிரகஸ்தனிடம், "இலங்கையை இராவணனுக்கே விட்டுவிடுகிறேன்" என்று சொல்லி அவனை அனுப்பி விட்டுத் தன் பிதாவாகிய விச்சிரவாவிடம் சென்று இராவணன் தூதனுப்பியதையும், அதற்குத் தான் மறுமொழி கூறியதையும் சொன்னான். அவர், "அப்பா! நீ இலங்கையை இராவணனுக்கு விட்டு விட்டு இமயகிரிக்குப் போய்த் தவஞ்செய்; இன்னும் மேன்மையடைவாய்" என்று சொன்னார். குபேரன் அவர் சொற்படியே சென்று தவஞ்செய்துகொண் டிருந்தான். இராவணன் தன் பந்துக்களுடனே சென்று இலங்காபட்டணத்திற் குடியேறி மகுடாபி ஷேகம் செய்துகொண்டு அரசு புரிந்திருந்தான்.

அத்தியாயம்—4.

இராவணுதியர் சந்ததிகளைப் பெறல்.

அப்படி இராவணன் அரசுபுரிந்து வருங்காலத் தில் சூர்ப்பணகியின்மேல் விருப்பங்கொண்ட வித்துச் சிங்கனென்னும் இராக்ஷதனுக்கு அவளை விவாகஞ் செய்து கொடுத்து மகிழ்ச்சி யுற்றிருந்தான். அப் போது ஒருநாள் அந்த இராவணன் வேட்டையாடும் பொருட்டு வனத்திற்குச் சென்றான். அத்தருணம் மயன் தன் மகள் மண்டோதரியை எவரினும் மேம் பட்டவோர் புருஷனுக்கு மணஞ்செய்து கொடுக்க வேண்டு மென்று கருதி அவளையும் அழைத்துக் கொண்டு அவ்வனத்தின் வழியாக வந்தான். இராவ ணன் அவர்களைக்கண்டு, "நீங்கள் யாவர் ?" என்று வினவினான்.

அப்போது மயன் இராவணனைப் பார்த்து, "இவன் சிறந்த புருஷனாக விளங்குகிறான்; இவன் குல முறையை விசாரித்துக்கொண்டு இவனுக்கே நம் புதல்வியைக் கொடுத்து விடலாம்" என்று தீர்மானித்து அவனிடத்தில், "ஐயா! நான் மயன்; தரிசனை யென்னும் பெண்ணைத் தேவர்கள் எனக்கு விவாகஞ் செய்து கொடுத்தார்கள்; ஐந்நூறுவருஷம் சென்று எனக்கு மண்டோதரி யென்னும் ஒரு புத்திரியும், மாயன், துந்துபி என்ற இரண்டு புத்திரரும் பிறந்தார்கள்; என் புத்திரி குணத்திலும் அழகிலும் சிறந்தவள்; ஆதலின் அவளை நான் ஒரு சிறந்த புருஷனுக்கு மணஞ் செய்து கொடுக்க நாடி யிருக்கின்றேன்; இப்போது உம்மைப் பார்த்தவுடன் உமக்கே அவளைக் கொடுக்கலா மென்ற எண்ணம் எனக்குண்டாயிருக்கிறது; ஆதலால் உம்முடைய குல முறையைச் சொல்லும்" என்றான்.

அதற்கு இராவணன், தான் பிரமாவின் மரபில் உதித்தவனென்னும் விவரத்தைக் கூறினான். அதைக் கேட்டு மயன் மகிழ்ந்து அந்த வனத்தில்தானே தன் மகள் மண்டோதரியை அவனுக்கு மணஞ்செய்து கொடுத்துச் சீதன வரிசைகளையும், ஒரு சிறந்த வேலாயுதத்தையும் கொடுத்துவிட்டுப் போனான். அதன்மேல் இராவணன் மண்டோதரியுடன் இலங்கையில்வாழ்ந்து மகிழ்ந்திருந்தான். பின்னர் அவன் அசுரகுலத்திற் பிறந்த வயிரோசனன் மகளாகிய வச்சிரச்சுவாலை யென்பவளைக் கும்பகர்ணனுக்கும், கந்தருவகுலப்பெண்ணாகிய சரமை யென்பவளை விபீஷணனுக்கும் மணஞ் செய்து வைத்தான்.

இப்படி அவர்கள் மூவரும் மணஞ்செய்து மகிழ்ந்திருக்குங் காலத்தில், இராவணன், மேலும், தானிய

மாலி யென்னும் ஒரு பெண்ணை மணந்துகொண்டதோடு பல அபிமான தாரங்களையும் சேர்த்துக் கொண்டான். அவர்களுள் மண்டோதரி இந்திரஜித்து, அக்ஷயகுமாரன் என்பவர்களைப் பெற்ருள்; தானியமாலி அதிகாயனைப் பெற்ருள்; மேலும் இராவணனுக்கு அவனுடைய மனைவியரிடத்தில் தேவாந்தகன், நராந்தகன், திரிசிராஎன்னும் மூன்று பிள்ளைகள் பிறந்தார்கள். கும்பகர்ணனுக்கு கும்பன், நிகும்பன் என்னும் இரண்டு பிள்ளைகள் பிறந்தார்கள். விபீஷணனுக்குத் திரிசடை பிறந்தாள். இப்படிச் சந்ததிகள் தோன்றியபின் இராவணன் முதலியவர்கள் முன்னிலும் மிக்க பலசாலிகளாய்த் தேவர்களையும், மானிடர்களையும் வருத்தி அதிகாரஞ் செய்துகொண் டிருந்தார்கள்.

அத்தியாயம்—5

இராவணன் திக்கு விஜயம்.

அப்படி யிருக்குங் காலத்தில் இராவணன் புத்திரர்களாலும், பந்துக்களாலும் தான் பலங்கொண்டிருப்பதால் அகங்காரங்கொண்டு தேவர்கள் முதல் சகலரையும் அடக்கியாள நினைத்து ஒருநாள் சபா மண்டபத்தில் தன் புத்திரர்களும் மற்றவர்களும் சூழ விருந்து தன்னுடைய அபிப்பிராயத்தை அங்குக் கூடி யிருந்தவர்களிடம் கூறினான். அதைக்கேட்டு இந்திரஜித்து, 'தேவர்களை ஜெயிப்பதற்கு நாஞெருவனிருக்கும்போது அதைப்பற்றிக் கவலை யெதற்கு?' என்று வீரம் பேசினான்.

அப்போது கும்பகர்ணனுக்குத் தான் பெற்ற வரத்தின்படி நித்திரை வந்துவிட்டதால் அவன் யுத்தத்

தைப்பற்றி ஒன்றும் பேசுவதற்கு முடியாமல் இராவணனை நோக்கி, "அண்ணா! எனக்கேற்பட்ட விதியினால் நித்திரை வந்துவிட்டது; என்னாலிப்போதொன்றும் செய்யமுடியாது; எனக்கு நித்திரை செய்வதற்குச் சுரங்கமொன் றமைத்துத் தரவேண்டும்; மற்றகாரியங்களைப் பின்னால் பார்த்துக்கொள்ளலாம்" என்றான்.

உடனே இராவணன் மயனை வரவழைத்து அவனைக்கொண்டு முக்காதவழி அகலமும், ஆறுகாதவழி நீளமும் உள்ளதாகச் சுரங்கமொன்றமைத்து அதில் பொன்னாலும் இரத்தினங்களாலும் மாளிகை கட்டிப் படுக்கையறை யேற்படுத்தி அழகிய பஞ்சணையிட்டுப் பொன்விளக்கேற்றி வாசனையோடு தென்றல் வீசத்தக்க சாளரங்களமைத்து, தூக்கத்தில் அங்கேவந்து எதிரிகள் இடையூறு செய்யாதிருக்கும்படி கடின காவல்களையு மேற்படுத்திக் கும்பகர்ணனுக்கு அந்தச் சுரங்கத்தைக் காட்டினான். அவன் அதைப்பார்த்து மகிழ்ந்தான்.

அதன்மேல் தசக்கிரீவன் கட்டளைப்படி மடையர்கள் அறுநூறு வண்டிகள் நிறைந்த சாதத்தைக் கொண்டுவந்து கும்பகர்ணனுக்கு முன்னே கொட்டித் தாகசாந்திக்குப் பதினாயிரம் சாடிகள் நிறைந்த மதுவையும் வைத்தார்கள். கும்பகர்ணன் அவற்றை யெல்லாம் நொடிக்குள் உட்கொண்டு அச்சுரங்கத்தில் புகுந்து பஞ்சணையில் படுத்துறங்கினான். அவன் கண்ணில் உற்பத்தியாகும் பீளைகள் மலைபோற் குவிந்து கொண் டிருந்தன; வாயில் வடியும் சொள் அருவி போல் ஒழுகிக்கொண்டிருந்தது; அவனுடைய பெருஞ்

சுவாசத்திலகப்பட்டு அநேகம் பிராணிகள் இறந்து கொண்டிருந்தன; அவன் நித்திரைக்கு ஏற்பட்டகாலம் முடிந்தபின் அத்தூக்கம் நீங்குவதா யிருந்ததேயன்றி மத்தியில் எவ்வகைக் காரணத்தைக் கொண்டும் கலைவ தாயில்லை. அவனுக்குக் காற்றுவேண்டிய போது இராக்ஷதர்கள் மலைகளைப்பிடுங்கி விசிறியாகக் கொண்டு விசிறிக்கொண் டிருந்தார்கள்.

இப்படிக் கும்பகர்ணன் நித்திரை செய்யும் போது இராவணன் மந்திரிகளை நோக்கி, "கும்பகர் ணன் நித்திரை போய்விட்டபடியால் இனி நாம்தாம் தேவர் முதலியவரோடு போருக் கெழவேண்டும்; அதற்கு நீங்கள் என்ன யோசனை சொல்லுகிறீர்கள்?" என்று கேட்டான். அவர்கள் 'உடனே போருக் கெழலாம்,' என்றார்கள்.

பிரகஸ்தன் மாத்திரம் முன்னே போர் செய்யத் தூண்டினனெனினும் தான் முறகாலத்தில் தேவர்க ளால் அடைந்த அவஸ்தையை நினைத்து அப்போது பயந்து இராவணனிடத்தில், தானும் மாலியவான் முத லியவர்களும் முன்னே விஷ்ணுவினால் அடைந்த துன் பங்களைச் சொல்லி "இப்போது நாம் தேவர்களுடன் யுத்தத்திற்கெழுந்தால் அந்த விஷ்ணுவே சண்டைக்கு வருவார்; அவரை ஜெயிக்க நம்மால் முடியாது; ஆத லின், யுத்த விஷயத்தை யோசித்துத்தான் செய்ய வேண்டும்" என்றான்.

இராவணன் அதைக்கேட்டு, "அந்தக் கிழவர்கள் தோற்றுப்போனதால் நானும் கேவலமாகிய விஷ்ணு வுக்குத் தோற்பேனா? என்னுடைய வரங்களும் பலங் களும் சாமானியமானவைகளா? எவர்களாலும் என்னை

ஜெயித்தல் முடியாது ; நான் தேவர்களை ஒடுக்கிவிடுவேன்; நீ பயப்படவேண்டாம்" என்று சொன்னான். அதன்மேல் பிரகஸ்தனும் யுத்தத்திற்குச் சம்மதித்தான்.

இராவணன் தேவரை ஜெயித்தல்.

உடனே இராவணன் முனிவர்களைப் பிடித்து வருத்தும்படி தன் சேனைகளுக்கு ஆக்ஞாபித்து விட்டுத் தான் புஷ்பக விமானத்திலேறித் தேவர்களை வருத்துதற்கு இந்திரஜித்து முதலியவர்களுடன் புறப்பட்டுப் போனான். இராக்ஷதர்கள் சென்று வனங்களிற் புகுந்து சில முனிவர்களை எடுத்து விழுங்கியும், சிலரை ஆயுதங்களாற் குத்திக் கொன்றும், சிலரைப் பூமியில் தேய்த்தும் பலவிதமாக இருடியர்களை ஹிம்சைப் படுத்தினார்கள். உயிர் தப்பிய முனிவர்கள் பயந்து பற்பல விடங்களில் ஓடி ஒளித்தார்கள்.

தேவலோகம் சென்ற இராவணனோ, தேவர்களை ஆயுதங்களால் வெட்டியும், குத்தியும், கால்களால் நசுக்கியும் பலவாறு துன்பப்படுத்தினான். அப்போது தேவர்களிற் பலர் இராவணனைப் பணிந்து சமாதானப் படுத்திக்கொண்டார்கள். சிலர் ஓடி ஒளித்தார்கள். அப்போது பிரகஸ்தன், 'தேவர்களோ நமக்குப் பயந்து வருந்துகிறார்கள்; அவர்களை இனித் துன்புறுத்துவது தகுதியன்று' என்று இராவணனிடம் கூறினான். மகோதரனும் அவனை நோக்கி, "இலங்காதிபரே! பிரகஸ்தன் சொல்வது சரிதான்; இளைத்த தேவர்களோடு நாம் போர்புரிவதால் நமக்குச் சிறப்பில்லை ; இனி நமக்குச் சரியானவர்களோடு நாம் யுத்தம் புரிய

வேண்டும்; குபேரனே தவஞ்செய்து சிவனுக்குத் தோழனாய்க் கைலையங்கிரிச்சாரலில் மந்தாகினி தீரத்தில் அளகையென்னும் நகரத்தை யுண்டாக்கிக் கொண்டு சிறப்புடன் வாழுகின்றான்; நாம் அவனுடன் போருக்கெழுவோம்; அவனுடைய நந்தவனமொன்று மகா சிறப்புடையதா யிருக்கின்றது; முதலில் நாம் அதை யழித்துவிட்டால் அப்பால் அவன் யுத்தத்திற்கு வருவான்; அப்போது அவனையும் ஒரு கை பார்க்கலாம்" என்றான்.

குபேரன் நந்தவன மழிதல்.

இராவணன், மகோதரன் சொற்படியே குபேரனுடைய நந்தவனத்திற்குச் சமீபத்தில் போயிறங்கிப் படைகளுடன் அதற்குள் புகுந்து அங்கிருந்த பாரிசாத விருக்ஷம், ஐந்தருக்கள், அழகிய செடி கொடிகள் முதலியவற்றை யெல்லாம் பிடுங்கி யெறிந்து, மற்ற விருக்ஷங்களை யெல்லாம் எடுத்துக் குபேரன் பட்டணத் தெருக்களில் வீழும்படி எறிந்து அந்த நந்தவனத்தைப் பாழாக்கிவிட்டு வெற்றிச் சங்கத்தை முழக்கி இலங்கை போய்ச் சேர்ந்தான்.

அதன்மேல் குபேரன், தன் நந்தவன மழிந்ததை யறிந்து, அதைத்தன் உயிரினுஞ் சிறந்ததாகக் கருதி யிருந்தானாதலின், அஃதழிந்ததற்கு மனம் வருந்தி, "ஐயோ! அந்தப் பாவி இராவணனுக்கு நாம் யாதொரு தீங்கும் செய்யாதிருக்க, அவன் ஏன் இவ்வாறு நம்முடைய நந்தவனத்தை யழித்தான்? அவன் இலங்கையைக் கேட்டபோதும் தடையின்றி அதனை அவனுக்கு நான் விட்டுவிட்டேன்; இன்னும் அவனை நான் தம்பி

யென்று நினைத்து அவனுக்கு இதத்தையே செய்து வந்திருக்கிறேன்; நான் அவனைச் சொந்தமாகப் பாவித்தாலும் அவன் எனக்குத் தீங்கே செய்து வருகின்ருன்; இனியும் நாம் சும்மாவிருக்கக் கூடாது; நீதியோடு நடக்கும்படி அவனுக்குத் தெரிவிப்போம். அதன்படி அவன் நடந்தால் பேசாதிருப்போம். இல்லையெனில் யுத்தஞ்செய்து அவனை யொடுக்குவோம்" என்று சிந்தித்து ஒரு தூதவனை யழைத்து, "நீ இராவண னிடம் சென்று, அவன் தேவர்களுக்கும் எனக்கும் இடைஞ்சல்செய்து வருவது தகாதென்றும், நீதி தவறி நடந்தால் கெடுதி சம்பவிக்கு மென்றும், அவனுக்கு நான் தமையனுதலின் உரிமை பாராட்டி இவற்றைக் கூறினே னென்றும் சொல்லிவா" என்று கூறி யனுப்பினுன்.

குபேரனுடைய நந்தவனத்தை யழித்துச்சென்ற இராவணன் அகங்காரமும் சந்தோஷமுங் கொண்டு கொலுக்கூடத் தமர்ந்து தனக்கு யுத்திசொன்ன மகோதரனைக் கொண்டாடி மேலும் அவனைப்பார்த்து, "நாம் தேவர்களையும் குபேரனையும் ஒடுக்கிவிட்டோம்; இனி நமக்கு நிகர் எவருமில்லை. என் பாட்டன் மாலியவான் முதலியவர்களை விஷ்ணு வென்றதாக இவர்கள் சொல்லிக் கொள்ளுகிருர்கள்; இந்தக் கிழவர்கள் வலிமையற்றவர்க ளாதலின் அவனுக்குத்தோற்ருர்கள்; அவன் நம்மெதிர் நிற்கமாட்டுவானே?" என்று தற்பெருமை பேசினுன்.

விஷ்ணுவென்ற பெயரைக் கேட்டமாத்திரத்திலேயே மாலியவான் பழைய பயத்தால் திடுக்கிட்டு மயங்கி வீழ்ந்தான். இராவணன், "இந்தக் கிழவ

னுடைய தைரியம் நன்ருயிருக்கிறது" என்று சிரித்து அவனுடைய மயக்கத்தைத் தீர்த்தான். அதன்மேல் மாலியவானும் சுமாலியும் ஆதியில் தாங்கள் விஷ்ணுவால் அடைந்த துன்பத்தையும், அவருடைய வல்லமையையும் இராவணனுக்கு விரிவாகக் கூறி "அவருடைய பகையையும், தேவர்களுடைய விரோதத்தையும், குபேரனுடைய மனஸ்தாபத்தையும் தேடிக் கொள்ளுதல் தகுதியன்று" என்று புத்தி கூறினர்கள்.

இராவணன் சிரித்து அவர்களை இழிவாகப் பேசிவிட்டு மகோதரனையும் பிரகஸ்தனையும் நோக்கி, "இந்தக் கிழட்டுச் சவங்களின் வார்த்தை நமக்குத் தேவையில்லை; இனி, மேல் நடக்கவேண்டிய காரியங்களைப் பற்றி நீங்கள் யோசித்துச் சொல்லுங்கள்" என்று சொல்லி அவர்களைக் கொண்டாடினன். மாலியவானும் சுமாலியும் அவன் பேச்சுப் பிடிக்காதவர்களாய்க் கொலுக் கூடத்தை விட் டெழுந்து போய்விட்டார்கள்.

குபேரன் சண்டை.

அத்தருணத்தில் குபேரனுடைய தூதன் வந்து அவன் சொல்லி யனுப்பியவற்றை யெல்லாம் இராவணனிடம் கூறினன். தசக்கிரீவன் அவற்றைக் கேட்டவுடனே கடுஞ்சின மடைந்து அத் தூதனை நோக்கி, "அந்தக் குபேரனு எனக்குப் புத்தி கூறுகிறவன்! அவன் அவற்றைச் சொன்னலும் நீ என்னிடம் வந்து அஞ்சாமற் சொல்லலாமா?" என்று கிங்கரர்களிடம் அவனை ஒப்பித்துவிட்டு, மகோதரன் முதலிய மந்திரிகளை நோக்கி, "நம்மிடம் அஞ்சாமற் பேசிய

இத்தூதனை என்ன செய்யலாம்?" என்று கேட்டான். அவர்கள் அவன் துர்ப்புத்திக் கிசைந்தபடி 'இவனைக் கொன்று விடுவதே தக்கது' என்றார்கள். உடனே இராவணன் அத்தூதனை வெட்டி இராக்ஷத கிங்கரர் களுக்குத் தின்னக் கொடுத்துவிட்டான்.

அதன்மேல் இராவணன் மந்திரிகளை நோக்கி, "இனிக் குபேரனோடு போர்புரியப் போவதுதானே தக்கது ?"என்று வினவினான். அப்போது பிரகஸ்தன், "குபேரன் குற்றமற்றவனும் பொறுமையுடையவ னுமிருக்கிறான்; அவன் விஷயத்தில் நீ நடந்துகொண் டது அக்கிரமம்; தருமந்தவறித் தூதனையும் வெட்டி விட்டாய்; குபேரன் இனிச் சகித்திருக்க மாட்டான்; அவனோ வரத்திலும் பலத்திலும் சிறந்தவன்; ஆதலின், சற்று யோசித்துத்தான் அவனுடன் போருக்கெழ வேண்டும்" என்று சொல்லிவிட்டுப் பேசாமலிருந் தான். மகோதரன், "சண்டைசெய்து குபேரனையும் தேவர்கள் முதலிய மற்றவர்களையும் வென்று திக்கு விஜயம் செய்து எங்கும் ஜெயக்கொடியை நாட்டுவதே சிறந்ததாகும்" என்று இராவணனுக்குச் சொன்னான். உடனே இராவணன் படைகளுடனே சென்று அளகா புரியை அடுத்து யுத்தத்திற்கு ஆயத்தமாய்நின்று ஆர்ப்பரித்தான்.

சில தூதர்கள், இராவணன் குபேரனுடைய தூதனை வெட்டி விட்டு யுத்தத்திற்கு வந்திருப்பதைக் குபேரனிடம் தெரிவித்தார்கள். குபேரன், "அந்த இராவணன் நம் நந்தவனத்தை அழித்ததுமல்லாமல் தூதனையும் வெட்டி விட்டு மேலும் யுத்தத்திற்கு வந்தான்; இனியும் அவனைச் சும்மா விடலாமோ?"

என்று தன் மந்திரிகளிடம் கூறினன். அதைக்கேட்டு முதல் மந்திரியாகிய மணிமாலன், "நீர் முந்தியே அவன் மனம்போல் நடந்ததால் அவன் மீறிவிட்டான்; இனி அவனை அடக்கிவிடுதலே தகுதியான காரியம்" என்றான்.

உடனே குபேரன் யுத்தத்திற்குப் புறப்பட்டான். இராவணனும் குபேரனும் எதிர்த்து யுத்தஞ்செய்ய ஆரம்பித்தார்கள். இரண்டு பக்கத்துப் படைகளும் எதிர்த்தன. யுத்தம் மும்முரமாக நடந்தது. இரண்டு பக்கத்திலும் அநேகம் படைகள் சேதமாயின. எங்கும் இரத்தவெள்ள மோடிற்று. ஆங்காங்கே பிணங்கள் குவிந்தன. இராவணனைச் சார்ந்த மாரீசன் முதலியவர்கள் குபேரனுடைய மந்திரிகளை எதிர்த்து வருத்தினர்கள். அப்போது குபேரனுடைய முதல் மந்திரியாகிய மணிமாலன் இராக்ஷத மந்திரிகளின்மீது ஆயுதங்களைப் பிரயோகித்து அவர்களைச் சின்னபின்னமாகச் செய்தான். அவர்கள் வீரத்துடன எதிர்த்துச் சிறிது நேரத்தில் அந்த மணிமாலனை இளைக்கச் செய்துவிட்டார்கள். அத்தருணத்தில் மாரீசன் முதலியவர்கள் மணிமாலனுடைய சேனைகளைச் சிதைத்து விட்டார்கள். அதன்மேல் இராவணன் குபேரனுக்கு முன்னே சென்று வீர வார்த்தைகளைப் பேசினன். குபேரனும் வீரமொழிகளைக் கூறி இராவணன்மீது அஸ்திரங்களைப் பிரயோகித்தான். இராவணன் தன்னுடைய பாணங்களால் அவற்றைத் தடுத்து மேலும் பற்பல பாணங்களை யேவிக் குபேரனுடைய தேரையும், சாரதியையும், வில்லையும் ஒழித்துவிட்டான். குபேரன் வேறொரு தேரிலேறி இராவண

னுடைய சேனைகளை யெல்லாம் நாசப்படுத்தினன். இராக்ஷத சேனைகள் பயந்தோடத் தலைப்பட்டன.

அப்போது தசக்கிரீவன் தன்னுடைய சேனைகளுக்குத் தைரியங் கூறிவிட்டுக் குபேரனுடன் கதாயுத்தஞ் செய்யத் தொடங்கினன். குபேரனும் கதையைத் தாங்கி எதிர்த்து இராவணனை மூர்ச்சையடையச் செய்தான். இராவணன் சிறிது நேரத்திற்குள் மூர்ச்சை தெளிந்தெழுந்து மிக்க வீராவேசத்துடன் மலைகளையும் மரங்களையும் பிடுங்கி யெறிந்து குபேரனுடைய சேனைகளையும் பட்டணத்தையும் நாசமாக்கிப் பற்பல ஆயுதங்களால் அவனுடைய மந்திரிகளை மூர்ச்சையாக்கிக் குபேரனையும் அடித்துத் தளர்ச்சி யடையச் செய்து அவனேறி வந்த புஷ்பகவிமானத்தைப் பறித்துக் கொண்டான்.

அதன்மேல் குபேரன் மனமிளைத்து இராவணனை நோக்கி, "அப்பா! இராவணா! அண்ணன் தம்பிகளாகிய நமக்குள் சண்டை எதற்கு? வெற்றி உன்னுடையதாகவே யிருக்கட்டும்" என்று சொல்லிவிட்டு யுத்தஞ் செய்யாமல் நழுவிப் போனன். அப்போதும் இராவணன் அவனைவிடாமல் மறித்து, "நீ எனக்குத் தோற்று விட்டாயா இல்லையா?" என்று கேட்டான். குபேரன், "இவனுடன் வம்பு எதற்காக?" என்று, 'ஆம்; நான்தான் தோற்றேன்' என்றான். அதைக் கேட்டு இராவணன் சிரித்துத் தனக்கேற்பட்ட அகங்காரத்தால் சிவபெருமானையும் எதிர்க்கக்கருதிக் குபேரனை நோக்கி "இனி நீ ஜாக்கிரதையாயிரு; இனி நான், உனக்கு வரங் கொடுத்த சிவனையும் ஒருகை பார்க்கிறேன்" என்று புஷ்பகவிமானத்தில் ஏறிக்கொண்டு தன் படைகளுடன் கைலை நோக்கிப் போயினன.

இராவணன், நந்தியிடம் சாபம் பெறல்.

இராவணனுடைய விமானம் கைலையைச் சமீபித்தபோது அதற்குமேற் செல்ல முடியாமல் நின்றுவிட்டது. அதைக்கண்டு தசக்கிரீவன், 'எவ்விடத்தும் தடையின்றிச் செல்லும் இந்த விமானம் இங்கே தடைப்பட்டு நிற்கவேண்டிய தென்ன?' என்று யோசித்தான். அப்போ தங்கே காவலிருந்த நந்திதேவர் இராவணனுடைய அகங்காரத்தைக் கண்டு சினந்து அவனுக்கு முன்னே போய், "அடா இராவணா! இஃது யாரிருக்குமிடமென்று நீ நினைத்தாய்? எப்பொருட்கு மிறைவராகிய சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் இவ்வெள்ளி மலைமேல் விமானத்தைச் செலுத்த நினைக்கிறாயே; அஃது உன்னால் முடியுமா? உன்னுடைய திக்கு விஜயம் இங்கே செல்லாது; அகங்காரத்தை விடுத்துச் சிவமூர்த்தியை வணங்கிக் கைலையைச் சுற்றிக்கொண்டு அப்பாற்போ" என்று சொன்னார்.

அதைக்கேட்டு இராவணன் கோபித்து, "நந்தீ! எனக்கு விரோதியாகிய குபேரனுக்குச் சிவன் சிநேகிதனாதலால் அவனையும் ஒருகை பார்க்கலா மென்று நான் வந்தேன்; இந்தக் கைலைமேலிருக்கும் சிவனாகிய வெள்ளைக்குரங்கின் தன்மை யென்ன எனக்குத்தெரியாதா? நீ பேசாமற்போ; எதிர்த்துப் பேசினால் நான் உன்மண்டையையும் பிளந்து விடுவேன்" என்று இழிவாகப் பேசினான். நந்திதேவருக்கு மிகுந்த கோபம் வந்து ...டது. அதனால் அவர் அவனை நோக்கி, "அடே ...ா! உனக்குக் கேடுகாலம் சமீபித்தபடியால் நீ சிவ...ருமானையும் மதிக்காமல் பேசினாய்; அவரை நீ

வெள்ளைக்குரங்கென்று சொன்னபடியால் பின்னொரு காலத்தில் பலநிறக் குரங்குகளாலேயே உன்னுடைய குலத்தாருடனே நீ நாசமடைவாய்" என்று சாபமிட்டார்.

இராவணன் கைலையைப் பெயர்த்தல்.

அவ்வாறு நந்திதேவர் சாபங்கொடுத்ததும் இலங்காதிபன் கலங்காமல் கடுஞ்சினங்கொண்டு நந்திதேவரைப் பார்த்து, "உன்னுடைய சாபம் பலிக்குங்காலத்தில் நான் பார்த்துக் கொள்ளுகிறேன்; இப்போது உன்னையும் அந்தச் சிவனையும் இலகுவில்விட்டு நான் போகமாட்டேன்; இந்தக் கைலையை அடியோடு பெயர்த்தெறிந்து என்னுடைய சாமர்த்தியத்தைக் காட்டுகிறேன் பார்" என்று விமானத்தைவிட்டுக் கீழேகுதித்து உதட்டைக் கடித்துக்கொண்டு தன்னுடைய இருபது தோள்களையும் கைலையின் அடிச்சந்திற் புகுத்திக் கைகளால் அதனைப் பெயர்த்து அசைத்தான். அப்பர்வதம் அசைந்த மாத்திரத்தில் அதிலிருந்த தேவர், சித்தர், வித்தியாதரர் முதலியவர்களெல்லாம் நடுங்கி அந்த ஆபத்தைத் தீர்க்கும்படி சிவபெருமானிடம் முறையிட்டார்கள். நந்திதேவர் அவனுக்கு முந்தியே சாபங் கொடுத்துவிட்டபடியால் அதற்குமேல் ஒன்றுஞ் செய்ய முடியாமல் சிந்தை கலங்கி நின்றார். அப்போது சிவபெருமான் அந்த இராவணனை அப்படியே அழுத்தி அவனுடைய அகங்காரத்தை அடக்கிவிட வேண்டுமென்று நினைத்துக் கொண்டு புன்சிரிப்புடன் பேசாமலிருந்தார்.

அப்போது பார்வதி பயந்து சிவபெருமானை நோக்கி, "சுவாமி! இஃதென்ன மலை அசைகின்றதே;

நீர் பேசாமல் வேடிக்கை பார்த்துக்கொண் டிருக்கின் றீரே!" என்று பயத்தால் அவரைக் கட்டிக் கொண்டாள். சிவபெருமான் உமாதேவியை நோக்கி, "பெண்ணே! நீ அஞ்ச வேண்டாம்; நம்முடைய பக்தனாகிய சுகேசன் வழியில் வந்த இராவணன் அகங்காரங்கொண்டு திக்குவிஜயஞ்செய்து நம்மிடத்திலும் தன் வல்லமையைக் காட்ட வேண்டுமென்று சொந்தம் பாராட்டிவந்து இந்த மலையைப் பெயர்த்து ஆட்டுகிறான்; மேலும் இவன் நம்மை மனதிற்குள்ளேயே எப்பொழுதும் பூஜித்துவரும் அந்தரங்க பக்தன்; அந்தப் பக்தியினாலேயே கைலையும் அவனுக்குச் சிறிது அசைந்தது; இல்லாவிடில் இந்த மலையை அசைத்தல் அவனால் முடியுமோ? அவன் விஷ்ணுவின் இராமாவதாரத்தில் அழிந்து போவான்; ஆதலால், அவனை நாம் நாசஞ்செய்யக்கூடாது; அவனுடைய அகங்காரத்தை வேண்டுமானால் கொஞ்சம் அடக்கலாம்" என்று சொல்லித் தம்முடைய ஒரு காற்பெருவிரலாலே கைலையைச் சற்றே அழுத்தினார்.

அவ்வாறு அழுத்திய மாத்திரத்தில் கைலை இராவணனை நசுக்கித் தன்னிலையில் நின்றது. இராவணன் மலையடியில் அகப்பட்டுக்கொண்டதால் இருபதுவிழிகளும் பிதுங்கி முதுகெலும்புகள் ஒடிபட்டுப் பத்து வாய்களாலும் இரத்தங் கக்கிக்கொண்டு கதறினான். அவன் அவ்வாறு கைலையின் அடிப்பாகத்திற்கும் பாதாள லோகத்திற்கு மிடையில் அகப்பட்டு வலியொடுங்கிப் புலம்பித் தான் அகங்காரத்தாற் செய்த காரியத்தைப் பற்றித் தன்னைத்தானே நிந்தித்து 'இனியென் செய்வேன்!' என்று வருந்தி விழித்துப் பெருமூச்சுவிட்டுக் கொண்டிருந்தான்.

அப்போது மாரீசன் முதலானவர்கள் அவனைக் கண்டு வருந்தி, அவன் முகத்தை நோக்கி, "நீ மகோதரன் பேச்சைக் கேட்டு இத்தகைய சங்கடங்களில் வந்து மாட்டிக் கொள்கின்றாய்; இனி இவ்வாபத்தினின்றும் நீங்கவேண்டுமானால் சிவபெருமானைத் துதித்து அவருடைய கிருபையைப் பெற்றுக்கொள்; அவர் சாமவேதகானத்தில் விருப்பமுடையவர்; ஆதலின், நீ சாமவேதகானத்தால் அவரைத் துதி செய்" என்று கூறினார்கள்.

அதன்மேல் இராவணன், "சங்கரா! சம்போ! மகாதேவா! கங்காதரா! அடியேன் அறியாமையாற் செய்த பிழையைப் பொறுத்தருளவேண்டும்" என்று சிவபெருமானைத்துதித்து அவ்வாறே அம்பிகையையும் ஸ்தோத்திரம் பண்ணித் தன்னுடைய தலைகளில் ஒன்றை முறித்தெடுத்து வீணைக்குடமாக்கிக் கையிலொன்றை அறுத்தெடுத்துத் தண்டாக்கி, அதன் நரம்புகளை யெடுத்துத் தந்தியாக்கி வீணையைச்செய்து கொண்டு அதனை மீட்டி ஆயிரம் வருஷங்கள்வரை அவஸ்தையுடன் சாமவேதகானஞ் செய்து சிவபெருமானைத் துதித்துப் பாடிக்கொண் டிருந்தான். அந்தக் கானத்தைக் கேட்டுச் சகல ஜீவராசிகளும் மனமுருகிப் போயின.

அந்த ஆயிரம் வருஷங்களும் சென்றபின் சிவபெருமான் அந்தக் கானத்திற்கு மனதிரங்கி இராவணனுக்கு அனுக்கிரகஞ் செய்யவேண்டுமென்று நினைத்தார். அப்போது பார்வதியும் அந்த இன்னிசையைக் கேட்டு மனதுருகிச் சிவபெருமானை நோக்கி, "சுவாமி! யாரோ ஒருவன் இனிமையான கானத்தால் நெடுநாளாக நம்

மைத் துதித்துக்கொண் டிருக்கிறான்; அவனுக்கு நீர் அருள்புரியாதிருப்பது தகுதியன்று" என்று சொன்னாள். அதைக்கேட்டுப் பரமசிவன் "உமையே! முன்னே நீயும் நடுங்கும்படி கைலையை அசைத்தவன் இவன்தான்; அப்போது நாம் காற் பெருவிரலால் இந்த மலையை அழுத்தியபடியால் இதனடியில் நசுங்குண்டு வருந்தி இதைவிட்டு வெளியேறும் பொருட்டு நம்மை ஸ்தோத்திரம் செய்துகொண் டிருக்கிறான்; இவனுக்குக் கிருபை செய்யவேண்டியது அவசியந்தான்; எனினும் இவன், மேலும் நம்மிடம் வரங்களைப் பெற்றுக்கொண்டு சாதுக்களுக்குத் துன்பஞ் செய்வானே யென்று நாம் இதுவரை பேசாமலிருந்தோம். ஆதலின் இனிமேல் இவனிடம் சென்று கிருபை புரியலாம்" என்று உமாதேவியுடன் இடப வாகனத்தில் எழுந்தருளி அவனுக்கு முன்னே சென்றார்.

அவரைப் பார்த்தவுடனே தசக்கிரீவன் "பகவானே! என்னைப் பாதுகாத் தருள வேண்டும்" என்று கண்ணீரொழுகப் போற்றினான். அப்போது சிவபெருமான் அவனைப் பார்த்து, "இராவணா! நீ வீறிட்டழுத குரலோடு நம்மை ஸ்தோத்திரஞ்செய்தபடியால் அதற்குத்தக உனக்கு நாம் * இராவணன் என்னும் பெயர் கொடுத்தோம்; இன்றுமுதல் அப்பெயர் உனக்கு மிகுதியாக வழங்கக்கடவது; மேலும் நீ வேண்டிய வரத்தைப் பெற்றுக்கொள்" என்றார்.

இராவணன் அந்தமட்டில் தன்னை மலை யிடுக்கில் நின்றும் வெளி யேற்றி விட்டால் அதுவே போது

---

* **இராவணம்—அழுகைக்குரல்; இராவணன்—அழுகைக் குரலோடு கூடியவன்.**

மென்று நினைத்திருந்தானாதலால் மேலே ஒரு வரத்தையும் கேட்காமல் வாயை மூடிக்கொண் டிருந்தான். சிவபெருமான் அவன் எண்ணத்தை யுணர்ந்து இரக்கங்கொண்டு, அவனை நோக்கி, "இராவணா! நீ ஒன்றையும் கேட்காவிடினும் உன்னுடைய ஸ்தோத்திரத்திற்கு நாம் மகிழ்ந்தபடியால் நாமே வரந்தருகின்றோம்; உனக்கு நான்முகன் கொடுத்த ஆயுளுக்கு மேல் இன்னும் அவ்வளவு வயது கொடுத்தோம்" என்று சொல்லிப் பின்னரும் மதிப் பிரகாசம் என்னும் ஒரு வாளாயுதத்தையும் அவனுக்குக் கொடுத்து, "இதனை எவன் தூஷிக்கின்றானோ அவனை இதுசம்மாரம் செய்துவிடும்" என்று திருவாய் மலர்ந்தருளினார்.

அப்போது இராவணன் தனக்கேற்பட்ட வருத்தத்தால் தாகவிடாய் கொண்டிருந்தானாதலின் வாயால் தாகத்திற்குக் கேட்க முடியாமல் தாகத்திற்கு ஏதாவது வேண்டுமென்று கையை யேந்திக் குறிப்பிட்டான். சிவபெருமான் இரக்கத்துடன் அவனுடைய தாகத்தைத் தீர்க்கும்படி நந்திதேவருக்குச் சாடைகாட்டினார். நந்திதேவர் அமுதங் கொண்டுவரும்படி தேவர்களுக்குக் கட்டளையிட அவர்கள் உடனே அமுதகலசத்தைக் கொண்டுவந்து இராவணனுக்கு முன்னே வைத்தார்கள். அவன் அந்த அமுதத்தை யெல்லாம் பானம் பண்ணிக் களைப்பு நீங்கினான். சிவபெருமான், 'இனி நீ புஷ்பக விமானத்திலேறி இஷ்டமான விடத்திற்குச் செல்லலாம்' என்று அவனுக்கு அனுக்கிரகம் செய்துவிட்டுச் சென்றார்.

அதன்மேல் இராவணன் கைலை யடியினின்றும் விடுபட்டு முன்னிலும் அதிக பலங்கொண்டு "நான்

சிவனுக் கபராதஞ் செய்தாலும் மேலும் அவரிடத்தில் உயர்ந்த வரம் பெற்றுக்கொண்டேன் ; இனி எனக் கென்ன குறை" என்று அகங்கரித்துப் பற்பல விடங் களுக்கும் சென்று திக்கு விஜயம் செய்து திக்கஜங்களு டனும் போராடி அவற்றின் மருப்பைத் தன் மார்பில் பாய விட்டு ஒடித்து வைத்துக் கொண்டு, பற்பல அர சர்களை ஜெயித்து அவர்களிடம் கப்பம் வாங்கி இமயமலையின் பக்கம் வந்தான்.

தசமுகன் வேதவதியின் சாபம் பெறல்.

அவன் அவ்வாறு வரும்போது அங்கே ஒரு சோலை யில் வேதவதி யென்னும் அழகியகன்னிகை யொருத்தி தவஞ் செய்துகொண் டிருந்தாள். இராவணன் அவளைப் பார்த்து 'எப்படியாவது இவளை மணந்து கொள்ளவேண்டும்' என்று நினைத்துத் தனியாக அவ ளருகிற் சென்று, கண்மூடி நிஷ்டையி லிருந்த அவள் முகத்தைப் பார்த்து, "பெண்கள் நாயகமே! நீ யார்? மிக்க அழகுடைய நீ உடம்பை வாட்டித் தவஞ் செய் யுங் காரணமென்ன ?" என்று உரத்த தொனியோடு கேட்டான்.

அவனுடைய பெருங் குரலைக் கேட்டவுடனே வேதவதி நிஷ்டைகலைந்து விழித்துப் பார்த்து அவ னுடைய வடிவத்தைக் கண்டு சிறிது நடுங்கி, "நாம் புருஷர்களின் உபத்திரவமில்லாதிருக்க வேண்டி இந்த ஆரணியத்தில் வந்து தவஞ்செய்து கொண்டிருக்கின் றோம்; இங்கும் எவனோ இராக்ஷதன் வந்துவிட்டான்; ஆயினும் நாம் நம்முடைய வரலாற்றைக் கூறி இவனைத் தந்திரமாக அனுப்பிவிடுவோம்" என்று நினைத்து அவனை நோக்கி, "இராக்ஷதனே ! நானோ வீரகுசத்

துவ முனிவருடைய குமாரத்தி; என் பெயர் வேதவதி; என்னை மணம்புரிய விரும்பி அநேகம் தேவர்களும், அசுரர்களும், கந்தருவர்களும் என் தந்தையிடம் கேட்டார்கள். நான் விஷ்ணுமூர்த்தியை மணம்புரிய இச்சைகொண் டிருந்தபடியால் என் தந்தை என்னை அவர்களுக்குக் கொடுக்க மறுத்துவிட்டார்; அதற்காக மனஸ்தாபங்கொண்டு சம்புவென்னு மோர் அரக்கன் இரவில் வந்து என் பிதாவைக் கொலைசெய்து போய் விட்டான் ; அதன்மேல் நான் மனம் வருந்தி இங்கே வந்து விஷ்ணுவே எனக்குப் புருஷனாக வேண்டு மென்று தவஞ் செய்துகொண் டிருக்கின்றேன்" என்று சொன்னாள்.

உடனே இராவணன் சிரித்து விஷ்ணுவை இழிவாகப் பேசித் தன்னுடைய பெருமைகளை விசேஷமாக எடுத்துக் கூறித் தன்னையே மணஞ்செய்துகொள்ளும் படி அவளை வேண்டினான். வேதவதி அவனைப் பார்த்துக் கோபித்து, "அடா துஷ்டா! நீயோ விஷ்ணுவினும் சிறந்தவனாவாய் ? நீ கைலையைப் பெயர்க்கப் போய் அவஸ்தை யடைந்துவந்தது எனக்குத் தெரியும்; இங்கே ஆபாசமான வார்த்தைகளைப் பேசாமல் அப்பாற் போய்விடு" என்று சொன்னாள். இராவணன் கடுஞ்சினமடைந்து அவளுடைய கூந்தலைப்பற்றி யிழுக்க முயன்றான்.

அவனுடைய எண்ணத்தை யுணர்ந்த வேதவதி, ஆதார மந்திரத்தை ஜெபித்து எதிரிலிருந்த தணலை நோக்கினாள். அது சுவாலைவிட்டு வளர்ந்தெரிந்தது. உடனே அவள் இராவணன் பற்ற நினைத்த கூந்தலை அறுத்து அதில் போட்டுவிட்டு அவனை நோக்கி, "அடா

பாவி! நீ என் தவத்திற்கிடையூறு செய்தபடியால் நான் அடுத்த ஜன்மத்தில் சீதையாகப் பிறந்து உன்னை யும் உன் குலத்தையும் நாசமாக்குவேன்” என்று சொல்லிவிட்டுத் தானும் அந்நெருப்பில் வீழ்ந்திறந் தாள்.

இராவணன் மருத்துவை அடக்கல்

வேதவதியின் சாபத்தை ஏற்றுக்கொண்ட இரா வணன் விசனித்து உடனே 'தலைவிதியால் வருவது வந்தே தீரும்' என்று தெளிந்து தைரியங்கொண்டு படைகளுடன் விமானத்தி லேறிப் புறப்பட்டுப் பற் பல மன்னர்களிடத்தும் சென்று பகுதி வாங்கிக் கொண்டு திரும்பி இமயகிரிச் சாரலுக்குநேரே வந்தான். அங்கே ஒரு சோலையில் சங்கவர்த்தன ரென்பவரை ஆசானாக வைத்துக்கொண்டு, தேவர்கள், முனிவர்கள், காந்தருவர் முதலியவர்களெல்லாம் சூழ, உலகத்தையெல்லாம் ஒரு குடையின் கீழ் ஆளத்தக்க மருத்துமகாராஜன் யாகஞ்செய்துகொண் டிருந்தான்.

இராவணன் அவனைப் பார்த்ததும் மிக்க கோபங் கொண்டு மாரீசன் முதலியவர்களை நோக்கி “இந்த அரசன் நான் வருவது கண்டு என்னைப் பணியாமலும், எனக்குப் பகுதி செலுத்தாமலும் யாகஞ் செய்து கொண் டிருக்கின்றான்; ஆதலின் இவனை அடித்து நொறுக்கி இவனுடைய யாகத்தைச் சிதைக்காமற் போகக்கூடாது; நீங்கள் என்னயோசனை சொல்லு கிறீர்கள்?” என்று கேட்டான்.

அதற்கு மாரீசன், “இவ்வாறு கண்டவர்களோ டெல்லாம் எதிர்ப்பது சரியன்று; எந்தப் புற்றில் எந்தப்பாம்பிருக்குமோ” என்று சொன்னான். அதைக்

கேட்டதும் இராவணன் மகோதரன் முகத்தை நோக்கி ஞன். உடனே மகோதரன், "நாம் செய்வது திக்கு விஜய மாதலால் எதிர்ப்பட்டவர்களை யெல்லாம் ஜெயிப்பதுதான் அதற்குத் தக்கதாகும். மேலும் இந்த மருத்துமன்னன் எவராலும் செய்யமுடியாத மகேஸ்வரயாகத்தைச் செய்கின்றான்; ஆதலின், இவனை ஜெயிப்பதால் நமக்கு மிக்க கீர்த்தியுண்டாகும்" என்றான்.

உடனே இராவணன் விமானத்தை விட்டிறங்கி யாகசாலையைப் பார்த்துப் புஜங்களைத் தட்டி ஆர்ப்பரித்தான்; மற்ற இராக்ஷதர்களும் கர்ஜித்தார்கள். அங்கிருந்தவர்களெல்லோரும் நடுங்கி, "இதோ இராவணன் வந்துவிட்டான்; இனி நாம் பிழைப்பதரிது" என்று இந்திரனை நோக்கி, "இனிமேல் நாம் என்ன செய்யலாம்" என்று வினவினார்கள். அவன் "ஒவ்வொருவரும் வெவ்வே றுருவங்கொண்டோடி ஒளிப்பது நலம்" என்றான். அவ்வாறே தேவர்களும் மற்றவர்களும் ஓடி யொளித்தார்கள். தேவேந்திரன் மயில் வடிவங்கொண்டோடி மறைந்தான்; எமன் காகவடிவு கொண்டு பறந்து போனான்; வருணன் அன்ன வடிவெடுத் தோடினன்; முனிவர்களெல்லாம், 'இனி இவன் சீக்கிரம் ஒழிந்துபோவான்' என்று தசக்கிரீவனுக்குச் சாபங் கொடுத்துவிட்டு மறைந்தார்கள்.

இவ்வாறு எல்லோரும் மறைந்தோடவே மருத்து மன்னன் மாத்திரம் தனித்து நின்றான். இராவணன் வீராவேசத்துடனே அவனுக்கெதிரில் சென்று, "அடே மருத்தா! நானிருக்கும்போது இந்த யாகத்தைச் செய்ய உனக்கு வன்மையுண்டா? நீ இப்போதென்னுடன் போர்செய்ய வரவேண்டும், அல்லது

எனக்குத் தோற்றதாகச் சொல்லவேண்டும்; இல்லா விட்டால் நான் உன்னையும் உன்னுடைய யாகத்தையும் ஒழித்துவிடுவேன்" என்று சொன்னன். அதைக் கேட்டதும் மருத்துராஜன் கோதித்தெழுந்து அவ னோடு போர்செய்யத் தொடங்கினன்.

அத்தருணத்தில் அவனுடைய ஆசானுகிய சங்க வர்த்தனர் அந்த மருத்துமன்னனைத் தடுத்து, "அரசனே! இவன் உனக்கு நிகரானவனல்லன்; எனி னும் இப்போதிவனுடன் போர்செய்தால் யாகத்திற் கிடையூறுண்டாகும்; ஆதலின், இவனிடத்தில் 'நான் உனக்குத் தோற்றேன்' என்று சொல்லிவிட்டால் இவன் மகிழ்ச்சி யடைந்து போய்விடுவான்; அதன் மேல் நாம் இந்த அருமையான யாகத்தை நிறை வேற்றி விடலாம்; நமக்குக் காரியமாக வேண்டியது தானே குறி" என்று அவனுக்குச் சொன்னர். அதன் மேல் மருத்துமன்னன் 'இது நல்ல உபாயந்தான்' என்று சந்தோஷித்து இராவணன் சமீபத்திற் சென்று அவன் முகத்தை நோக்கி, "இலங்காதிபரே! நான் உமக்கெதிராவேனு; நான் எப்போதும் உமக்குத் தோற்றவன்தான்" என்றுன். இராவணன் அளவில்லா மகிழ்ச்சி யடைந்து தன் படைகளுடன் போய்விட் டான்.

அதன் மேல் பயந்தோடிய தேவர் முதலியவர் கள் எதார்த்த வடிவத்துடன் அங்கே திரும்பி வந்தார் கள். மருத்து மன்னன் அந்த யாகத்தை நிறைவேற் றித் தேவர்களுக்கு அவிர்ப்பாகங் கொடுத்தான்.

அத்தருணத்தில் இந்திரன் மருத்துவை நோக்கி, "மன்னனே! நான் இராவணனுக்குப் பயந்து மயில்

வடி வெடுத்ததனால் அந்த மயில்களுக்கு இனி என்னுடைய அடையாளமாகத் தோகையில் ஆயிரங் கண்களுண்டாகவும், என் வாகனமாகிய மேகத்தைக் கண்டவுடன் அந்த மயில்கள் தோகை விரித்தாடவும், நாகங்களினால் அவற்றிற்குத் துன்பமுண்டாகாதிருக்கவும் வரங்கொடுத்தேன்" என்றான்.

எமன், "நான் காகவடிவமெடுத்தபடியால் இனி உலகத்திலுள்ளவர்கள் பிதுர்த்திதிகளில் அவற்றிற்கு அன்னம்படைக்கவும், அதனால் அவர்களுடைய பிதுர்க்கள் நரகத்தழுந்தாதிருக்கவும், எக்காலத்திலும் அக்காகங்கள் நோயற்றுத் தீர்க்காயுளுடன் இருக்கவும் வரங் கொடுத்தேன்" என்றான்.

வருணன், "நான் அன்னவடிவ மெடுத்ததால் இனி அவ்வன்னங்களெல்லாம் என்னைப்போல வெள்ளை வடிவமடைய வரங் கொடுத்தேன்" என்றான்.

குபேரன், "நான் ஓணான் வடிவெடுத்ததால் இனி அவ்வோந்திகளுக்கு என் நகரம்போல் பொன்வடிவமும், என் மாளிகைபோலப் பல வர்ணங்களும் உண்டாக வரங்கொடுத்தேன்" என்றான்.

பின்னர் எல்லோரும் மருத்துராஜனை வாழ்த்திவிட்டுத் தங்கள் தங்கள் இருப்பிடங்கட்குப் போய்விட்டார்கள். மருத்துமன்னன் யாகத்தை நிறைவேற்றி மகிழ்ச்சியுற்றிருந்தான்.

அனரண்யன் சண்டை.

மேற்கூறியபடி சென்ற இராவணன் அக்காலத்தில் அயோத்தியில் அரசு செய்துகொண் டிருந்த அனரண்ய மகாராஜனிடம் சென்று, "நீ சுத்தவீரனாயிருந்தால் என்னுடன் யுத்தத்திற்குவா ; அல்லது

எனக்குப்பகுதிகட்டி என்னை வணங்கிக்கொள்" என்று சொன்னான்.

உடனே அவ்வரசன் கோபங்கொண்டு நால் வகைப் படைகளுடன் இராவணனை எதிர்த்தான். இருவகைப் படைகளும் போர் செய்தன. அப்போது இராக்ஷதப் படைகள் மிஞ்சி அவ்வரசனுடைய படைகளை மிகுதியும் சேதப் படுத்திவிட்டன. இராவணன் அளவிறந்த ஆயுதங்களை அம்மன்னன் மீது பிரயோகித்து அவனுடைய தேகத்தை யெல்லாம் சல்லடைக் கண்களாகத் துளைத்துத் தேரையும் சாரதியையும் குதிரைகளையும் ஒழித்து விட்டான்.

அவ்வாறாகவே அனரண்ய மகாராஜன் சோர்ந்து வீழ்ந்து இராவணனை நோக்கி, "அடா பாவி! நீ இப்போது யாதொரு பகையுமில்லாதிருந்த என்னை அகங்காரத்தால் வருத்தினாய்; பின்னே விஷ்ணுமூர்த்தி இராமராக என் மரபில்வந் தவதரிக்கப் போகிறார்; அவரால் நீ இறப்பாய்" என்று சாபங் கொடுத்துவிட்டு வீர சுவர்க்கத்தை யடைந்தான்.

எமன் சண்டை.

அதன்மேல் இராவணன், 'இஃதென்ன நமக்கு மேலும் மேலும் சாபங்களே யுண்டாகின்றன!' என்று தன்னுடைய படைகளுடன் புறப்பட்டுப் பூலோகத்திலிறங்கி ஒரு காட்டில் தங்கி யிருந்தான்.

அத்தருணத்தில் நாரதமுனிவர் அந்த இராவணனை மேலும் பல வம்புகளில் இழுத்து விட்டு வேடிக்கை பார்க்கவேண்டுமென்று நினைத்து அவனிடம் வந்தார். இராவணன் அவரை உபசரித்து ஆசனத்திலமரச் செய்தான். அப்போது நாரதர் அவனை

நோக்கி, "இராவண ! நீ யேன் இவ்விடத்தில் வந்திருக்கின்றாய்?" என்று வினவினர். அதற்கு அவன், "நான் திக்குவிஜயம் செய்து பலரையும் ஜெயித்து இலங்கைக்குப் போகும் பொருட்டு இங்கேவந்து தங்கியிருக்கின்றேன்; இன்னும் என் கைக்குள் அகப்படாதவர்கள் எவரேனுமிருந்தால் நீர் சொல்லும்" என்றான். நாரதர், "இராவண! நீ என்ன திக்குவிஜயம் செய்தாய்! எமனை ஜெயித்தாலன்றோ உன் திக்குவிஜயம் சிறப்புற்றதாகும்" என்றார். மகோதரனும், "இதை நான் முந்தியே கூற மறந்து விட்டேன்; நாரதர் சொல்லியபடியே எமனை வென்றால் உமக்கு அளவற்ற கீர்த்தியுண்டாகும்" என்றான். இராவணன் உற்சாகங் கொண்டு மறலியோடு யுத்தம் புரியப் புறப்பட்டான்.

அப்போது மாரீசன், 'அங்கே செல்வதால் தொந்தரவுண்டாகும்' என்று அவனைத் தடுத்தான். இராவணன் 'நீ பேசாமலிரு' என்று அவன் வாயை அடக்கிவிட்டுத் தன் படைகளுடன் விமானத்திலேறி எமபுரத்தை நோக்கிப் புறப்பட்டுப் போயினன். அவன் செல்வதற்கு முந்தி நாரதர் எமனிடம் சென்றார். அவன் அவரை உபசரித்து வணங்கித் தர்ப்பாசனத்திலிருக்கச் செய்து அவரை நோக்கி, "சுவாமி! நீர் இங்கெழுந்தருளிய காரணமியாது ?" என்று வினவினன்.

அதற்கு நாரதர், "நான் பற்பல விடங்களிற் சஞ்சரித்து ஓரிடத்தில இராவணனைக் கண்டு, 'அப்பா ! நீயேனிங்கு வந்திருக்கின்றாய்?' என்று கேட்டேன். அவன், 'நான் திக்குவிஜயஞ்செய்து வந்திருக்கின்றேன். இப்போது எமனைக் கொல்லப்போகின்றேன்' என்றான். நான், 'அது கூடாது' என்று அவனுக்கு எவ்வளவோ

நீதிகளைக் கூறியும் அவன் கேட்கவில்லை ; அவன் இப்போது உன்னுடன் சண்டையிடப் புறப்பட்டு வந்து கொண்டிருக்கின்றான்; அவனை நீ இலகுவில் விடக் கூடாது; நன்றாக வாட்டி யனுப்பவேண்டும்" என்று சொல்லி எமனுக்குக் கோபத்தை யெழுப்பிவிட்டு அவனிடம் விடை பெற்றுக்கொண்டு போய்விட்டார்.

எமன், 'அந்த இராவணன் இங்கே வரட்டும் ; அவனை நான் தொலைத்து விடுகின்றேன்' என்று மனங் கொதித்திருந்தான். அத்தருணத்தில் முன்னே சொல்லியபடி சென்ற இராவணன் எமபுரத்தை யணுகித் தான் சண்டைக்கு வந்திருப்பதை எமனிடம் தெரிவிக்கும்படி தூதனுப்புவித்தான். தூதன் எமனிடம் சென்று, "இலங்காதிபர் உம்முடன் சண்டை செய்ய வந்திருக்கின்றார் ; உமக்கு வன்மை யிருந்தால் அவருடன் போர் செய்யும் ; இல்லையெனில் அவருக்குப் பகுதி செலுத்தி அவரை வணங்கிக் கொள்ளும்" என்றான்.

அதைக் கேட்டு மறலி சினந்து தூதுவனை நோக்கி, "அடே ! அவன் இந்தச் சமாசாரங்களைச் சொன்னானென்று நீயும் அச்சமின்றி என்னிடம் வந்து சொன்னாய் ; உன்னுடைய சிரசை இப்பொழுதே நான் துண்டு செய்துவிடுவேன்; எனினும் தர்மத்துக் கஞ்சி உன்னை விட்டேன் ; நீ விரைந்து சென்று அந்த இராக்ஷதனிடம், பயந்தோடாமல் சண்டைக்கு ஆயத்தமாயிருக்கும்படி நான் சொன்னதாகச் சொல்" என்று அவனை யனுப்பினான். அவனும் சென்று இராவணனிடம் கூற்றுவன் கூற்றுக்களைக் கூறினான். இராவணன் சண்டைக்கு ஆயத்தமாயிருந்தான்.

அப்போது எமன் சித்திரகுப்தனை நோக்கி, "அந்த இராவணன் வலியவந்து நம்மைச் சண்டைக் கிழுக்கின்றானே; அவனை என்ன செய்யலாம்" என்று வினவினான். அதற்கவன், "நாம் போர்செய்து அவனுடைய அகங்காரத்தை அடக்குவதுதான் நல்லது" என்றான். உடனே நமன் தன் சேனைகளுடன் புறப்பட்டுக் கோட்டை வாயிலைக் கடந்து இராவணனுக்கெதிரில்போய் நின்று வீரகர்ஜ்ஜனை புரிந்தான். இராவணனும் கோபத்தோடெதிர்த்தான். இரண்டு படைகளும் நெருங்கி யுத்தம்புரிந்தன. இருவகைச் சேனைகளிலும் பற்பல சேதங்களுண்டாயின. எங்கும் பிணக்குவியல்களும் இரத்த வெள்ளமும் அதிகரித்தன. அத்தருணத்தில் எமதூதர்கள் மீறி இராக்ஷதர்களை அடித்து ஹிம்சை செய்தார்கள். இராக்ஷதர்கள் பயந்து இராவணனிடம் அடைக்கலம் புகுந்தார்கள்.

அப்போது இராவணன் "ஐயோ! நாம் வகை தெரியாமல் வந்து மாட்டிக் கொண்டோமே! இதுவரை நம்முடைய சேனைகளில் இருநூறு வெள்ளம் மடிந்தனவே" என்று சற்றே மயங்கி நின்றான். அதற்குள் மறலியின் மந்திரிகள்வந்து அவனுடனெதிர்த்து அநேகம் அஸ்திரங்களைப் பிரயோகித்து அவனுடைய தேர், கவசம் முதலியவற்றை நாசஞ்செய்து, தேகத்தையும் சல்லடைக் கண்களாகத் துளைத்துச் சேனைகளையும் சின்னபின்னப் படுத்தினார்கள். அதனால் இராவணன் மூர்ச்சையடைந்தான். உடனே மாரீசன் முதலியவர்கள் உபசாரஞ்செய்து அவனுடைய மூர்ச்சை நீங்கும்படி செய்தார்கள். இராவணன் மூர்ச்சை தெளிந்தவுடன் முன்னிலும் கடுமையாக

எதிர்த்து அஸ்திரங்களைப் பிரயோகித்து எமனுடைய சேனைகளை யெல்லாம் நாசப்படுத்தினான்.

அதைக்கண்டு எமனுடைய தூதர்களாகிய தூமகேது, சிங்கமுகன், ஆளிமுகன், கழுதைமுகன், கோரப்பல்லன், வக்கிரதந்தன் முதலியவர்கள் சினந்து இராவணனைத் தூஷித்துப் பேசி அவன்மீது எண்ணிறந்த ஆயுதங்களைப் பிரயோகித்து, அவனுடைய தேர், வில் முதலியவற்றைப் போக்கித் தேகத்தைத் துளைத்து, மார்பைப் பிளந்து அவனை முன்னிலும் அதிகமாக மயங்கச் செய்தார்கள். இராவணன் சிறிது நேரம் மயங்கிப் பின்னர்த் தெளிந்து, "எமதூதர்களே நம்மை இந்தப் பாடு படுத்துகின்றார்களே! இனி அந்த எமன் என்ன செய்வானோ தெரியவில்லை; நாம் இவர்களோடு போர்புரிந்து துன்பப்படுவதைக் காட்டினும் அந்த எமனுடன் எதிர்த்து மடிவது நல்லது" என்று வீராவேசங்கொண்டு அந்த எமதூதர்களை வாட்டி அவர்களை நோக்கி, "நீங்கள் எனக்கு நிகரானவர்களல்ல; அந்த எமனைக் காட்டுங்கள்; அவன் எங்கே எங்கே?" என்று கூவினான்.

அந்தச் சப்தத்தைக்கேட்டு எமன் அடங்காக் கோபங்கொண்டு வந்து அவனோடெதிர்த்தான். இருவரும் பாணப்பிரயோகஞ் செய்தார்கள். அந்தப் பாணங்கள் தணலைப்போல் வெளிப்பட்டு உலகங்களை யெல்லாம் தகிக்க ஆரம்பித்தன. அதனால் தேவர்கள் நடுங்கி வருந்தினார்கள். முனிவர்கள், 'இராவணன் கோதண்டபாணியால் சீக்கிரம் ஒழிந்துபோவான்' என்று சாபங்கூறிவிட்டு மலைகளிலும் குகைகளிலும் ஓடி மறைந்தார்கள். அப்போது இராவணன் பாசுபதாஸ்

திரத்தை யெடுத்துக் கூற்றுவன்மேல் பிரயோகித்து விட்டான். அதுமிக உக்கிரத்துடன் புறப்பட்டு எம னுடைய மகுடத்தையும் வில்லையும் தண்டையும் பாசத் தையும் போக்கிக் கவசத்தை அறுத்து, எருமைக் கடாவையும் தரையில் வீழ்த்தி அவனையும் மூர்ச்சை யாக்கி விட்டது. உடனே சித்திரகுப்தன் ஓடிவந்து எமனைத்தூக்கி உபசரித்து அவனுடைய மயக்கத்தைப் போக்கினன். மறலி மூர்ச்சை தெளிந்தவுடன், “யாருக் கும் தோல்வியுறாத நாம் இந்த இராக்ஷதனால் மூர்ச்சை யடைந்ததென்ன அதிசயமா யிருக்கின்றது!” என்று வருந்தினன்.

அப்போது சித்திரகுப்தன் அவனைநோக்கி, “எம புரத் தரசே! நீர் மூர்ச்சையானதற்கு வருத்தப்பட லாகாது; எப்பேர்ப்பட்டவர்களுக்கும் இடையூறு நேர்வது இயற்கை; அதனால் இராவணன் உம்மை ஜெயித்துவிட மாட்டான்; ஆதலால் நீர் வீரத்துடன் அவனை வாட்டி அவனுடைய அகங்காரத்தை அடக்கி விடவேண்டும்” என்று சொன்னன்.

அப்பொழுதே மறலி கொதித்தெழுந்து இராவ ணன் மீது ஆயிரக்கணக்கான அஸ்திரங்களைப் பிரயோ கித்தான். அவற்றால் தசக்கிரீவன் மரண மூர்ச்சை யடைந்து பின்தெளிந்து கோபத்துடன் கதாயுதத்தை யெடுத்துச் சுழற்றி அதனால் எமனுடைய சாரதியை யும் இரதத்தையும் போக்கித் தலையிலும் மோதினன். எமன் அந்த அடிக்குச் சற்று தளர்ந்து, தானும் இருப் புலக்கையை யெடுத்துத் தசக்கிரீவன் தலையில் மோதி னன். அதனால் அவன் மரணமூர்ச்சை யடைந்தான். அப்போது கூற்றுவன் செங்கண்ணன் என்னும் தூது

வனை நோக்கி, "அடே! நீ இந்த இராவணனாகிய பத்துத்தலைப் பூச்சியைத் தூக்கிக்கொண்டு போய்ப் பெருவயிற்றனுக் கிரையாகக்கொடுத்துவிடு" என்றான்.

அவன் சில கிங்கரர்களோடு இராவணனைத் தூக்கப் போனான். அதைக் கண்டு இராவணனுடைய சேனைத் தலைவர்களாகிய வக்கிரதந்தன், கொள்ளிக் கண்ணன், ஆள் விழுங்கி முதலியவர்கள், இராவணனை எடுக்க வந்த செங்கண்ணனைப் பிடித்துத் தரையில் தேய்த்துக் கொன்று விட்டார்கள்.

அதன்மேல் இராவணன் மூர்ச்சை தெளிந்து நடந்ததை யுணர்ந்து மிகுந்த கோபத்துடன் ஆயிரந் தலைகளையும் இரண்டாயிரம் கைகளையுமுடைய சில இராக்ஷதர்களை நோக்கி, "நீங்கள் அந்த எமனை எடுத்துத் தின்றுவிடுங்கள்" என்று சொல்லிவிட்டுக் கதாயுதத்தினால் எமதூதர்களையும், மந்திரி முதலியவர்களையும் அடித்து நொறுக்கி மற்றவர்களையும் சிதைத்து எங்கும் பிணக்காடாக்கி விட்டான். எமன் பிரமையடைந்து ஒரு நாழிகை வரையில் ஒன்றுந் தோன்றாமல் நின்றான். அப்படி நின்றவன் பின்பு தெளிந்து பர்வதாஸ்திரத்தை இராவணன்மீது ஏவினான். அஃது எங்கும் பர்வதங்களாகச் சொரிந்து இராவணனுடைய சேனைகளை நாசப்படுத்திற்று. தசக்கிரீவன் வஜ்ராயுதத்தையேவி அம்மலைகளை நாசப்படுத்தி வாளையேந்தி எமனிடம் நெருங்கினான். எமன் இரண்டு அர்த்த சந்திர பாணங்களால் அவனுடைய வில்லை யொடித்து மேலும் அக்கினியாஸ்திரங்களை விடுத்து அவன் தேகத்தைத் துளைத்துவிட்டான். அந்த உபத்திரவத்தைச் சகிக்க முடியாமல் இராவணன் சஞ்சலப்பட்டான்.

அப்போது மகோதரன், 'இச்சமயத்தில் மனந்தளரக் கூடாது' என்று அவனுக்குக் கோபமூட்டினான். இராவணன் ஆத்திரங்கொண்டு சூலாயுதத்தைக் கூற்றுவன் மேல் ஏவினான். அஃது உக்கிரமாக வந்தது. அதைக்கண்டு எமன், "இனியென் செய்வது! இந்தச் சூலம் நம்மைக் கொல்லாமல் விடாதே" என்று தத்தளித்தான். அப்போது அசரீரி, "நமனே! இது சிவன் சூலமாதலால் சிவனடியார்களையும், நிராயுத பாணிகளையும் ஒன்றும் செய்யாது; ஆதலால் நீ சிவபக்தன் வேடந்தரித்து உயிரைக் காப்பாற்றிக்கொள்" என்றுரைத்தது. அவ்வாறே கூற்றுவன் ஆயுதங்களையெறிந்துவிட்டு விபூதி உருத்திராக்கமணிந்து சிவனைத் துதித்துக்கொண்டு அச்சூலத்திற் கெதிரில் நின்றான். சூலம் அவனைக் கண்டதும், 'அந்தப்பாவி சிவபக்தன் மேல் நம்மை ஏவினானே' என்று இராவணனைத் தூஷித்து நமனை யொன்றும் செய்யாமற் போய் விட்டது.

அதன்மேல் இராவணன் மகோதரனை நோக்கி, 'இனி என் செய்வது?' என்று கேட்க அவன், "உங்களில் ஒருவரையொருவர் வெல்லமுடியாது; ஆதலின் நீர் எமனுடன் சமாதானஞ்செய்துகொள்வது நல்லது" என்றான். மாரீசனும், பிரகஸ்தனும் அவ்வாறே சமாதானஞ் செய்துகொண்டு ஊருக்குப்போவது நலமென்றார்கள். இவர்கள் அவ்வாறு சொல்லியும் இலங்காதிபன், 'எவ்வளவு காலமானாலும் கூற்றுவனை வெல்லாமல் நான் திரும்பமாட்டேன்' என்று வீரத்துடனே விருக்ஷங்களைப் பிடுங்கி நமனையும் அவன் சேனைகளையும் சாடினான். அது கண்ட எமன் ஆங்காரங்

கொண்டு பாசக்கயிற்றை வீசி இராக்ஷதர்களைப் பிடித்து மடித்துச் சின்னபின்னப் படுத்தினான். அநேகம் இராக்ஷதர்கள் இறந்தார்கள்; பலர் மருண்டோடினார்கள்; பலர் இராவணனிடம், 'இனி நாங்கள் பிழைப்பதரிது' என்று கதறினார்கள். அப்போது இராக்காலம் வந்தது.

அத் தருணத்தில் இராவணன், தன்னிடம் முறையிட்டவர்களை நோக்கி, "என்ன செய்கிறது? நான் எப்படி யுத்தஞ் செய்தாலும் எமனைத் தோற்கும்படி செய்ய என்னால் முடியவில்லை; ஆயினும் அவனை நான் விடமாட்டேன்; இராக்காலம் வந்துவிட்டபடியால் நமக்கு ஜெயமுண்டாகும்; இந்த இருளில் நான் அவனோடெதிர்த்து ஒருகை பார்க்கிறேன்; நீங்கள் பயப்படாதிருங்கள்" என்று சொல்லிவிட்டு உருத்திர மூர்த்தி போலக் கோபங்கொண்டு ஆர்ப்பரித்துத் தேரேறி வில்லை வளைத்துக் கோடிக்கணக்கான கொடிய பாணங்களை மேலும் மேலும் எமனுடைய படைகளிற் செலுத்தினான்; அவற்றால் சண்டனுடைய நால்வகைப் படைகளும் மடிந்தன; எங்கும் பிணமலைகள் குவிந்தன; இரத்த ஆறுகள் பெருக்கெடுத்தோடின; நாய்களும் பேய்களும், பருந்துகளும், கழுகுகளும் மாமிசங்களை உண்டு இரத்தத்தைப் பருகிக் களித்தன.

இராவணன் இவ்வாறு எமன் படைகளை அழித்ததுமன்றி ஒரு கதாயுதத்தை எடுத்துச் சுழற்றிக் கூற்றுவனுடைய மண்டையில் மோதினான். அவன் அந்த அடியினால் நெஞ்சங்கலங்கி, 'இனி இந்த இராவணனை எவ்வாறு ஜெயிப்பது!' என்று ஏக்கமுற்று நின்றான். இதற்குமுன் ஏழுநாள்வரை யுத்தம் நடந்தும்

இராவணனுக்கு ஜெயமுண்டாகாதிருந்தது; இப்போது இராக்காலமானதால் அவனுக்கு நமன் இளைத்துப் போனான். அவ்வாறு இளைத்த கூற்றுவன், 'நாமா இராக்ஷதனுக்குப் பின்னிடைவது!" என்று மீண்டும் தைரியமடைந்து, 'அவனை இதோ ஒழித்து விடுகின்றேன்' என்று காலதண்டத்தையெடுத்து இராவணன் மீது பிரயோகிக்கப் போனான்.

அக் குறிப்பை யுணர்ந்த பிரமா 'நமன் காலதண்டத்தைப் பிரயோகிப்பானானால் கெடுதி சம்பவிக்கும்; ஆதலால் இதைத் தடுத்துவிட வேண்டும்' என்று நினைத்து உடனே எமனுக்கு முன்னே வந்து நின்று, "தர்மராஜனே! இராவணன் உனக்கு நிகரானவனல்லன்; அவனுக்குச் சிவபெருமானும் நானும் சில வரங்களைக் கொடுத்திருப்பதாலும், அவன் பின்னே விஷ்ணுவின் இராமாவதாரத்தால் மடியவேண்டியிருப்பதனாலும் நீ இச்சமயத்தில் உன் தண்டத்தைப் பிரயோகிக்காமல் அவனை விட்டுவிடவேண்டும்; அதனோடு இன்னொரு காரியமும் நீ செய்யவேண்டும்; நீ அவனை விட்டாலும் அவன் சண்டை யொழிந்து போகமாட்டானாதலால் அவனை இவ்விடத்தைவிட் டகற்றுவதற்காக நீ அவனுக்குத் தோற்றதாகச்சொல்லவேண்டும்; துஷ்டர்களை அகற்றுவதற்கு நீ தந்திரமான வார்த்தைகளைச் சொல்வதால் உன்னைப்போன்ற வீரருக்கெப்போதும் குறைவு நேரமாட்டாது; உனக்குள்ள கௌரவம் எப்பொழுதும் உன்னை விட்டகலாது" என்று கூறினார்.

அதற்கு எமன், 'நீங்கள் துஷ்டர்களுக்கு வரத்தைக் கொடுத்துவிட்டு அதற்காக நான் தாழ்ந்துரைக்கும்படி செய்வது அழகாயிருக்கின்றது' என்று மன

வருத்தத்தோடு சம்மதித்து இராவணனை நோக்கி, "உனக்கு என்னுடன் போர்செய்ய இன்னும் திறமிருக்கின்றதா ?" என்றான். அப்போது, 'நான் பயப்படமாட்டேன் என்று சொல்' என்று பிரமா இராவணனுக்குச் சாடைகாட்டினார். அக்குறிப்பை யுணர்ந்த இராவணன், 'உன்னைப்போல் எத்தனை நமன் வந்தாலும் நான் போருக் கிளைக்கமாட்டேன் ; நீ எனக்குத் தோற்றதாகச் சொன்னால் மாத்திரந்தான் நான் உன்னை விடுவேன்' என்றான்.

சித்திரகுப்தன் காலத்தை யனுசரித்து அப்படியே சொல்லி விடும்படி எமனுக்குக் கூறினான். கூற்றுவன் அப்படியே இராவணனிடத்தில், " நான் உனக்குத் தோற்றேன்; ஆதலின் இருவரும் சமாதானம் செய்து கொள்ளலாம் " என்றான். இராவணன், "நாம் காலதண்டத்தால் ஒழிந்துபோகும் நிலைமையிலிருந்தோம்; நல்ல வேளையாய் நான்முகக் கடவுள் வந்து தந்திரஞ் செய்து நம்மைக் காப்பாற்றினார்"என்று மனத்திற்குள் நினைத்திருந்தும் மேலுக்கு வீரத்தைக் கைவிடாதவனைப்போல் தோள்களைத் தட்டி ஆர்ப்பரித்து, 'எமன் எனக்குத் தோற்றான்! தோற்றான் !!' என்று வெற்றிச் சங்கத்தை யெடுத்து முழக்கி, மடிந்தவர்கள்போக மற்றவர்களுடன் விமானத்திலேறிப் போயினான். பிரமாவும் தமதிருப்பிடஞ் சேர்ந்தார். எமனும் எஞ்சியிருந்த சேனைகளுடன் எமபுரம் போய்ச் சேர்ந்தான்.

இராவணன் சேடனோடெதிர்த்தல்.

இராவணன், எமனை ஜெயித்துவிட்டோமென்ற செருக்குடன் புறப்பட்டு வரும்போது தன்னுடைய மந்திரிகளை நோக்கி, "இன்னும் நாம் எதிர்க்கத் தக்க

வர்கள் யாரேனு மிருக்கின்றார்களா ?" என்று கேட்டான். அதற்குப் பிரகஸ்தனும் மாரீசனும், "இனி எங்கும் சண்டைக்குப் போகாமல் இலங்கைக்குத் திரும்புவதே நல்லது" என்றார்கள். அப்போது மகோதரன் இராவணனை நோக்கி, "நீர் இவர்கள் பேச்சைக் கேட்கவேண்டாம் ; நாகலோகத்திற்குச் சென்று சேடனை ஜெயித்தால் உமக்கு மிக்க கீர்த்தியுண்டாகும்" என்றான்.

உடனே இலங்காதிபன் தன் படைகளுடன் நாக லோகம் சேர்ந்து தான் யுத்தத்திற்கு வந்திருப்பதை அறிவிக்கும்படி ஆதிசேஷனிடம் ஒரு தூதனை யனுப்பினான். தூதன் சென்று இராவணன் யுத்தத்திற்கு வந்திருப்பதைச் சேடனுக் குணர்த்தினான். சேடன் கோபித்து 'அந்த இராக்ஷதனை யுத்தத்திற்கு வரச் சொல்' என்று சொல்லித் தூதனை அனுப்பிவிட்டுத் தன்னுடைய நான்கு மந்திரிகளையும் பார்த்து, "வலியச் சண்டைக்கு வந்திருக்கும் இந்த இராவணனை நாம் என்ன செய்யலாம்?" என்று வினவினான்.

அவர்களுள் இரண்டாவது மந்திரியும் மூன்றாவது மந்திரியும் "யோசித்துத்தான் போர்க்கெழவேண்டும்" என்றார்கள். முதல் மந்திரியும் நான்காவது மந்திரியும் "உடனே போர்புரிந்து இராவணனை ஒடுக்குவதே தக்கது" என்றார்கள்.

அவர்கள் சொற்படியே ஆதிசேஷன் சகல நாகப் படைகளுடன் சென்று இராவணனை யெதிர்த்தான். அவனைக் கண்டதும் இராவணன் வில்லை வளைக்க ஆரம்பித்தான். அதற்குள் சேடன் ஆயிரம் படங்களையும் விரித்துச் சீறி இராவணனுடைய சேனைகளின் மீது

விஷாக்கினியைக் கக்கினன். அதனல் இராவண னுடைய தேர்த்தட்டும் கொடிச் சீலைகளும் எரிந்து அநேகம் இராக்ஷதர்களும் மடிந்தார்கள். இராவணன் திடுக்கிட்டு வில்லை வளைத்து எண்ணிறந்த பாணங்களைத் தொடுத்து அநேகம் நாகர்களை அதமாக்கி விட்டான். மற்ற நாகர்களும் அநேகம் இராக்ஷதர்களைக் கடித்துக் கொன்ருர்கள். மீதியாயிருந்த இராக்ஷதர்கள் பயந்து இராவணனிடம் வந்து கதறினர்கள்.

தசக்கிரீவன் அவர்களுக்குத் தைரியங் கூறிவிட்டு வாளாயுதத்தை யெடுத்துக் கொண்டு கீழே குதித்து எண்ணிறந்த நாகர்களை வெட்டிக் குவித்து இரண்டு வாயுவாஸ்திரங்களையும் சில அக்கினியாஸ்திரங்களையும் எஞ்சியிருந்த நாகர்மீது பிரயோகித்தான். அவற்ரு லும் அநேகம் நாகர்கள் இறந்து போனர்கள்.

அதன்மேல் வாசுகி, தட்சன், கார்க்கோடகன் முதலிய நாகர்கள் சினந்துவந்து இராக்ஷத சேனைக் குள் புகுந்து விஷாக்கினியைக் கக்கிப் பற்பல இராக்ஷ தர்களை மடித்து இராவணனுடைய தேகத்திலும் விஷத்தைச் சொரிந்து இராவணனையும் மூர்ச்சை யடையச் செய்தார்கள். இராவணன் சிறிது நேரத்தில் மூர்ச்சை தெளிந்து சிவசூலத்தை யெடுத்து விடுக்கப் போனன். அதைக்கண்டு அஷ்டமாநாகர்களும் மற்ற நாகர்களும் பயந்து ஆதிசேஷனிடத்தில் போய் "இராவணன் சூலத்தை யேவப்போகின்ருன்; அதற்கு முன் நிற்க எங்களால் முடியாது" என்று சொல்லி விட்டு ஓடிப்போனர்கள். சேடனுடைய மந்திரிகளும், அவனிடத்தில், "சிவசூலம் நம்மை நாசப்படுத்திவிடும்;

ஆதலால் அவன் அதனை எவுமுன்னரே நாம் அவனோடு சமாதானம் செய்துகொள்வது நல்லது" என்றார்கள்.

சேடன் அதற்கிசைந்து மாணிக்கங்களையும் மற்ற நிதிகளையும் திறைப்பொருள்களாக எடுத்துக் கொண்டு போய் இராவணனுக்கு முன்னே வைத்து, "இலங்காதிபரே! நான் உமக்குத் தோற்றேன்" என்று சொன்னான். இராவணன் மகிழ்ச்சியடைந்து அந்நிதிகளைப் பெற்றுக்கொண்டு திரும்பினான்.

தசமுகன் நிவாதகவசரோடெதிர்த்தல்.

அப்படித் திரும்பி வரும்போது தசக்கிரீவன் மகோதரனை நோக்கி, "இனி என்ன செய்யலாம்?" என்றான். உடனே மகோதரன், "தேவலோகத்தில் நிவாதகவசர்கள் என்ற அசுரர்கள் மூன்றுகோடி பேர்களிருக்கின்றார்கள்; அவர்களை வெல்லல் எவராலுமாகாது; நீர் அவர்களையும் வென்றால்தான் உம்முடைய திக்குவிஜயம் சிறப்படையும்" என்றான். இராவணன் அங்கே போர்க்கெழத் துணிந்தான்.

அப்போது பிரகஸ்தனும் மாரீசனும், "நீ யேன் வம்பிழுத்து விட்டு வேடிக்கை பார்க்கின்றாய்" என்று மகோதரனை நிந்தித்தார்கள். மகோதரன் சினந்து இராவணன் முகத்தைப் பார்த்தான். இராவணன், "எனக்கிதம்புரியும் மகோதரனை நீங்கள் நிந்தித்தால் உங்களை நான் தண்டிப்பேன்" என்று மாரீசனையும் பிரகஸ்தனையும் பயமுறுத்தினான். அவர்கள் பயந்து பேசாமலிருந்துவிட்டார்கள்.

அதன்மேல் இராவணன் சகல பரிவாரங்களோடும் நிவாதகவசர் பட்டணத்தையடுத்து மகோதரன் சொற்படி, தான் போர்க்கு வந்திருப்பதைத் தெரிவிக்

கும்படி அந்த அசுரர்களுக்கு அக்கினிக் கண்ணனைத் தூதனுப்பினான். அவன் சென்று நிவாதகவசர்களிடம் அந்த இராவணன் வருகையையும் விருத்தாந்தத்தையுங் கூறினான். அவர்கள் சினந்து, 'நாங்களும் யுத்தஞ் செய்ய ஆயத்தமா யிருக்கின்றோம்; அவனுக்கு வல்லமை யுண்டானால் இங்கே அவனை வரச்சொல்' என்று தூதுவனிடம் கூறினார்கள். அவன் திரும்பிவந்து அவர்கள் சொன்னதை இராவணனிடம் கூறினான். இராவணன் அதைக்கேட்டவுடன் "போருக்குச் செல்லலாமா? திரும்பிவிடலாமா?" என்று யோசித்தான். அப்போது மகோதரன் அவனுக்குத் தைரியமான வார்த்தைகளைக் கூறி ஊக்கத்தை உண்டாக்கினான்.

அதன்மேல் தசக்கிரீவன் போருக்கு ஆயத்தமாய்ச் சங்கத்தை யெடுத்து முழக்கினான். மற்ற இராக்ஷதர்களும் விற்களை வளைத்துக் குணத்தொனி செய்தார்கள். அந்த ஓசைகளைக் கேட்டதும் நிவாதகவசர்கள் கோபங்கொண்டு, முன்னேபோய் இராவணன் சேனைகளோடு போர் செய்யும்படி தங்கள் சேனைகளை அனுப்பினார்கள். இரண்டு படைகளும் எதிர்த்தன. மும்முரமான சண்டை நடந்தது. அந்தப் போரில் இரண்டு பக்கத்திலும் அளவற்ற சேனைகள் மாண்டு எங்கும் இரத்தவெள்ளம் பெருகிற்று. இரண்டு சேனைகளிலும் எட்டிலொரு பாகமே மிஞ்சி யிருந்தது. எஞ்சிய சேனைகளில் ஒவ்வொருவரும் தனித்தனி எதிர்த்து இளைத்து 'இனிப் போர் செய்யமுடியாது' என்று தங்கள் தங்கள் தலைவர்களுக்குத் தெரிவிக்கத் திரும்பிப் போய்விட்டார்கள்.

அவர்களுள் இராக்ஷதர்கள் இராவணனிடத்தில், "அந்த அசுரர்களோடெதிர்த்தல் எங்களால் முடியாது"

என்று சொல்ல, இராவணன் அவர்களுக்குத் தைரிய வார்த்தைகள் கூறிக்கொண் டிருந்தான். அசுர சேனு வீரர்களும் நிவாதகவசர்க ளிடத்தில், "எங்களால் அந்த இராக்ஷதர்களோடு போர் செய்தல் முடியாது" என்று கூறினுர்கள். அதைக் கேட்டதும் அவர்க ளுடைய மந்திரிகள் கோபத்துடன் புறப்பட்டு வந்து ஆயுதங்களேப் பிரயோகித்து இராவணனுடைய சேனே களே யெல்லாம் சின்னுபின்னப் படுத்திஞர்கள். உடனே இருபது வெள்ளம் இராக்ஷதர்கள் அவர்களுடன் எதிர்த்து அவர்களுடைய ஆயுதங்களே யெல்லாம் நாசப் படுத்திவிட்டு அளவற்ற அசுரர்களேக்கொன்று குவித்து அந்த அசுரப் பிணங்களே யெல்லாம் வாரி நாலாதிக்கு களிலும் எறிந்தார்கள். அந்தப் பிரேதங்கள் தேவர்க ளுடைய கற்பகச் சோலேயில் வீழ்ந்து நிறைந்தன.

அப்போது தேவர்களும், முனிவர்களும், சித்தர் வித்தியாதரர்களும் தேவேந்திரனிடத்திற் போய், "ஐயா! அமராதிபரே! இராக்ஷதர்கள் அசுரர்களேக் கொன்று வாரி யெறிகின்றுர்கள்; இதை யுணர்ந்தால் நிவாத கவசர்கள் வந்து இராவணனே டெதிர்ப்பார் கள்; அவர்கள் பொல்லாதவர்க ளாதலின், அவனேத் தொலேத்து நம் பக்கம் திரும்பினுலும் திரும்புவார்கள்; இந்த இராவணன் பலவிதத்திலும் நமக்கு இடையூறு களேயே செய்து வருகின்றுனே; நாம் இனி என் செய்யலாம்" என்று முறையிட்டார்கள்.

இந்திரன் அவர்களே நோக்கி, "அந்த இராவணன் பிரமா கொடுத்த வரத்தாலும், மகோதரனுடைய மித் திரபேத வார்த்தையாலும் அகங்காரங்கொண்டு துள் ளித் திரிகின்றுன்; எனினும் சீக்கிரத்தில் விஷ்ணு

மூர்த்தியால் ஒழிந்து போவான்; இந்தப் போரில் ஒருவரை யொருவர் வெல்லல் முடியாது; பிரமாவந்து அவர்களைச் சமாதானப் படுத்திவிடுவார்; ஆதலால் நமக்கொரு ஆபத்தும் வாராது; நீங்கள் பயப்பட வேண்டாம்" என்று தைரியங் கூறி அவர்களை அனுப்பி விட்டான்.

இவர்கள் செய்தி யிப்படியிருக்க, முன்னுரைத்த படி இராக்ஷதர்கள் அசுரர்களைக்கொன்று வாரியெறிந்த பின்பு நிவாதகவசர்களுடைய மந்திரிகள் மீதியாயிருந்த சேனைகளுடன் வீராவேசங்கொண்டு இராக்ஷதர்களுட னெதிர்த்துப் போர் புரிந்தார்கள். அப்போது பிரகஸ்தன், விருபாக்ஷன், மாரீசன் முதலியவர்கள், "இது வரை மந்திரிகள் போராடுகின்றார்களே யன்றி அந்த நிவாதகவசர்கள் வரவில்லை; ஆதலின், நாம் இந்த மந்திரிகளை வாட்டி விட்டால் அதன்மேல் அவர்கள் வருவார்கள்" என்று அந்த மந்திரிகளுடன் மும்முரமாக எதிர்த்து அவர்கள்மீது ஆயுதங்களைப் பிரயோகித்தார்கள். அவர்கள் வீரத்தோடு அந்த ஆயுதங்களைக் கண்டித்து இராக்ஷத மந்திரிகளைத் தளரச் செய்து அவர்களுடைய சேனைகளையும் சின்னபின்னப் படுத்தினார்கள்.

அதைக்கண்ட இராவணன் தன் மந்திரிகளுக்குப் பற்பல ஆயுதங்களையும் சேமத் தேர்களையும் உதவியாகக் கொடுத்தான். அவர்கள் அவற்றைப் பெற்றுக் கொண்டு அசுரமந்திரிகள்மீது அநேகம் கொடிய பாணங்களைப் பிரயோகித்தார்கள். அவர்களும் இராக்ஷதர்மீது அளவற்ற விஷக்கணைகளை எவினார்கள். இரண்டு பக்கங்களிலுமுள்ள மற்ற வீரர்களும் ஒருவர்மீ தொருவராகப் பல அம்புகளைச் செலுத்

கினர்கள். இவ்வாறு சிறிதுநேரம் அஸ்திர யுத்தம் நடந்தபின்பு இருதிறத்தாரும் கதாயுத்தஞ் செய்யத் தொடங்கினர்கள். அதில் இரண்டு பக்கத்திலும் அதிக சேதங்களுண்டாயின. பின்னர் இருதிறத்தாரும் இருப் புலக்கைகளைக் கொண்டு ஒருவரையொருவர் மோதி னர்கள். அந்தச் சண்டையிலும் அநேகர் சாய்ந்தனர். அத்தருணத்தில் இராவணன் வந்து ஆயிரக்கணக்கான பாணங்களைத் தொடுத்து அசுர்மந்திரிகளுடைய தேர் களை யொழித்து அவர்களையும் மயங்கச் செய்தான். அவர்கள் வேறு தேர்களிலேறிக் கோடிக்கணக்கான பாணங்களை இராவணன்மீது எவினர்கள். அவன் ஆத் திரங்கொண்டு எண்ணிலடங்காத அம்புகளை அவர்மீதே வினன். அப்போது அசுரமந்திரிகள்விட்ட அர்த்தசந்திர பாணங்கள் இராவணனுடைய வில்லையும் கவசத்தையும் போக்கித் தேகத்தையும் சல்லடைக் கண்களாகத் துளைத்ததால் அவன் மூர்ச்சையாகித் தேரின்மீது சாய்ந்தான்.

அத்தருணத்தில் நிவாதகவசருடைய மந்திரிகள் அக்கினி யாஸ்திரத்தை யேவி இராவணனுடைய சேனையிற் பாதியை அழித்து விட்டார்கள்; சிறிது நேரத்திற்குள் தசக்கிரீவன், மூர்ச்சை தெளிந்து மகோ தரனை அழைத்து அவனிடத்தில், "நம்முடைய சேனை களில் மூந்நூறுவெள்ளம் சைனியங்கள் அழிந்துபோய் விட்டன; அசுரர்கள் பலமுடையவர்களா யிருக்கின்றார் களே; இனியென்ன செய்கிறது?" என்று வினவினன். உடனே மகோதரன், "நீர் இப்போது இளைக்கக் கூடாது; யுத்தத்தை நடத்தும்; விரைவில் உமக்கு ஜெயமுண்டாகும்" என்று சொன்னன். அதனல்

இராவணன் தைரியங்கொண்டு உக்கிரத்துடன் பகைவரை எதிர்த்து ஓர் இடியாஸ்திரத்தையும், அக்கினியாஸ்திரத்தையும், அநேகம் அர்த்தசந்திர பாணங்களையும் அவர்கள் மீது பிரயோகித்தான். அவைகள் வேகமாகச் சென்று நிவாத கவசரின் மந்திரிகளுடைய சேனைகளை நாசமாக்கி, அவர்கள் மார்பிலும் பாய்ந்தன. அவர்கள் மூர்ச்சை யடைந்தார்கள். அவர்கள் படைகளில் எஞ்சி நின்றவர்கள் ஓடிவிட்டார்கள்.

அதன்மேல் நிவாதகவசர்களுடைய மந்திரிகள் மூர்ச்சை தெளிந்து திரும்பிப்போய்த் தங்கள் தலைவர்களிடத்தில், "இனி இராக்ஷதர்களோடெதிர்க்க எங்களால் முடியாது" என்று கூறினார்கள். அப்பொழுதே மூன்றுகோடி நிவாதகவசர்களும் சினந்து யுத்த கோலங்கொண்டு ஆயிரஞ் சிங்கங்கள் பூட்டிய வெண்கல இரதங்களிலேறி மந்திரிகளுடனும் எண்ணிறந்த படைகளுடனும் போர்ப்பறைகள் முழங்கப் புறப்பட்டு யுத்தகளம் போய்ச் சேர்ந்தார்கள்.

அவர்களைக் கண்டவுடன் இராவணன் மனங் கலங்கி மகோதரனை நோக்கி, "மந்திரி! நிவாதகவசர்களோ மிக்க பலசாலிகளா யிருக்கின்றார்கள். மேலும் அவர்களுடன் மிகுந்த படைகள் வருகின்றன; நம்முடைய சாமர்த்தியம் அவர்களிடம் செல்லாதுபோலிருக்கின்றதே; இனி என்ன செய்கிறது?" என்றான். அப்போது பிரகஸ்தன், மாரீசன் முதலியவர்கள் இராவணனிடத்தில், "நீ மகோதரன் பேச்சைக் கேட்டு வகை தெரியாமல் வந்து இந்தச் சங்கடத்தில் மாட்டிக் கொண்டாய்" என்று சொல்லி மகோதரனையும் நிந்தித்தார்கள். உடனே மகோதரன் இராவணனை நோக்கி,

"இலங்காதிபரே! இவர்களெல்லாம் உம்முடைய பலத்தை அறியாமல் பேசுகின்றார்கள்; இந்த நிவாத கவசர்கள் உமக்கு நிகராக மாட்டார்கள்; நீர் தைரியத்தை விடாமல் யுத்தஞ்செய்யும்; உமக்கு ஜெயமுண்டாகும்" என்று அவன் மனதைச் சாடு முறுக்குவது போல் முறுக்கிவிட்டான். அதன்மேல் அவன் தைரியங் கொண்டு போய் நிவாதகவசர்களோடெதிர்த்தான்.

அவர்களும் இராவணனும் ஒருவர்மீதொருவர் அஸ்திரப் பிரயோகஞ்செய்ய ஆரம்பித்தார்கள். முதல் யுத்தத்திலேயே இராவணன் கொடிய பாணங்களால் அவர்களுடைய அஸ்திரங்களைப் போக்கிச் சேனைகளில் பெரும் பாகத்தைச் சின்னாபின்னப்படுத்தி அவர்கள் தேகத்தையும் புண்படுத்தி விட்டான். அதனால் அவர்கள் ஆத்திரங்கொண்டு ஒரு அக்கினியாஸ்திரத்தைப் பிரயோகித்து இராவணனுடைய நூறு வெள்ளம் சேனைகளை நாசப்படுத்தி விட்டார்கள். அதைக்கண்டு தசக்கிரீவன் அநேகங் கோடி வருணாஸ்திரங்களை யேவி அவர்களுடைய அக்கினியாஸ்திரத்தைக் கண்டித்து மேலும் அளவற்ற அர்த்தசந்திர பாணங்களை விடுத்து அவர்களுடைய தேர்களையும் விற்களையும் கவசங்களையும் போக்கித் தேகங்களையும் சல்லடைக் கண்களாகத் துளைத்து விட்டான். அவர்களெல்லோரும் மூர்ச்சையடைந்தார்கள்.

அத்தருணத்தில் இலங்காதிபன் அநேகம் கதாயுதங்களைச் சுழற்றி யெறிந்து அவர்களுடைய சேனைகளை நாசப்படுத்தி மேலும் நூறுகோடி அர்த்தசந்திர பாணங்களை யேவி நூறுகோடி அசுரர்களின் சிரங்களை அறுத்துத்தள்ளினான். அவர்கள் வரப்பிரசாதிகளான

படியால் மீண்டும் அச் சிரசுகள் முளைத்தன. அதன் மேல் அவர்கள் வீராவேசத்தோடு இராவணன் மீது வேலைப் பிரயோகித்தார்கள். இராவணனும் தன் வேலாயுதத்தை அவர்மீது செலுத்தினன். இரண்டு வேல்களும் மோதிக்கொண்டு, அக்கினியைச் சொரிந்தன. பின்னர் இருதிறத்தாரும் சிறிதுநேரம் வரை ஒருவர்மீதொருவராகக் கொடிய அம்புகளை மாறிமாறிப் பிரயோகித்தார்கள். முடிவில் நிவாதகவசர்கள் பத்து அர்த்தசந்திர பாணங்களைப் பிரயோகித்து இராவணனுடைய பத்துத்தலைகளையும் அறுத்துத்தள்ளினர்கள்.

அதைக்கண்டு தேவர்கள் சந்தோஷித்தார்கள்; இராக்ஷதர்கள் கலங்கினர்கள். அசுரர்கள் ஜெயங் கொண்டோமென் றார்ப்பரித்தார்கள். அப்போது இராவணன் பெற்ற வரத்தால் அறுபட்ட தலைகள் மீண்டும் முளைத்தன. நிவாதகவசர்கள் ஆச்சரியப்பட்டு இது மாயையாயிருக்குமென்று மேலும் பன்முறை அச்சிரசுகளை அறுத்தார்கள். அவைகள் அறுக்க அறுக்க முளைத்துக் கொண்டே யிருந்தன. அதன் மேல் அவர்கள் ‘இவன் அறுபட்ட தலை முளைக்கும்படி வரம்பெற் றிருக்கின்றான் போலும்’ என்று மனஞ்சலித்து நின்றார்கள். அப்போது இராவணன் இனி என்ன விளையுமோ வென்றஞ்சி மகோதரன் முகத்தை நோக்கினன். மகோதரன், ‘முடிவான சமயத்தில் மனமிளைக்க வேண்டாம்; இனி வாளாயுதத்தைப் பிரயோகித்தால் ஜெயமுண்டாகும்’ என்று அவனுக் குரைத்தான்.

உடனே இராவணன், சிவபெருமா னருளால் பெற்ற வாளாயுதத்தை எடுத்து அபிமந்திரித்து அந்த

நிவாத கவசர்கள்மீது விடுத்தான். அந்த வாள் மகா உக்கிரத்துடன் புறப்பட்டு அந்த மூன்றுகோடி நிவாத கவசர்களுடைய சிரங்களையும் அறுத்துத் தள்ளிவிட்டு ஆகாயகங்கையில் ஸ்நானஞ்செய்து இராவணனிடம் வந்து சேர்ந்தது. அப்பொழுதே அசுரர்களுக்கு அறு பட்ட சிரசுகள் மீண்டும் முளைத்துக்கொண்டன. அதன் மேல் மகோதரன், 'இவர்கள் அறுபட்ட சிரம் முளைக்க வரம் பெற்றிருக்கின்றார்கள்; ஆதலின் இனி நீர் பிர மாஸ்திரத்தை இவர்மீது பிரயோகித்து விடும்' என்று இராவணனுக்குச் சொல்ல அவன் அவ்வாறே அதனை அவர்களுக்கு நேராக எவினன். நிவாதகவசர்களும் அதற்கெதிராகப் பிரமாஸ்திரத்தைப் பிரயோகித்தார் கள். அந்த இரண்டு அஸ்திரங்களும் இரண்டுவகைப் படைகளையும் நாசப்படுத்திக் கொண்டிருந்தன. எங் கும் பிணக்காடாய்க் குவிந்து விட்டது. சேனைகளை இவ்வாறு ஒழித்ததுமன்றி அந்த அஸ்திரங்கள் உலகங் களையும் தகிக்க ஆரம்பித்தன.

அப்போது பிரமதேவர், "இதேது விபரீதமாய் வந்து முடிந்தது! இந்த யுத்தத்தை நிறுத்தாவிட்டால் உலகங்களுக்குக் கேடு சம்பவிக்கும்" என்று உடனே சென்று இராவணாதி இராக்ஷதர்களையும், நிவாத கவசர் களையும் நோக்கி, "உங்களுடைய பிரமாஸ்திரங்களால் உலகங்களுக்குக் கேடுசம்பவிக்கும்போ லிருக்கின்றது; இவ்வாறு உலகங்களைக் கெடுப்பது சரியல்ல; ஆதலின் நீங்கள் யுத்தத்தை நிறுத்துங்கள்; சண்டை செய் தாலும் ஒருவரை யொருவர் வெல்லமாட்டீர்கள்" என்று சொன்னார்.

அதைக்கேட்டு நிவாதகவசர்கள், "இராவணன்

முதலில் தன் அஸ்திரத்தை வரவழைத்துக் கொண்டால் பின்னர் நாங்களும் எங்கள் அஸ்திரத்தை வரவழைத்துக் கொள்கிறோம்" என்று சொன்னார்கள். அதைக்கேட்டுப் பிரமதேவர் இராவணனை நோக்கி, "அப்பா! இந்த நிவாத கவசர்கள் உன்னால் அழிய மாட்டார்கள்; துவாபரயுகத்தில் நரநாராயண மூர்த்திகளாகிய அருச்சுனனாலும் கிருஷ்ணனாலுமே அழிவார்கள்; ஆதலால் நீ வீணே யுத்தஞ் செய்யாமல் பிரமாஸ்திரத்தை வரவழைத்து யுத்தத்தை நிறுத்திக் கொள்" என்றார். அதற்கு இராவணன், "அவர்கள் வாக்கினால் எனக்குத் தோற்றதாகச் சொன்னால் மாத்திரம் நான் சண்டையை நிறுத்துவேன்" என்றான்.

பிரமதேவர் இஃதேது சங்கடமா யிருக்கிறதென்று நிவாதகவசர்களிடம் சென்று, "இராவணன், விஷ்ணுவின் இராமாவதார காலத்தில் ஒழிவானே யன்றி இப்போதுங்களால் ஒழிய மாட்டான்; ஆதலால் உலக நன்மையைக் கருதி நீங்கள் அவனுக்குத் தோற்றதாகச் சொல்லி விடுங்கள்; அதனால் உங்களுக்கொரு குறைவுமில்லை" என்று இதமான வார்த்தைகளைச் சொல்லி அவர்களைச் சரிப்படுத்தி இராவணன் சொன்னபடியே சொல்லச்செய்து இரு கக்ஷியாரையும் சமாதானப்படுத்திப் பிரமாஸ்திரங்களை நிறுத்திக் கொள்ளச் செய்தார்.

அதன்மேல் இராவணன் சந்தோஷித்து நிவாத கவசர்களுடைய மாயாவித்தைகளைத் தனக்குக் கற்றுக் கொடுக்கும்படி அவர்களிடம் கேட்டான். அவர்கள் அதற்குச் சம்மதித்து அவனைத் தங்களுடைய பட்டணத்திற்கு அழைத்துக் கொண்டுபோய் ஒரு வருஷம்

வரை வைத்திருந்து அவனுக்கு விருந்துகள் செய்து தங்களுடைய தொண்ணூற்றென்பது மாயா வித்தைகளையுங் கற்றுக் கொடுத்து மரியாதையுடன் அவனை அனுப்பினார்கள். இராவணன் அளவற்ற ஆனந்தத்துடன் புஷ்பக விமானத்திலேறித் தன் படைகளோடு அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டு வந்தான்.

தசக்கிரீவன் காலகேயருடன் எதிர்த்தல்.

அவ்வாறு வரும்போது இராவணன் மந்திரிகளை நோக்கி, "அமைச்சரே! இனி நாம் இலங்கைக்குச் செல்லுவோம்" என்றான். மாரீசனும் பிரகஸ்தனும் "அதுவே சரி" யென்று சொன்னார்கள்.

அப்போது இராவணன் குடிக்குச் சனியாய்த் தோன்றிய மகோதரன் அவனை நோக்கி, "ஐயா! இலங்காதிபரே! உம்முடைய தங்கை வாழும் பட்டணத்தில் அறுபதினாயிரம் காலகேயர்க ளிருக்கின்றார்கள்; அங்குப் போய் அவர்களை ஜெயித்து உமது தங்கை சூர்ப்பனகியையும், அவள் கணவன் வித்துச் சிங்கனையும் அழைத்துக் கொண்டு போனால் நலமாயிருக்கும்" என்று சொல்ல, இராவணன் 'அந்தப்பட்டணம் எங்கேயிருக்கின்றது?' என்று மகோதரனிடம் கேட்டான். மகோதரன், "அஃது அமராவதிக் கருகிலிருக்கின்றது" என்று சொன்னான். அதன்மேல் இராவணன், "அந்தக் காலகேயரை ஜெயிக்க நம்மால் முடியுமோ?" என்றான். மகோதரன், 'எளிதில் ஜெயித்து விடலாம்' என்றான். மாரீசன் முதலியவர்கள், 'அங்கே செல்வது நல்லதல்ல' என்றார்கள். இராவணன் 'மகோதரன் பேச்சுக்குக் குறுக்கே பேசாதீர்கள்என்று உங்களுக்கு நான் எத்தனைமுறை சொன்னாலும் நீங்கள் பேசா

திருக்கிறீர்களில்லை; இனி ஏதாவது பேசினால் உங்களுக்குக் கெடுதி சம்பவிக்கும்' என்று அவர்களைச் சீறினான். அவர்கள் பேசாதிருந்து விட்டார்கள்.

அதன்மேல் தசக்கிரீவன் சகல படைகளுடன் சென்று காலகேயருடைய பட்டணத்துக் கருகிலிறங்கித் தன்னுடைய வருகையைத் தெரிவிக்கும்படி தூமகேது வென்பவனை அவர்களிடம் தூதாக அனுப்பினான். அவன் அவர்களிடஞ்சென்று இராவணனுடைய வீரப் பிரதாபச் செயல்களையும், அவன் யுத்தத்திற்கு வந்திருப்பதையும் தெரிவித்தான். அவர்கள் சினந்து, 'நாங்களும் யுத்தஞ்செய்ய ஆயத்தமா யிருக்கின்றோம்; அவனை யுத்தபூமிக்கு வரச்சொல்' என்று அத் தூதுவனிடம் கூறினார்கள். அவன் வந்து இராவணனிடம் அவர்கள் சொல்லியதைச் சொல்ல அந்த இராவணன் போர்க்கோலங் கொண்டு படைகளுடன் யுத்தகளம் வந்து சேர்ந்தான்.

அப்போது காலகேயர்கள் தங்கள் மந்திரிகளிடத்தில், "அகங்காரத்தோடு போர்க்கு வந்திருக்கும் அந்த இராவணன் விஷயத்தில் நாம் என்ன செய்யலாம்?" என்று கேட்டார்கள். அதற்கு அம்மந்திரிகள், "அந்த இராவணன், சிவபெருமானுடைய வரத்தினாலும் பிரமாவின் வரத்தினாலும் வல்லமை பெற்றுச் சகலரையும் அடக்கி வருகின்றானென்று இங்குள்ள அவன் மைத்துனன் வித்துச் சிங்கன் சொல்ல நாம் கேட்டிருக்கின்றோம்; அந்த அகங்காரத்தினாலேயே அவன் இங்கும் வந்திருக்கின்றான்; ஆதலின் அவனை நாம் இலகுவில் விடக்கூடாது; நன்றாக வாட்டி யனுப்பவேண்டும்" என்றார்கள்.

உடனே அவர்கள் நால்வகைப் படைகளுடன் புறப்பட்டு வந்து இராவணனுடன் எதிர்த்தார்கள். இரண்டு படைகளும் வீராவேசத்தோடு யுத்தம் புரிந்தன. அச்சண்டையில் இரண்டு பக்கத்திலும் அநேகம் இரதங்களும் குதிரைகளும் யானைகளும் அழிந்தன. எண்ணிறந்த வீரர்கள் ஒழிந்தார்கள். அதன்மேல் காலகேயருடைய மந்திரிகள் பற்பல அஸ்திரங்களைப் பிரயோகித்து இராக்ஷத சேனைகளை வாட்டினார்கள். பிரகஸ்தன் முதலியவர்களும் காலகேயருடைய சேனைகளை நாசஞ் செய்தார்கள். அதன்மேல் மாரீசன், விருபாக்ஷன் முதலியவர்களும் கதாயுதங்களால் காலகேயருடைய மந்திரிகளை மோதியடித்தார்கள். அந்த அடியினால் அவர்கள் இளைத்தோடிக் காலகேயரிடம் முறையிட்டார்கள். அப்பொழுதே அவர்கள் வேகங்கொண்டெழுந்து போய் இராவணனுக்கு முன்னே வில் வளைத்து நின்று அவனைப் பலவாறு நிந்தித்து வீரமொழிகளைக் கூறினார்கள். அப்போது இராவணன் எண்ணிறந்த பாணங்களைப் பிரயோகித்து அவர்களுடைய படைகளையும் ஆயுதங்களையும் வாகனங்களையும் நாசப்படுத்தி அவர்களையும் இளைக்கச் செய்து விட்டான்.

அத்தருணத்தில் மகோதரன், வாளாயுதத்தைப் பிரயோகிக்கும்படி இராவணனுக்குக் கண் சாடை காட்டினான். அவன் அவ்வாறே சிவனுடைய வாளைப் பிரயோகிக்க, அஃதவர்களுடைய சிரங்களை யறுத்து விட்டது. அவர்களும் வரப்பிரசாதிகளானதால் அறுபட்ட அவர்களுடைய சிரங்களெல்லாம் உடனே முளைத்துக் கொண்டன. அதன்மேல் அவன் பிரமாஸ்திரந் தொடுக்க, அவர்களும் பிரமாஸ்திரத்தைப் பிர

யோகஞ்செய்து அதனைத் தடுத்து விட்டு மேலும் அநேகம் அர்த்தசந்திர பாணங்களை யேவி அந்த இராவணனுடைய சிரங்களை யறுத்தார்கள். அவைகளும் மறுபடியும் முளைத்துக் கொண்டன. அதன் மேல் அவர்கள் வேலாயுதத்தைச் செலுத்தினார்கள். தசக்கிரீவனும் சிவனருளால் பெற்ற வேலையெடுத்து விடுத்தான். அந்த இரண்டு வேல்களும் மோதிக் கொண்டு எங்கும் அக்கினிச் சுவாலைகளைச் சொரிந்தபடியால் சகல உலகங்களிலும் உபத்திரவ முண்டாயிற்று.

அந்த உபத்திரவத்தைச் சகிக்கமுடியாமல் தேவர்கள் முதலிய சகலரும் சிவபெருமானிடம்போய் முறை யிட்டார்கள். அவர், "நாம் அந்த இராவணனுடைய தவத்திற்கிரங்கி அவனுக்குச் சில வரங்களைக் கொடுத்து விட்டோம்; அதனால் அவன் அகங்கரித்து இவ்வாறு உலகங்களுக் கெல்லாம் துன்பத்தைச் செய்கிறான்; எனினும், பின்னே தசரதகுமாரரால் ஒழிந்து போவான்; இப்போது நீங்கள் பிரமாவினிடம் சென்று உங்கள் குறையைச் சொல்லுங்கள்; அவர் உங்கள் துன்பமகல ஏதேனுமோ ருபாயஞ் செய்வார்" என்று கூறினார்.

அப்படியே அவர்கள் பிரம தேவரிடம் சென்று தங்களுக்கு நேர்ந்த துன்பத்தைச் சொல்லி முறையிட்டார்கள். அவர் அவர்களை நோக்கி, "நானும் அந்த இராவணனுக்கு வரங்கொடுத் திருக்கின்றபடியால் இப்போதவனை ஒன்றுஞ்செய்தல் இயலாது; எனினும் நான் அந்தக் காலகேயரையும் அவனையும் சமாதானப் படுத்தி யுத்தத்தை நிறுத்தி உங்கள் துன்பத்தை நீக்குகிறேன்; நீங்கள் அந்த இராவணனை ஒழிக்க

வேண்டுமானல் அதனை, என் பிதாவாகிய விஷ்ணு மூர்த்தியிடம் சொல்லுங்கள்; அவர் அதற்குத்தக்க மார்க்கங்கூறுவார்" என்று சொன்னர்.

உடனே அவர்கள் விஷ்ணுமூர்த்தியினிடம் சென்று தங்கள் குறைகளைச் சொன்னர்கள். அதற் கவர், "இராவணனுக்கோ பாதி ஆயுள் கழிந்துவிட் டது; இன்னும் பாதியும் சீக்கிரம் முடிந்துவிடும்; நாம் இராமாவதாரத்தில் அவனைச் சங்கரித்து விடுவோம்; அதுவரை நீங்கள் சற்றுப் பொறுமையோடிருங்கள்" என்று சென்னர். தேவர்களும் மற்றவர்களும் 'இப் போது அவசரத்துக் கொன்றும் உதவுவதாயில்லை' என்று விஷ்ணு மூர்த்தியிடம் வணங்கி விடைபெற்றுக் கொண்டு போய்விட்டார்கள்.

அதன்மேல் யுத்தகளத்தில் நின்ற இராவணன், தேவர்களுடைய செய்கையைத் தூதுவரால் உணர் ந்து தலையசைத்து மகோதரனை நோக்கி, "தேவர்கள் சிவன் முதலியவர்களிடத்தில் முறையிட்டதில் அவர்க ளுக்கொன்றும் அனுகூலம் ஏற்படவில்லைபோ லிருக் கிறது; அதனல் தான் தேவலோகம் நிர்ச்சந்தடியா யிருக்கின்றது" என்று சொன்னன். மகோதரன், "உம்முடைய சங்கதி யென்றால் யார்தான் பயப்பட மாட்டார்கள்!" என்று அவனை உற்சாகப்படுத்தினன். அதனல் இராவணன் துள்ளி யெழுந்து மேலும் மேலும் அளவற்ற ஆயுதங்களைப் பிரயோகித்து மீதியா யிருந்த எதிரிகள் சேனைகளை வாட்டி அச்சேனைக ளுடன் கலந்துவந்து யுத்தஞ்செய்த சூர்ப்பனகியின் புருஷனன வித்துச் சிங்கனையும் தாக்ஷணியமின்றிக் கொன்று வீரகர்ஜ்ஜனை புரிந்து நின்றான்.

அத்தருணத்தில் பிரமதேவர்வந்து இராவணனுக்கும் காலகேயருக்கும் சமாதான வார்த்தைகள் கூறி வெகு பிரயாசைப்பட்டுச் சண்டையை நிறுத்தி அவர்களைச் சமாதானப்படுத்திக் காலகேயர்களை இராவணனுக்குத் திறைசெலுத்தும்படி செய்தார். அதன்மேல் இராவணன் தன் படைகளுடன் சந்தோஷித்துச் சென்று ஆகாய கங்கையில் ஸ்நானஞ் செய்து பூஜைகளை முடித்துக்கொண்டு ஒரு குளிர்ந்த சோலையில் தங்கியிருந்தான்.

வருண குமாரர் பணிவு.

அப்போது அந்த இராவணன் இலங்கைக்குச் செல்ல விரும்பித் தன் எண்ணத்தை மந்திரிகளுக்குச் சொன்னான். அதைக்கேட்டு மாரீசனும் பிரகஸ்தனும் அவனை நோக்கி, "அப்பா இராவணா! இனி இலங்கைக்குச் செல்வதே நல்லது; நீயோ மகோதரன் பேச்சைக் கேட்டுச் செய்யத்தகாத காரியங்களையெல்லாம் செய்து வருகின்றாய்; உன் தங்கை சூர்ப்பனகியின் கணவனையும் கொன்றுவிட்டாயே; அவள் வந்து கதறுவாளே; அவளுக்கென்ன சமாதானம் சொல்கிறது" என்று சொன்னார்கள். தூமகேது, விருபாக்ஷன், ஓமகோபன், அகம்பன், சுதக்கிணன், வஜ்ஜிரமுஷ்டி முதலியவர்களும் இராவணனை வெறுத்து மகோதரனை நிந்தித்துப் பேசினார்கள்.

இவர்களுடைய வார்த்தைகளெல்லாம் இராவணனுக்குப் பிடிக்காததால் அவன் மகோதரன் தன் மனம்போற் பேசுவானென்று அவன் முகத்தை நோக்கினான். மகோதரன் மனவருத்தத்தோடு தசக்கிரீவனைப் பார்த்து, "நான் உமக்கு நன்மையே புரிந்துவர,

இவர்கள் என்னை நிந்திக்கின்றார்கள் ; இனி நீர் என்னிடம் எதையும் கேட்கவேண்டாம்” என்று சொன்னான். இராவணன், ‘அவர்கள் புத்தியில்லாமல் பிதற்றுகின்றார்கள் ; நீ அதைப்பற்றி வருந்தாதே ; நான் உன் யோசனைப்படியே எதையும் செய்வேன்’ என்று அவனைச் சமாதானப்படுத்தி, “இனிமேல் என்ன செய்யலாம்” என்று அவனைக் கேட்டான். அதற்கு மகோதரன், ‘வருணனிடத்தில் அநேகங்கோடி அப்சரஸ்திரீகளிருக்கின்றார்கள். நீ வருணனை வாட்டி அவர்களைச் சிறையெடுப்பாயானால் உனக்கு மிக்க மகிழ்ச்சியும் சிறப்புமுண்டாகும்’ என்றான்.

அப்பொழுதே இராவணன் படைகளுடன் வருணலோகத்திற்குச் சென்று சமுத்திர தீரத்தில் நின்று ‘அடா வருணா! சண்டைக்கு வாவா’ என்று கூவினான். அப்போது வருணன் தேவலோகம் போயிருந்தபடியால் வரவில்லை. அதனால் இராவணன் கோபித்து அக்கினியாஸ்திரத்தை யெடுத்துக் கடலில் செலுத்தினான். அந்த அஸ்திரத்தினின்றும் எண்ணிறந்த தணலாஸ்திரங்கள் தோன்றி உலகங்களை யெல்லாம் தகித்துச் சப்தசமுத்திரங்களையும் வறட்டிவிட்டன.

அதைக்கண்டு வருணன் புத்திரர்களாகிய கோமுகன், புஷ்கரன் என்னுமிருவர்களும் போர்க் கோலங்கொண்டு வந்து வருணாஸ்திரத்தை விடுத்து, இராவணனுடைய அக்கினியாஸ்திரத்தின் வேகத்தைத் தணித்தார்கள். பின் இராவணனுக்கும் அவர்களுக்கும் நெடுநேரம்வரை அஸ்திரயுத்தம்நடந்தது. அதன்மேல் மகோதரன்சொற்படி தசக்கிரீவன் சூலாயுதத்தைப் பிரயோ

கித்தான். அஃது உக்கிரமாகச் சென்றது. அப்போது 'சிவதியானம் செய்தால் இஃது உங்களை ஒன்றும் செய்யாது' என்று வருணன் புத்திரர்களுக்கு அசரீரிகூறிற்று. அவர்கள் அவ்வாறே சிவஸ்தோத்திரஞ் செய்துகொண்டிருக்கச் சூலமானது வந்து அவர்களைப் பார்த்துச் சிவனடியார்களென்று நினைத்து ஒன்றும் செய்யாமல் இராவணனிடம் திரும்பிவிட்டது. அப்போது வருணன் தேவி, இராவணனோடு சமாதானஞ் செய்துகொள்ளும்படி தன் பிள்ளைகளுக்குக் கூறினாள். அவர்கள் அதற்கிசைந்தார்கள். அப்படி அவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போதே இராவணன் மகோதரன் சொற்படி அங்கிருந்த நூறுகோடி அப்சரஸ்திரீகளையும் சிறை பிடித்துத் தன் விமானத்தி லேற்றிக்கொண்டு திரும்பி வந்தான்.

தேவமாதர் சிறையாதல்.

இராவணன் அவ்வாறு திரும்பி வரும்போது மகோதரனை நோக்கி, "இன்னும் இத்தகைய பெண்கள் எங்கேனு மிருக்கின்றார்களா?" என்று வினவினான். அவன், "தெய்வலோகத்துப் பெண்கள் இவர்களைக் காட்டினும் அழகு வாய்ந்தவர்கள்; அவர்களெல்லோரும் ஸ்நானத்தின் பொருட்டு இப்போது யமுனாநதிக்கு வந்திருப்பார்கள்; அங்கே நாம் சென்றால் அவர்களையும் சுலபமாகக் கைப்பற்றிச் செல்லலாம்" என்றான்.

அதைக்கேட்டதும் இராவணன் ஓரிடத்தில் அப்சரஸ்திரீகளை இறக்கித் தன் படைகளை அவர்களுக்குக் காவலாக வைத்துவிட்டுப் புஷ்பக விமானத்துடன் யமுனாநதி தீரத்துக்குச் சென்று தெய்வலோகத்து

ஸ்திரீகளைக் கண்டு அவர்களிடம் தன் பிரதாபங்களைக் கூறிப் பரிகாச வார்த்தைகள் பேசினான். அவர்கள் அவனைக் கண்டதும் பூனையைக் கண்ட எலிகளைப் போல் நடுங்கிப் புகலிடமின்றிப் புலம்பினார்கள். அவ்வாறு புலம்பியும் அவன் மனதிரங்காமல் அவர்களைப் பலவாறு துன்பப்படுத்திப் பிடித்திழுத்து அவர்களில் இறந்தவர்கள்போக மீதியிருந்த எண்பதுகோடி ஸ்திரீகளையுஞ் சிறையாக்கி விமானத்தி லேற்றிக் கொண்டு திரும்பி முன்னே அப்சரஸ்திரீகளை விட்ட இடத்திற்கு வந்து அவர்களையும் விமானத்தி லேற்றிக்கொண்டு மிக்க சந்தோஷத்துடன் இலங்கை நோக்கிப் போயினான்.

அதன்மேல் தேவர்க ளெல்லோரும், தங்கள் ஸ்திரீகளை இராவணன் சிறையெடுத்துப் போனதை யுணர்ந்து மனம் பதைத்து ஒன்றுஞ்செய்ய முடியாதவர்களாய் விஷ்ணுவினிடஞ் சென்று, "நாங்கள் எத்தனை நாளைக்குத்தான் இராவணன் செய்யும் துன்பங்களைச் சகித்துக்கொண் டிருப்போம்" என்று புலம்பினார்கள்.

அப்போது விஷ்ணுமூர்த்தி தேவர்களை நோக்கி, "நீங்கள் வருந்த வேண்டாம்; இராவணன் ஆயுள்நாட்களில் நாற்பது லட்சம் வருஷங்கள் கழிந்துவிட்டன; இனிச் சொற்ப நாட்களே யிருக்கின்றன; அவை முடிந்ததும் அவனும் முடிந்து போவான்; அவன் நாளடைவில் கெட்டுப்போவதற்கான விஷயங்கள் இப்பொழுது அவனுடன் கூடவே நடந்தேறி வருகின்றன; மகோதரனுக்கு இராவணன் ஆதியில் இழைத்த ஒரு தீங்கை அந்த மகோதரன் மனதில் வைத்துக்

கொண்டு அவனை அடுத்திருந்து வம்புகளில் இழுத்து விட்டு அவனுக்குப் பல சாபங்களும் விரோதங்களும் ஏற்படும்படி செய்துகொண்டே வருகின்றான்; அவ னைக் கெடுப்பது மகோதரனுடைய முக்கிய வேலையா யிருக்கின்றது; அஃதன்றியும் அந்த இராவணன் சூர்ப் பனகியின் கணவனையும் கொன்றுவிட்டான். அதனால் இனி அவளும் உட்பகைகொண்டு அவன் குடியைக் கெடுக்கக் கங்கணங் கட்டிக்கொள்வாள்; இப்படிப் பலவகையிலும் அவனுக்குக் கேடுகள் சம்பவிக்கப் போகின்றன; ஆதலால் நீங்கள் அடிக்கடிவந்து என் னைத் தொந்தரவு செய்யாமல் இன்னும் கொஞ்சக்காலம் பொறுத் திருங்கள்" என்று சொல்லி அவர்களை அனுப்பிவிட்டார்.

இயக்ககின்னர மாதர் சிறைப்படல்.

அதன்மேல், முன்னுரைத்தபடி திரும்பிவந்த இராவணன் மகோதரனை நோக்கி, "இன்னும் எங்கே யாவது நாம் சிறையெடுக்க வேண்டிய ஸ்திரீகளிருக்கி றார்களா?" என்று கேட்டான். அவன், "பகீரதி தீரத் தில் பத்து லட்சம் கின்னர ஸ்திரீகள் நீர்விளையாட வருவார்கள்; அளகையில் எண்ணிறந்த யட்ச கன்னி கைகளிருக்கின்றார்கள்" என்று சொல்லி மேலும் பற்பலவகைக் கன்னிகைக ளிருக்கும் பற்பல விடங் களையும் அவனுக்குத் தெரிவித்தான்.

இராவணன் அந்த இடங்களுக் கெல்லாஞ் சென்று ஆங்காங்குள்ள பெண்களை யெல்லாம் சிறை பிடித்துக் கொண்டு திரும்பினான். அப்படி வரும் போது அந்த ஸ்திரீகளெல்லோரும் இராவணனைப் பல்வாறு தூஷித்து அவனுக்குச் சாபங்கொடுத்துக்

கொண்டே போனார்கள். அப்போது இராவணன் மகோதரனை நோக்கி, "இவர்களிடும் சாபத்தைக் கேட்க முடியவில்லையே; இதற்கென்ன செய்கிறது?" என்றான். அதற்கு மகோதரன், "இப்படி யெல்லாம் பேசினால் நீர் அவர்களை விட்டு விடுவீரென்று நினைத்து அவர்கள் இவ்வாறு கதறிக்கொண்டு வருகின்றார்கள்; நீர் அவர்களுடைய வார்த்தைகளைச் சிந்திக்கவேண்டாம்" என்று சொன்னான். பின்னர் இராவணன் அடங்கா மகிழ்ச்சியுடன் சகல மேளவாத்தியங்களும் முழங்க இலங்கைபோய்ச் சேர்ந்தான்.

அத்தியாயம்—6.

சூர்ப்பனகி புலம்புதல்.

அவ்வாறு இராவணன் இலங்கை சேர்ந்து மகிழ்ச்சி யுற்றிருக்கும் போது, சூர்ப்பனகி, கணவனிறந்த செய்தியைக் கேள்விப்பட்டு இரணகளத்திற்கு ஓடி இறந்து கிடந்த புருஷனைக் கண்டு தரையில் வீழ்ந்து புரண்டு மார்பிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு புலம்பி யழுது ஆருத்துயரத்துடன் அங்கிருந் தோடிவந்து இராவணன் சபையில் அடியற்ற மரம்போற் சாய்ந்து கதறி அவனை நோக்கி, "அந்தோ! அண்ணா! சிறிதும் தாக்ஷணியமின்றி என் கணவனையுங் கொன்று என்னை அறுதலி யாக்கிவிட்டீரே; உம்முடன் பிறந்த நான் இப்படி யிருப்பது தகுதியாகுமோ? நீர் மாத்திரம் அளவிறந்த மாதர்களோடு கூடி வாழ்ந்து கொண்டு என்னைக் கைம்பெண்ணாக்கிக் கதற விட்டீரே; உமக்குத் தெய்வந் துணைபுரியுமா?" என்று அவனைப் பலவாறு நிந்தித்துப் புலம்பினாள்.

அப்போது தசக்கிரீவன், "இஃதென்ன பேரிழுவா யிருக்கின்றதே; நாம் மகோதரன் பேச்சைக் கேட்டு அங்கே சண்டைக்குப் போனதால் இப்பழி நேர்ந்தது" என்று மனங் கலங்கி மகோதரனை நோக்கினான். அவன் சூர்ப்பனகியின் விஷயத்தில் மனதிற்குள் மகிழ்ந்தா னெனினும் வெளிக்குத் துக்கமுறுபவன் போல நடித்து, இராவணனை நோக்கி, "ஐயா! சண்டையில் நீர் முன்பின் யோசித்துப் பாராமல் மைத்துனனையும் கொன்று விட்டீர்; கோபம் மிகுந்தால் யாருக்கும் கண் தெரியாது; இஃது அறியாமையால் நடந்த காரியமா யிருக்கிறது; வித்துச் சிங்கனுக்கும் அப்படி விதி யேற்பட் டிருந்தது போலும்; ஆயினும் உமது தங்கையின் நிலைமையானது பார்க்கப் பரிதாபமா யிருக்கிறது; நீர் அவளுக்குத் தேறுதல் கூறித் துயரம் நீங்கத்தக்க மார்க்கத்தைச் செய்யும்; தண்டகாரண்யத்தில் உம்முடைய தாயாதிகள் பதினாலாயிரம் பேர்களிருக்கின்றார்கள்; அவர்களிடம் இவளை அனுப்பி விட்டால் அவர்கள் இவளைப் பாதுகாத்துக் கொள்வார்கள்" என்று இராவணனுக்கு மேல் நடக்கவேண்டிய கெடுதிகளுக்கு அஸ்திவாரம் போட்டுச் சொன்னான்.

இராவணன் அவ்வாறே சூர்ப்பனகிக்குத் தேறுதல் கூறி அவளைத் தண்டகாரண்யத்தில் தன்னுடைய தாயாதிகளுடன் போயிருக்கும்படி அனுப்பினான். அவள் அவன்மீது உட்பகைகொண்டு, "எப்படியும் உன் குடியை நான் கெடுத்து விடுகிறேன்" என்று தண்டகாரண்யம் சேர்ந்து கரதூஷணாதியர்களோடு கூடி இராவணனைக் கெடுக்கும் சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.

அத்தியாயம்—7.

தசமுகன் மதுவினோ டெதிர்த்தல்.

அதன்மேல் இராவணன், திக்குவிஜயம் செய்து வந்ததில் ஏற்பட்ட ஜெயங்களை யெல்லாம் இலங்கையி லிருந்த தன் சுற்றத்தாருக்குச் சொல்லி மண்டோதரி யுடன் மகிழ்ச்சி யுற்றிருந்தான்.

அவன் திக்குவிஜயத்திற்குச் சென்ற பின்பு இந்திரசித்து தன் தந்தையினும் சிறந்த வல்லமைகளைப் பெறக்கருதி நிகும்பலைக்குப் போய்த் தங்கள் குல குருவாகிய சுக்கிராசாரியின் உதவிகொண்டு சிவபெருமானை நோக்கிக் கோமேதம், அசுவமேதம், பவுண்டரிகம், இராஜசூயம் முதலாக ஆறு யாகங்களைச் செய்து வேண்டிய வரங்களைப் பெற்று ஏழாவது ஒரு யாகத்தைச் செய்துகொண் டிருந்தான்.

அவன் அவ்வாறு யாகஞ்செய்யப் போயிருப்பதையும், இராவணன் திக்குவிஜயத்திற்குப் போயிருப்பதையும், கும்பகர்ணன் நித்திரை செய்வதையும் உணர்ந்து மதுவென்னும் அசுரன், சுமாலியின் புத்திரியும், இராவணனுக்குச் சிறியதாயுமாகிய கும்பிநசியென்பவளைச் சிறை யெடுத்துக் கொண்டுபோய்விட்டான். இலங்கையிலிருந்த விபீஷணன் முதலியவர்கள் இராவணன் வந்தபின்பு அவனிடம் இச்செய்தியைத் தெரிவிக்கலா மென்றிருந்தார்கள். அப்படி யிருக்கும்போது தான் இராவணன் மேற்கூறியபடி இலங்கையில் சேர்ந்து சந்தோஷ முற்றிருந்தான்.

அப்படி யிருந்தவன் மறுதினம் சபைக்கு வந்து இந்திரசித்து அங்கே வாராததால் அங்குள்ளவர்களை

நோக்கி, "மேகநாதன் எங்கே?" என்று வினவினான். அவர்கள், "அவர் இலங்கையில் இல்லை; வேறெங் கேயோ சென்றிருக்கின்றார்" என்று சொன்னார்கள். அதன்மேல் இராவணன் தூதுவர்களை யனுப்பி இந்திர சித்து இருக்கு மிடத்தைக் கண்டு வரச் செய்து, அவன் நிகும்பலைக்குச் சென்று யாகஞ் செய்கின்றா னென்பதை யுணர்ந்து அங்கே போய்த் தன் மகனைக் கண்டு "நீ என் இந்த யாகங்களைச் செய்கின்றாய்?" என்று வினவினான்.

அப்போது சுக்கிராசாரி இராவணனிடத்தில், "இலங்காதிபரே! உம்முடைய புத்திரன் பரமசிவனை நோக்கித் தவத்தையும் பல யாகங்களையும் செய்து அவரிடத்தில் அழிவில்லாத இரதத்தையும், வில்லையும், கவசத்தையும், அக்ஷய தூணியையும், சிறந்த அஸ்தி ரங்களையும், மாயா வித்தைகளையும், மிக்க பலத்தையும் பெற்றுக்கொண்டான்" என்று சொன்னார். இராவ ணன் மகிழ்ந்து, "என்மகன் எல்லா வரங்களையுந்தான் பெற்றுக் கொண்டானே; இன்னு மெதற்கு உடம் பிளைக்க யாகஞ் செய்யவேண்டும்" என்று அப்போது இந்திரசித்து செய்துகொண் டிருந்த யாகத்தை நிறை வேற்றச்செய்து சுக்கிரனை அவரிருப்பிடத்திற் கனுப்பி விட்டு இந்திரசித்தை அழைத்துக்கொண்டு இலங்கை வந்து சேர்ந்தான்.

அப்படி வந்தவன் ஒரு நாள் தான் கொண்டுவந்த காந்தருவ ஸ்திரீகள் முதலியவர்களைப் பயமுறுத்த விரும்பி அவர்களைத் தன்னிடம் இழுத்துக்கொண்டு வரும்படி சில சேவகர்களை அனுப்ப, அவர்கள் அவ் வாறே கொண்டுபோனார்கள். அந்த ஸ்திரீகள் வீதி வழியே கதறிக்கொண்டு சென்றார்கள்.

அவர்களுடைய பரிதாப நிலைமையைக் கண்ட தும் விபீஷணன் மனம் பதைத்து இராவண னிடம் சென்று, "அண்ணு! குலஸ்திரீகளை இவ்வாறு துன்பப் படுத்துவது தகாது; நீ திக்குவிஜயத்திற்குச் சென்றிருந்த காலத்தில் மது வென்பவன் வந்து உன்னுடைய சிறிய தாயாகிய கும்பிநசி யென்பவளைச் சிறை யெடுத்துக் கொண்டு போயிருக்கின்றுன்; நீ அதைக் கவனிக்காமல் இந்தத் துஷ்ட காரியங்களைச் செய்துகொண் டிருக்கின்றுயே" என்று சொன்னுன்.

அதைக் கேட்டவுடனே இராவணன் அந்த ஸ்திரீகளைத் துரத்திவிட்டு மிக்க கோபங்கொண்டு, "அந்த மதுவென்பவனை நான் இப்பொழுதே ஜெயித்து அவனுடைய ஸ்திரீகளையும் சிறையெடுத்துக்கொண்டு வருகின்றேன்" என்று சொல்லித் தன்னுடைய சேனைகளில் சிலவற்றை முன்னே மதுவென்பவ னிருக்குமிடத்திற்கனுப்பி விபீஷணனை இலங்கைக்குக் காவல் வைத்துப் பின்னர் கும்பகர்ணன் இந்திரசித்து முதலியவர்களையும், சுமாலி, மாலியவான் முதலியவர்களையும், தனக்குரிய நால்வகைப் படைகளையும் அழைத்துக் கொண்டு தானும் மதுபுரம் போய்ச் சேர்ந்தான்.

அவன் படைகளுடன் வந்திருப்பதை யுணர்ந்த கும்பிநசி யென்பவள் புறப்பட்டுவந்து தன் தகப்பன்மார்களைக் கண்டு வணங்கி இராவணனை நோக்கி, "அப்பா! என்னை அந்த மதுவென்பவர் சிறை யெடுத்துக் கொண்டு வந்தது உனக்கிழிவே; எனினும் நான் அவர் வசப்பட்டு அவருக்கு மனைவியாய் விட்டேன்; இனிமேல் நீ அவரைக் கொன்றுல் நான் அமங்கலி

யாய்ப் போவேன்; ஆதலால் எனக்கு நீ மங்கலியப் பிச்சை தரவேண்டும்" என்று கேட்டுக் கொண்டாள்.

இராவணன் அவளுடைய வார்த்தைக் கிணங்கி, 'அப்படியானால் நான் மதுவென்பவனைக் கொல்லாமல் விடுகின்றேன்; நான் தேவர்களுடன் சண்டைக்குப் போவதால் அவனை எனக்குச் சகாயமாய் வரச்சொல்' என்று அவளிடம் சொன்னான். அப்போது மது தூங் கிக் கொண் டிருந்தபடியால் கும்பிநசி போய் அவனை யெழுப்பி அவனிடம் நடந்ததைக் கூறி இராவண னிடம் போகும்படி சொன்னாள். அவன் உடனே வந்து இராவணனைத் தன் நகரத்திற் கழைத்துச் சென்று அவனுக்கு விருந்துகள் செய்தான்.

அத்தியாயம்--8.

இராவணனுக்கு அரம்பையும் நளகூபரனும் சாபமிடல்

மதுபுரத்தில் இராவணன் விருந்துண்டு களித்து ஒரு நாள் தங்கி மறுநாள் கும்பகர்ணன், இந்திரசித்து, மது முதலியவர்களுடன் புறப்பட்டுத் தேவலோ கத்தை நாடிச் சென்று நடுவழியில் ஒரு குளிர்ந்த சோலையைக் கண்டு அதில் தங்கி யிருந்தான். அவ் வாறு தங்கியிருக்கும்போது அவன் அந்தச்சோலையின் அலங்காரத்தைப் பார்க்க விரும்பித் தனியே சென்று ஓரிடத்தில் உலாவிக்கொண் டிருந்தான். அப்போது அரம்பை அலங்கரித்துக்கொண்டு தனக்குரிய நாயக னாகிய நளகூபரனிடம் செல்வதற்கு அந்த வழியாக வந்தாள்.

இராவணன் அவளைக்கண்டு, "பெண்ணே! நீ யார்? எங்கே செல்கின்றாய்?" என்று வினவினான். அவள் தன்னுடைய வரலாற்றையும், தான், தன் நாயகனிடம் செல்வதையும் கூறினாள். அவன் அவளை வருத்துதற்கு அவளிடம் நெருங்கினான். அதைக்கண்டு அரம்பை நடுங்கி, அவனை நோக்கி, "ஐயா! என்னுடைய நாயகராகிய நளகூபரர் புலஸ்தியருடைய புத்திரருக்குப் பேரன்; அந்த முறையிற் பார்த்தால் நான் உமக்கு மருமகளாவேன்; ஆதலின் நீர் எனக்குத் தீங்கியற்ற நினைப்பது நீதியாகாது" என்று சொன்னாள். இராவணன் 'வேசைகளுக்கும் முறையுண்டோ?' என்று அவளை வைது பலவிதமாகத் துன்பப்படுத்தினான். அதன்மேல் அவள் மனம்பதைத்து இராவணனை நோக்கி, "நீ இனிப் பதிவிரதைகளைத் தீண்டினால் என் வயிறு பற்றி யெரிவதுபோல எரிந்து போவாய்" என்று சாபமிட்டுவிட்டு நளகூபரனிடம் சென்று, இராவணன் தன்னைத் துன்பப்படுத்தியதைக் கூறினாள். அவன், "இனி அந்தத் தசக்கிரீவன் பதிவிரதைகளைத் தொடுவானாகில் அவனுடைய பத்துத் தலைகளும் வெடித்துப்போகும்" என்று சாபமிட்டான்.

அத்தியாயம்—9.

இந்திரன் சிறைப்படல்.

அதன்மேல் இராவணன் தன் சேனைகளிருக்குமிடத்திற்குத் திரும்பிவந்து அன்றிரவு அங்கே தங்கியிருந்து மறுநாளுதயத்தில் புறப்பட்டுத் தெய்வலோகத்தை நோக்கித் தேவர்களுடன் போர்செய்யப்

போயினன். அதை யுணர்ந்த இந்திரன், சில தேவர்களுடன் போய் விஷ்ணு மூர்த்தியைக்கண்டு இராவணன் சண்டைக்கு வருவதை அவரிடம் கூறி வருந்தினன். அதற்கு அவர் "நாமே அந்த இராவணன் முதலியவர்களைச் சங்கரித்து உங்களை இரக்ஷிப்போம்; நீங்கள் பயப்படாமல் போயிருங்கள்" என்று கூறினர். இந்திரன் சற்று தேறுதலுடன் திரும்பிவந்தான்.

அவன் வருவதற்குள் இராவணன் படைகள் தேவலோக மெங்கும் பரவி ஆரவாரித்தன; அப்போது அங்கிருந்த தேவர்கள் அப்படைகளுடன் எதிர்த்துப் போர்புரிந்தார்கள். அந்த யுத்தத்தில் அநேகம் இராக்ஷத சேனைகள் மடிந்தன; மேலும் தேவர்கள் இராக்ஷதர்களை நாசஞ்செய்துகொண் டிருந்தார்கள். அப்போது இராவணன், தேவர்களைச் சின்னபின்னப் படுத்தும்படி தன் பாட்டனுகிய சுமாலியை ஏவினன். சுமாலி, பானுகோபன், துன்முகன் முதலிய சேனுதிபதிகளோடு, பலவாறு சிதைந்து நின்ற சேனைகளையுங் கூட்டிக்கொண்டு போய்த் தேவர்களுடன் எதிர்த்து அநேகம் ஆயுதங்களைப் பிரயோகித்து அவர்களில் அநேகரை மடித்தான். தேவர்களும் பல இராக்ஷதர்களைக் கொன்றூர்கள். சாவித்திரனென்னும் தேவ சேனுதிபதி தண்டாயுதத்தால் மோதிச் சுமாலியைக் கொன்றூன். இராக்ஷதப்படைகள் பயந்தோடின.

அப்போது மேகநாதன் அந்தச் சேனைகளைத் தடுத்துத் தன்னுடன் கூட்டிக்கொண்டு தேவசேனைகளுடன் எதிர்த்து வீரத்துடன் யுத்தம் புரிந்தான். அவனேடு இந்திரன் மகனுகிய சயந்தன் எதிர்த்தான். இருவர்க்கும் மும்முரமான யுத்தம் நடந்தது. சிறிது

நேரத்தில் மேகநாதன் சயந்தனை மூர்ச்சை யடையச் செய்துவிட்டான். அதன்மேல் சயந்தனுடைய பாட்டனாகிய புலோமனென்பவன் மேகநாதனுடன் எதிர்த்து யுத்தம் பண்ணிக்கொண் டிருந்தான். அப்போது பிரமதேவர் இந்திரனிடம் சென்று சயந்தன் மூர்ச்சை யடைந்ததையும், புலோமன் மேகநாதனுடன் யுத்தம் புரிவதையும் கூறினர்.

இந்திரன் கோபங்கொண்டு சகல படைகளுடன் தேரேறி யுத்தகளத்திற்கு வந்தான். இராவணன் அவனோடெதிர்க்கப் போனன். அப்போது இந்திரசித்து வந்து இராவணனை நோக்கி, "இந்த அற்பனாகிய இந்திரனை ஜெயிக்க நீர் போகவேண்டுமோ? நான் சென்று இவனை ஜெயித்து வருகின்றேன்" என்று சொல்லி அவனை நிறுத்திவிட்டு இந்திரனுடன் எதிர்த்து எண்ணிறந்த பாணங்களைச் செலுத்திப் பயங்கரமான யுத்தம்புரிந்தான். அந்த யுத்தத்தில் தேவர்களுடைய நால்வகைப் படைகளிலும் அளவற்ற சேதங்களுண்டாயின.

அப்படி இந்திரசித்து தேவர்களைச் சின்னபின்னப் படுத்திக்கொண் டிருக்கும்போது கும்பகர்ணன் எமனைப்போற் புகுந்து தண்டாயுதத்தினல் மோதி அநேகம் தேவர் சேனைகளை யொழித்துவிட்டான். அதைக்கண்டு உருத்திரர், வசுக்கள், அருக்கர், மருத்துவர் முதலிய பலவகைத் தேவர்களும் திரண்டு சதுரங்க சேனைகளுடன் வந்தெதிர்த்து எண்ணிறந்த ஆயுதங்களைச் செலுத்திக் கும்பகர்ணனுடைய தேகத்தைத் துளைத்து அளவற்ற இராக்ஷத சேனைகளையும் சின்னபின்னப் படுத்தினர்கள். அப்போது இராவணன்

உக்கிரகோபங்கொண்டு வந்து அக்கினி மயமான பாணங்களைத் தொடுத்துத் தேவர் சேனைகளைச் சங்காரம் பண்ணினான். அதைக்கண்ட இந்திரன் சினந்து அவ்விராவணனுடைய மார்பிலும் தலைகளிலும் நிறையும்படி அநேகம் அக்கினிச் சரங்களை யேவினான். இராவணனும் இந்திரன்மீது பாணவருஷங்களைச் சொரிந்தான். அவ்விருவருடைய படைத் தலைவர்களும் ஒருவரோடொருவர் எதிர்த்து யுத்தம் பண்ணினார்கள். அந்தப்போரில் இராக்ஷத சேனைகள் மிகுதியும் மடிந்தன.

அதுகண்ட இராவணன் பொறுமல் தேவர் சேனைக்கு நடுவில் தன் இரதத்தைச் செலுத்திக் கொண்டுபோய்த் தேவர்களை வாட்டினான். அப்பொழுது இந்திரன், 'இந்த இராவணனை இப்பொழுதே ஒழித்து விடுகின்றேன்' என்று தேவர்களிடம் சொன்னான். அவன் அவ்வாறு சொல்லி வாய் மூடுவதற்கு முந்தியே இராவணன் அவனுக்கெதிரில் வந்தான். அப்போது இந்திரன் அதிகப்படைகளைச் சேர்த்துக் கொண்டு வரவேண்டுமென்று மறைந்தோடினான். அவன் ஓடியபின் இராவணன் நாலாதிக்குகளிலும் தன் தேரைச் செலுத்தித் தேவர்களைக் கலக்கினான். அதற்குள் இந்திரன் எண்ணிறந்த படைகளைச் சேர்த்துக் கொண்டுவந்து இராவணனோடெதிர்த்தான். அவனுடைய வீரத்தைப் பார்த்ததும், 'இன்றைக்கு இராவணன் மீளுவதரிது' என்று இராக்ஷதர்கள் கதறினார்கள்.

அத்தருணத்தில் இந்திரசித்து கோபங்கொண்டு வந்து தன் தகப்பனைச் சுற்றிக்கொண்டிருந்த தேவர்

சேனைகளைச் சிதைத்து இந்திரனுடைய தேரைப் போக்கி அவன்மீதும் எண்ணிறந்த பாணங்களைப் பிரயோகித்து அவன் நிலைகுலையும்படி செய்தான். அதன்மேல் இந்திரன் ஐராவதத்தி லேறிக்கொண்டு உக்கிரமான கோபத்துடன் பற்பல கொடிய பாணங் களைத் தொடுத்து இராக்ஷத சேனைகளைச் சிதறவடித்து இந்திரசித்துவின் நெஞ்சந் திடுக்கிடும்படி செய்தான்.

அப்போது மேகநாதன், 'இனி இந்த இந்திரனை மாயையால் தான் வெல்லவேண்டும்,' என்று உலக மெங்கும் இருளும்படி ஒரு மாயையைச் செய்தான். அந்த மாயையால் தேவர்களெல்லோரும் மயங்கி ஒன்றுந் தோன்றமல் மூர்ச்சையடைந்துவிட்டார்கள். இந்திரனும் சித்தப்பிரமை கொண்டவன்போல் மயங்கி நின்றான். அப்படி யாவரும் மயங்கிய சமயத்தில் மேகநாதன் எமனுடைய பாசத்தினாலே இந்திரனைக் கட்டிக் கொண்டுபோய் இராவணக்கு முன்னே நிறுத்தி னான். தசக்கிரீவன் அளவற்ற மகிழ்ச்சி யடைந்து மகனைக் கொண்டாடினான்.

அதன்மேல் இராவணன், தன் பரிவாரங்களுடன் இந்திரனைக் கொண்டுபோய் இலங்கையில் சிறைக் கூடத்தி லடைத்துவிட்டு மகிழ்ச்சியுற் றிருந்தான். அப்படி யிருக்குங் காலத்தில் தேவர்களெல்லோரும் பிரமதேவரிடம் சென்று இராவணன் இந்திரனைப் பிடித்துச் சிறைப்படுத்தி வைத்திருப்பதைக் கூறி முறை யிட்டார்கள். பிரமா அந்தத் தேவர்களை அழைத் துக்கொண்டு இராவணனிடம் சென்று, "இலங்காதி பனே! மூன்றுலகங்களிலும் உனக்கிணையானவர்க ளில்லை; உன்மகன் மேகநாதனே இந்திரனையும் ஜெயித்

துச் சிறைப்படுத்தினன்; அதனால் அவனுக்கு இன்று முதல் இந்திரசித்தென்னும் பெயர் வழங்கக்கடவது; உன்னுடைய வல்லமைக் கஞ்சித் தேவர்கள் உன்னிடம் பணிவுடையவர்களாய் வந்திருக்கின்றார்கள்; அவர்கள் தங்கள் தலைவனாகிய இந்திரன் சிறைப்பட்டதால் வருந்துகின்றார்கள்; ஆதலின் நீ அவனைச் சிறைநீக்கி விட்டுவிடு" என்று இதமான வார்த்தைகளைக் கூறினார்.

அப்போது இராவணன் பிரமாவை நோக்கி, "நான் இந்த உலகமுள்ள வரையிலும் அழியாதிருக்கும்படி எனக்கு நீர் நித்தியத்துவத்தைக் கொடுப்பீரானால் நான் இந்திரனைச் சிறைநீக்கி விடுகின்றேன்" என்று சொன்னான். அதற்குப் பிரமா, "ஈசுவரன் ஒருவருக்கு மாத்திரந்தான் நித்தியத்துவமுண்டு; அப்படியிருக்க நீ ஆகாத காரியத்தைக்கேட்பது தகுதியன்று" என்று கூறினார். அதைக்கேட்டு இந்திரசித்து, "அப்படியானால் நான் இனிமேற் செய்யும் யாகத்தில் உண்டாகும் இரதத்தில் நான் ஏறி யுத்தஞ்செய்தால் எனக்கெவராலும் மரணமுண்டாகா திருக்கும்படியான வரத்தையாவது நீர் கொடும்; நாங்கள் இந்திரனைச் சிறை நீக்கிவிடுகின்றோம்" என்று பிரமாவிடம் சொன்னான். அவர் அப்படியே வரங்கொடுத்தார்.

பின்னர் இந்திரசித்து தேவேந்திரனைச் சிறையினின்று விடுதலை செய்து பிரமாவினிடம் கொண்டுவந்து நிறுத்தினன். இந்திரன் வெட்கமும் துக்கமுமுடையவனாய்த் தலைகுனிந்து நின்றான். அப்போது பிரமதேவர் அவனை நோக்கி, "தேவராஜனே! முன்னர் உனக்கேற்பட்ட கௌதமர் சாபத்தால் இத்தகைய சிறைக்கூட வாசம் சித்தித்தது; இதற்காக நீ விசனப்

படாதே" என்று சமாதானங் கூறி அவனை இராவணன் முதலியவர்களிடத்தில் விடைபெற்றுக் கொள்ளச் செய்து தேவலோகத்திற் கனுப்பிவிட்டுத் தாமும் சத்தியலோகம் சேர்ந்தார்.

அத்தியாயம்--10.

இராவணன் கட்டுப்படல்.

அதன்மேல் இராவணன் அளவற்ற ஆனந்தமடைந்து தனக்கெவரும் நிகரில்லையென்று அகங்காரத்துடன் அரசு செய்துகொண் டிருந்தான். அப்படியிருக்குங் காலத்தில், அப்போது தனக்கு நிகரொருவருமில்லாத வீரனும், ஆயிரந் தோள்களை யுடையவனுமிருந்த கார்த்தவீரியார்ச்சுனன் சகல படைகளுடன் திக்குவிஜயம் செய்து சகலரையும் வென்று இராவணனுடன் யுத்தஞ்செய்வதற்கு இலங்கைக்குப் போனான். அப்போது இராவணன் தன்னுடைய ஸ்திரீகளுடன் ஜலக்கிரீடை செய்வதற்கு நருமதை நதிக்குச் சென்றிருந்தபடியால் இலங்கையிலிருந்தவர்கள் அவன் சென்றிருக்குமிடத்தைக் கார்த்த வீரியனுக்குக் கூறினார்கள்.

அவன் இராவணனைத் தேடிக் கொண்டு போய் விந்திய பர்வதத்தில் தங்கினான். அத்தருணத்தில் இராவணன் ஜலக்கிரீடை முடித்து விந்திய பர்வதத்திற் கருகிலுள்ள நருமதை நதிக்கரையில் இலிங்கம் வகுத்துச் சிவபூஜை செய்துகொண் டிருந்தான். அப்படியிருக்கும்போது, அவனிருந்த விடத்திற்கப்பால் நெடுந்தூரத்தில் கார்த்தவீரியனும் தன்னுடைய ஸ்திரீக

ளுடன் நருமதை நதியிலிறங்கி ஜலக்கிரீடை செய்து விளையாடித் தன் ஆயிரங் கைகளாலும் அந்நதியைக் குறுக்கே அடைத்துத் தண்ணீரைத் தேக்கினுன். அந்த ஜலம் தடைப்பட்டு மேலே பெருகிக் கரை புரண்டு இராவணனுல் வகுக்கப்பட்ட சிவலிங்கத்தைக் கரைத்தழித்துச் சென்றது.

இராவணன் கோபித்தெழுந்து அவ்வெள்ளம் புரண்டதன் காரணத்தைத் தெரிந்து வரும்படி தூதரையனுப்பினுன். அவர்கள் சென்று கார்த்த வீரியனே அதற்குக்காரண மென்பதை அறிந்து வந்து தசக்கிரீவனிடம் தெரிவித்தார்கள். அவன் கடுஞ்சின மடைந்து கார்த்தவீரி யார்ச்சுனனேடு சண்டையிடக் கருதி அவனிருக்கு மிடத்திற்குச் சென்று அவனுடைய மந்திரிகளைக் கண்டு அவர்களிடத்தில், "நான் உங்கள் தலைவனேடு சண்டைபுரிய வந்திருக்கின்றேன்; அவனை விரைவில் வரச்சொல்லுங்கள்" என்று கூறினுன். அவர்கள், "அவர் இப்போது ஜலக்கிரீடை செய்து கொண் டிருப்பதால் நீ அவரை யுத்தத்திற் கழைப் பது தகுதியாகாது; நாளைக்குவந்தால் போர்புரிய லாம்" என்ருர்கள்.

இராவணன் மீறி அந்த மந்திரிகளுடன் சண்டை தொடுத்தான். அவர்களும் அவனுடன் எதிர்த்தார்கள். இராவணனுடைய மந்திரிகளும் அவர்களுடன் எதிர்த் தார்கள். இருவகை மந்திரிகளுக்குள்ளும் கொடிய யுத்தம் நடந்தது. முதலில் இராவணன் சேனைகள் தளர்ச்சியுற்றன; பின்னர் மகோதரன், மாரீசன் முதலி யவர்கள் முனைந்து சாடியதால் கார்த்தவீரியனுடைய சேனைகள் சின்னபின்னப்பட்டுச் சிதைந்து கார்த்த

வீரியன் சமீபத்திற்போய் வீழ்ந்தன. அவற்றைக் கண்டு அவனுடைய ஸ்திரீகள் நடுங்கினார்கள்.

அவன் அவர்களுக்குத் தைரியங் கூறிவிட்டுக் கரையேறிக் கோபத்துடன் வந்து இராவணன் சேனைகளையெல்லாம் சிதறவடித்தான். அப்போது பிரகஸ்தன் அவனுடனெதிர்த்துப் பாணங்களையேவி அவனுடைய சேனைகளில் அநேகம் மடியும்படி செய்தான். அதைக்கண்டு கார்த்த வீரியன் தன்னுடைய தண்டாயுதத்தால் பிரகஸ்தனை அடித்து வீழ்த்தி மேலும் இராவணனுடைய சேனைகளை மோதியடித்தான். அந்த அடியினால் தசக்கிரீவன் படைகளும், மகோதரன் முதலியவர்களும் பயந்தோடினார்கள்.

அப்போது இராவணன் கொதித்தெழுந்து தன்னுடைய படைகளை ஓடாமல் நிறுத்தித் தானுமொரு கதாயுதத்தை யெடுத்துக் கார்த்த வீரியன் மார்பில் பலமெல்லாங் கொண்டோங்கியடித்தான். அதற்குக் கார்த்த வீரியன் இளைக்காமல் புன்சிரிப்புடன் தன் கதையினால் ஓங்கி இராவணனை ஓரடி யடித்தான். அந்த அடியினால் தசக்கிரீவன் தளர்ச்சி யுற்று மயங்கி நின்றான். அப்போது கார்த்த வீரியன் அவனைத் தோளோடு தோள் இறுகக்கட்டி முன்னே நடத்திக் கொண்டு போனான். மகோதரன், மாரீசன் முதலியவர்கள் அவனைப் பின் தொடர்ந்து இராவணனை மீட்கும் பொருட்டு யுத்தஞ்செய்தார்கள். கார்த்தவீரியன் சில அஸ்திரங்களை விடுத்து அவர்களைச் சின்னாபின்னப் படுத்தித் துரத்திவிட்டு இராவணனைத் தன்னுடைய பட்டணத்துக்குக் கொண்டுபோய்ச் சிறைக்கூடத்தி லடைத்துவிட்டான்.

மகோதரன் முதலியவர்கள் இலங்கைக்குச் சென்று விசனத்துடன் இராவணன் செய்தியை விபீஷணனிடம் கூறினார்கள். விபீஷணன் மனம் வருந்திப் புலஸ்தியரிடம் சென்று எப்படியாவது இராவணனைச் சிறை நீக்கிவிடும்படி வேண்டினான். அவர் கார்த்தவீரியனிடம்சென்று அவனுக்குச் சமாதான வார்த்தைகள் கூறி இராவணனைச் சிறையினின்றும் மீட்டு விட்டார். இராவணன் வெட்கமுந் துக்கமு மடைந்து இலங்கை போய்ச் சேர்ந்தான்.

அத்தியாயம்—11

இராவணன் வாலியால் துயருறல்.

தசக்கிரீவன் இவ்வாறு கார்த்தவீரியனால் அவஸ்தை யடைந்து சென்றும் சில தினங்களில் அதனை மறந்து விட்டான். பின்னும் அகங்காரங் கொண்டு வெளியேறிப் பற்பல விடங்கட்குஞ்சென்று பலருடன் சண்டை விளைத்துக்கொண்டே திரிந்தான். அப்படித் திரியுங்காலத்தில் அந்தத் தசக்கிரீவன் வாலியுடன் சண்டைபோடக் கருதிக் கிஷ்கிந்தைக்குச் சென்று அவனரண்மனைக்கு முன்னே போய் நின்று, "வாலியே! சண்டைக்கு வா" என்று கூவினான்.

அப்போது வாலி தென் சமுத்திரக்கரைக்குச் சிவபூஜை செய்யச் சென்றிருந்ததால் அவனுடைய மனையாளாகிய தாரை வந்து இராவணனை நோக்கி, "என் நாயகருடனே சண்டை செய்தால் நீ மடிந்து போவாய்; அவரோ தெற்குச் சமுத்திரக் கரைக்குச் சிவபூஜை செய்யப் போயிருக்கின்றார்; அவர் திரும்பி

வரும் சமயமாயிற்று ; நீ விரைவில் இதைவிட்டுப் போய்விடு; உனக்கு விரைவில் சண்டைசெய்ய இஷ்ட மானல் அவர் சென்றிருக்கு மிடத்திற்கு நீ போ" என்முள்.

இராவணன் அகங்கரித்து உடனே தன் படைக ளுடன் வாலி யிருக்குமிடத்திற்குப் போனன். அப் போது வாலி கண்களை மூடிக்கொண்டு சிவத்தியானத்தி லிருந்தான். அவனைப் பார்த்ததும் இராவணன், "ஆ! இது நல்ல சமையம் ; இவன் கண்களை மூடிக்கொண் டிருப்பதால் நாம் சந்தடி செய்யாமல்சென்று இவனைப் பிடித்துக் கட்டிவிடலாம்" என்று பதுங்கிக்கொண்டே அவனுக்குப்பின்னே போனன், வாலி அவன் வருவதை யுணர்ந்திருந்தும், 'இவன் கிட்டி வரட்டும்; இவனை நொறுக்கிவிட வேண்டும்' என்று ஒன்றும் அறியாதவ னைப்போல் இருந்தான். பதுங்கிச் சென்ற இராவணன் வாலிக்குச் சமீபத்திற் சேர்ந்து ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து இருபது கைகளாலும் அவனைச் சேர்த்துப் பிடித்தான்.

வாலி உட்கார்ந் திருந்தபடியே புன்சிரிப்புடன் இராவணனை ஒரு கையால் ஒதுக்கிக் கக்கத்துள்ளே சேர்த்திடுக்கி, ஒரே இறுக்காக இறுக்கி, அவன் எலும் புகள் நொறுங்கும்படி நசுக்கித் தன் வாலின் நுனி யிலே ஒரு மணிபோலக் கட்டித் தொங்கவிட்டுப் பத மல் சிவபூஜையை முடித்துக்கொண்டு மேற்குக் கடல் தீரத்தில் சிவபூஜை செய்ய அங்கே செல்லக் கருதி மேலெழுந்து ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்தான் ; அவன் பாய்ந்த வேகத்தால் இராவணனுடைய சேனைக ளெல்லாம் சின்னபின்னப் பட்டுப் பறந்தோடின.

இராவணனோ வாலியின் வாலில் தொங்கிக் கொண்டு படாதபாடுக ளெல்லாம் பட்டுப் போனான். அதன் மேல் வாலி மேற்கிலிருந்து வடக்குக் கடலிற் பாய்ந் தும் வடக்கிலிருந்து கிழக்குக் கடலிற் பாய்ந்தும் ஆங் காங்கே சிவபூஜையை முடித்துக்கொண்டு திரும்பிக் கிஷ்கிந்தைக்கு வந்து சேர்ந்தான்.

வாலி, அவ்வாறு நான்கு திக்குகளிலும் தாவித் திரியும்போது அவன் வாலிற் கட்டப்பட்டிருந்த இரா வணன் மலைகளிலும் மரங்களிலும் மோதுண்டு தேக மெல்லாம் இரத்த வெள்ளம் பெருகப் புண்ணாகிப் பட்ட பாட்டிற்கோர் அளவில்லை. அவன் பிரக்ஞை யற்று மயங்கிப் போனான்.

வாலி கிஷ்கிந்தையிற் சேர்ந்தவுடன் அவன் மனைவி தாரை வாலிக்கு வேண்டிய உபசாரங்கள் செய்துவிட்டு அவன் வால்நுனியில் கட்டப்பட்டு மயங்கிக் கிடந்த இராவணனைப் பார்த்து, 'இவன் யார்?' என்று வாலியைக்கேட்டாள். அதற்கு வாலி, "பெண்ணே! இன்றைக்கு நான் பூஜை பண்ணப் போன ஒரு தீவிலே இந்தப் பத்துத்தலைப் பூச்சி அகப் பட்டது; இதை நான் உனக்குக் காட்டும் பொருட்டுக் கொண்டு வந்தேன்" என்றான். அப்போது தாரை அவனை நோக்கி, "இவன் உம்முடைய பலத்திற்கு இலக்ஷியமானவனல்ல; ஆதலால் இவனை நீர் அவிழ்த்து விடும்" என்று வேண்டிக் கொண்டாள்.

வாலி இராவணனை அவிழ்த்து விட்டு அவனைப் பார்த்து, "நீ கட்டுப்பட்டு விட்டதால் தோல்வி யடைந்து விட்டதாகக் கவலைப்படாதே; ஜெயமும் அபஜெயமும் ஒருவர்பங்கல்ல; ஒரு சமையம் தோற்ற

வன் மற்ருெருசமையத்தில் வெல்வான்; ஆதலால் உனக்குச் சண்டை செய்ய இஷ்டமிருந்தால் இப்போதென்னுடன் யுத்தம் புரியலாம்" என்ருன்.

அப்போது இராவணன், "ஐயா! இந்த மட்டில் உயிருடன்விட்டுவிட்டால் அதுவே எனக்குப் போதும்; உம்முடன் யுத்தஞ் செய்யவேண்டுமென்று நினைக்கவும் எனக்குத் திறமையுண்டோ? நீர் என்னைச் சிநேகிதனுகக் கொள்ளவேண்டும்" என்று தாழ்மையாகக் கூறினுன்.

அதைக்கேட்டு வாலி பகைநீங்கிச் சந்தோஷித்து அவனை ஒரு மாதம்வரை தன் அரண்மனையில் வைத்திருந்து உபசரித்து அவனுக்கு விருந்துகள் செய்து அதன்மேல் அந்த இராவணனை நோக்கி, "அப்பா! நீ இன்று முதல் எனக்கு நண்பனுக விரு; இனி எதற்கு மஞ்சாதே" என்று இதமொழிகள் கூறியனுப்ப அவன் இலங்கை சேர்ந்திருந்தான்.

அத்தியாயம்---12.

இராமாவதாரம்.

அங்ஙனம் இலங்கையிற் சேர்ந்திருந்த தசகண்டன், கார்த்தவீரியனுலும், வாலியாலும் அடைந்த துன்பங்களைச் சில தினங்களுக்குள் மறந்து விட்டு மீண்டும் அகங்காரங்கொண்டு தேவர்களுக்குப் பற்பல இடர்களைப் புரிந்து வந்தான். அமரர்கள் அத்துன்பங்களைச் சகிக்க முடியாமல், விஷ்ணுமூர்த்தியிடம் கூறி முறையிட்டார்கள். அவர் அமரர்க்கிரங்கி, "தேவர்களே! நீங்கள் அஞ்சவேண்டாம்: நாம் இராமாவதார

மெடுத்து அந்த இராவணன் முதலியோரைக் குலத்தோடு நாசஞ் செய்வோம்; நீங்களெல்லோரும் நமக்குத் துணை வரும்பொருட்டுப் பூவுலகத்தில் வானரர்களாக அவதரித்திருப்பீராக" என்று கூறியருளினர்.

அதன்மேல் பிரமதேவர் ஜாம்புவந்தனுகவும், இந்திரன் வாலியாகவும், அவன் புதல்வன் அங்கதனுகவும், சூரியன் சுக்கிரீவனுகவும், அக்கினி நீலனுகவும், கிஷ்கிந்தையிலே அவதரித்திருந்தார்கள். சிவபெருமான் அஞ்சனுதேவிக்கும், வாயுபகவானுக்கும் அனுமாராகப் பிறந்து வித்தையிலும், புத்தியிலும், வெற்றியிலும் சிறந்து, சுக்கிரீவன் முதலிய வானரர்களோடு சேர்ந்து நட்புற்றிருந்தார்.

அயோத்தியில் அரசுபுரிந்து வந்த அஜமகாராஜன் புத்திரராகிய தசரதர் நெடுங்காலம் புத்திரப் பேறில்லாதிருந்து, வசிஷ்டருடன் ஆலோசித்துக் கலைக்கோட்டு முனிவரைக் கொண்டு புத்திரகாமேஷ்டியாகஞ் செய்து, அந்த யாக முடிவில் ஓமகுண்டத்திலிருந்து வெளியேறிய ஒரு பூதம் பொற்றட்டிலேந்திக்கொண்டு வந்து கொடுத்த திவ்வியான்னத்தை மூன்றுபாகமாக்கி அவற்றுள் ஒரு பாகத்தைத் தம்மனைவியருள் கௌசலைக்கும், மற்ருென்றைக் கைகேசிக்கும், பின்னுென்றைச் சுமித்திரைக்கும் கொடுத்து, தட்டில் எஞ்சியிருந்த அன்னத்தைத் திரட்டிச் சுமித்திரைக்கே அளித்தார். அந்த யாகத்தின் பயனுக ஸ்ரீவிஷ்ணுமூர்த்தி விண்ணவர்க்கு விளம்பியவாறே கௌசலையினிடத்தில் இராமராக அவதரித்து, தமது சக்கரத்தைக் கைகேசியின் வயிற்றில் பரதனுகவும், சுமித்திரையினிடத்தில் சேஷனை இலக்குமணனுகவும், சங்கத்தைச் சத்துருக்கனுகவும் அவதரிக்

கச்செய்தார். இந்த நான்கு புத்திரர்களும் சகல சிறப்புக்களுடன் வளர்ந்து, வசிஷ்ட முனிவரிடம் சகல கலைகளையும் ஓதியுணர்ந்திருந்தார்கள். முன்னே இராவணனுக்குச் சாபங்கொடுத்து "சீதையாகப் பிறந்து உன் குலத்தை அழிப்பேன்" என்று கூறி நெருப்பில் வீழ்ந்திறந்த வேதவதி, இலக்குமியுடன் கலந்து மிதிலை நகரத்தில் ஜனகனுக்கு ஜானகியாகப் பிறந்திருந்தாள்.

அப்போது விசுவாமித்திரர்வந்து தம்முடைய வேள்வியைக் காக்கும் பொருட்டுத் தசரதர் அனுமதிபெற்று இராமரையும் இலக்குமணனையும் அழைத்துக்கொண்டு போனார். அவ்வாறு செல்லும்போது இராமர், பல புண்ணிய ஸ்தலங்களைப் பார்த்துக்கொண்டும், அவற்றின் வரலாறுகளைக் கேட்டுணர்ந்து கொண்டும் போய்த் தாடகையையும், அவள் குமாரனாகிய சுவாகுவையும் வதைத்து, அத்தாடகையின் மற்றொரு புத்திரனாகிய மாரீசனையும், மற்ற இராக்ஷதர்களையும் துரத்தி, விசுவாமித்திரரின் வேள்வியை முடிப்பித்து, அகலிகையின் சாபந்தீர்த்து, அம்முனிவருடன் மிதிலை நகருக்குப் போயினார்.

அந்நகரத்தை யாண்டுவந்த ஜனகராஜனிடத்தில், சிவபெருமானுடைய வில்லொன்றிருந்தது. ஜனகனுக்குச் சீதாதேவி புத்திரியாகப் பிறந்து மங்கைப் பருவமடைந்தபோது, அவன், அந்த வில்லை வளைப்போர்க்கே ஜானகியை மணஞ்செய்துகொடுப்பதாக எங்கும் தெரிவித்திருந்தான். அத்தனுசு எவராலும் வளைக்க முடியாதிருந்தது.

விசுவாமித்திரரும், இராமலக்குமணரும் மிதிலைக்குப் போனவுடன் ஜனகன் அவர்களை வரவேற்றுப

சரித்து, விசுவாமித்திரரிடம் இராமலக்குமணரின் வரலாற்றை வினவித் தெரிந்துகொண்டு, தன்னிடமிருந்த வில்லின் விருத்தாந்தத்தையும், அதை வளைப்பார்க்கே தான் சீதையைக்கொடுக்க நிச்சயித் திருப்பதையும் கூறினுன். இராமர் விசுவாமித்திரர் ஏவியபடி அவ் வில்லை வளைத்து முறித்தார். ஜனகன் மகிழ்ந்து தசரதர், வசிஷ்டர் முதலியவர்களை அங்கே வரவழைத்துச் சுப முகூர்த்தத்தில் சீதையை இராமருக்கு மணஞ் செய்து கொடுத்து, மேலும் தன்னிடமிருந்த மூன்று கன்னியர்களுள் மாண்டவியைப் பரதனுக்கும், ஊர்மிளையை இலக்குமணனுக்கும், சுதகீர்த்தியைச் சத்துருக்கனுக்கும் கலியாணஞ் செய்து கொடுத்தான். விசுவாமித்திரர் இராமர் முதலியவர்களிடம் விடை பெற்றுத் தவத்திற்குச் சென்ருர். அதன்மேல் இராமர், மாமன் முதலியோரிடம் விடைபெற்றுச் சுற்றத்தாருடன்புறப்பட்டு, நடுவழியில் எதிர்த்த பரசுராமருடைய கர்வத்தைப் பங்கஞ் செய்து அயோத்தி சேர்ந்திருந்தார்.

அதன்பிறகு பரதன், தன் மூதாதையைப் பார்ப்பதற்குச் சத்துருக்கனுடன் கேகயதேசம் போயிருந்தான். அப்போது தசரதர் இராமருக்குப் பட்டாபிஷேகம் செய்ய முயன்ருர். இராமர்மீது பகை கொண்டிருந்த கூனியாகிய மந்தரை யென்னும் தாதி, இராமர் பட்டாபிஷேகத்தைத் தடுத்து அவரைக் காட்டிற்கனுப்பிப் பரதனுக்கு மகுடம் சூட்ட ஏற்பாடு செய்யும்படி கைகேயிக்குத் துர்ப்போதனை செய்தாள். தசரதர் முன்னே கைகேயிக்கு இரண்டு வரங்கள் கொடுப்பதாக வாக்களித்திருந்தார். அதனுல் அவள் அப்போது தசரதரிடம் அவ்வரங்களைக் கொடுக்கவேண்டு மென்று

கேட்டாள். தசரதர் 'அவ்விரண்டு வரங்களின் விவரத்தைக் கூறு நான் அவற்றைத் தருகின்றேன்' என்றார். அவள், "பரதனுக்கு அரசு கொடுத்தல் ஒன்று, இராமனைக் காட்டிற் கனுப்புதல் ஒன்று" என்றாள். உடனே தசரதர் ஒன்றுஞ் செய்ய வியலாமல் மூர்ச்சையாகி விட்டார்.

பின்னர், கைகேயி, இராமரிடத்தில், 'நீ வனத்திற்குச் சென்று பதினான்கு வருடங்கள் வரை அங்கே வாசஞ் செய்யும்படி உன் தந்தை உனக்குக் கட்டளையிட்டிருக்கின்றார்' என்று தானே அதனைக் கூறினாள். இராமர், முகமலர்ச்சியுடன் தவவேடந்தாங்கி, இலக்குமணனுடனும் சீதா பிராட்டியுடனும் நகரத்தை விட்டுப் புறப்பட்டுப் போயினார். அவர் சென்றதையுணர்ந்தவுடன் தசரதர் புத்திர சோகத்தால் உயிர் துறந்தார். கௌசலை முதலியதேவியரும், நகரமாந்தரும் துக்க சாகரத்தில் மூழ்கினர்.

நகரைவிட் டேகிய இராமர், கங்கையில் ஓடம் விடுகிறவனாகிய குகனோடு சிநேகங்கொண்டு, தேவியோடும், தம்பியோடும் கங்கையைத் தாண்டி, குகனை அங்கு நிறுத்தி விட்டு வனத்திற் புகுந்து பரத்துவாசரைக் கண்டு வணங்கிக் காளிந்திநதியைக் கடந்து, சித்திரகூட பர்வதம் போய்ச் சேர்ந்திருந்தார்.

இராமர் வனத்திற்குச் சென்றபின், வசிஷ்டர், கேகய நாட்டிற்குச் சென்ற பரதனையும், சத்துருக்கனையும் வரவழைத்தார். பரதன் வந்ததும், அரண்மனையில் நடந்த விபரீதங்களை யெல்லாம் உணர்ந்து ஆற்றொணாத் துயரமடைந்து, தாயைப் பலவாறு நிந்தித்து, தசரதர் உயிர்விடுந் தருணத்தில், 'பரதன்

எனக்குப் புத்திரனல்லன்' என்று கூறிய படியால், அதை வசிஷ்டர் தெரிவிக்க மேலும் விசன முற்றுத் தான் தசரதருக்கு ஈமக்கிரியை செய்யக் கூடாதென்று சத்துருக்கனைக்கொண்டு அதனை முடித்து விட்டுக் கண்ணீரொழுகிய முகத்துடன் சுற்றத்தார் பின் தொடர விரைந்தோடி இராமரைக் கண்டு அவரிடம் தந்தையின் மரணத்தைக் கூறி நகரத்திற்கு வந்து அரசுரிமையை ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டினான். இராமர் தந்தை யிறந்தது குறித்து வருந்தி, அவர்க்குச் செய்யவேண்டிய கடன்களைச் செய்து முடித்துப் பரதனுக்குப் பலநீதிகளைக் கூறி அவன் விரும்பியபடி தம் பாதுகையை அளித்து, தாம் பதினான்கு வருடங்கள் சென்று வருவதாகச் சொல்லி அவன் திரும்பிச் சென்று இராஜகாரியங்களைப் பார்க்கும்படி அவனை அனுப்பினார். அவன் சுற்றத்தாருடன் திரும்பிச் சென்று நந்திக் கிராமத்தில் தங்கி, இராமருடைய பாதுகைக்குப் பட்டாபிஷேகம் செய்து இராஜகாரியங்களைக் கவனித்துக்கொண் டிருந்தான்.

85518

அதன்மேல் இராமர், மனைவியுடனும் இலக்குமணனுடனும் சித்திரகூடத்தைவிட்டுப் புறப்பட்டுத் தென்றிசை நோக்கிப் போய் அத்திரி முனிவரைக் கண்டு வணங்கித் தண்டகாரணியம் நோக்கி நடந்தார். அப்போது கிலிஞ்சன் மகனாகிய விராதன் என்னும் இராக்ஷதன் வந்து சீதைக்கு அபாயமுண்டாக்கத் தொடங்கினான். இராமர் அவனை வதைத்துச் சரபங்கர் ஆச்சிரமம் சேர்ந்து அவருக்கு மோக்ஷமருளித் தண்டகாரணியஞ் சேர்ந்து பாலகில்லியர், முண்டர், மோனர் முதலிய முனிவர்களால் உபசரிக்கப்பெற்று

அவ்விடத்திலேயே பத்து வருடங்கள் கழித்துப் பின்னர் அங்கிருந்து புறப்பட்டு சுதீக்ஷ்ணமகா முனிவரைக்கண்டு, அகஸ்தியர் ஆச்சிரமம் அடைந்து அவர் கொடுத்த வில்லையும் அம்பறாத் தூணியையும் பெற்றுக்கொண்டு அவரிடம் விடை பெற்றுப் போய்த் தசரதருக்குப் பூர்வ சிநேகிதராகிய சடாயுவைக் கண்டு, அவரிடம் தசரதர் மர்ணத்தைக் கூறி அவர் வருந்த அவரைத் தேற்றிப் பின்னர்ப் பஞ்சவடி சேர்ந்து இலக்குமணனால் கட்டப்பட்ட பன்னகசாலையில் சீதையுடன் தங்கி யிருந்தார்.

அப்போது இராவணன் தங்கையாகிய சூர்ப்பனகி இராமரிடம் வந்து தன்னை மணஞ்செய்து கொள்ளும்படி கூறிச் சீதையை எடுத்து விழுங்கத் தொடங்கினாள். அவள் செய்கையை யுணர்ந்த இலக்குமணன் அவளுடைய மூக்கையும், செவிகளையும் அறுத்து விட்டான். அவள் இராம லக்குமணர்கள் மீது பகை கொண்டு போய்ச் சமீபத்தில் வசித்திருந்த தன் இனத்தவர்களாகிய கரதூஷணர்களை அவர்களுடன் போருக்கெழும்படி செய்தாள். இராமர் அவர்களைச் சிறிது நேரத்தில் வதைத்துவிட்டார்.

அத்தியாயம்---13

சீதை பிரிவு.

பின்னர் சூர்ப்பனகி, இலங்கைக்குப் போய் இராவணனிடத்தில் இராம லக்குமணர்களுடைய செய்கையையும், சீதையின் சிறப்பையுங் கூறினாள். இராவணன் இராமலக்குமணர்மீது பகைகொண்டு சீதையைத்

தந்திரத்தால் அபகரிக்கக்கருதி, தன் மாமனாகிய மாரீசனைப் பொன்மான் வடிவெடுத்து இராம லக்குமணரிடம் போகச் செய்து அவர்களைச் சீதையை விட்டுப் பிரித்து, அவள் தனித்திருக்கும் சமயத்தில், தான் சன்னியாச வேடத்துடன் சென்று சீதையைப் பன்னசாலையுடன் பெயர்த்தெடுத்துத் தேர்மீது வைத்து ஆகாய மார்க்கமாகச் சென்றான். சீதை கதறிக் கொண்டே போயினாள்.

அச்செய்கையை நடுவழியிற்கண்ட சடாயு, அந்த இராவணனோடெதிர்த்து அவன் தேரைச் சிதைத்து விட்டார். அவன் சடாயுவின் சிறகுகளை அறுத்து அவரை வீழ்த்தி விட்டுச் சீதையைப் பன்னகசாலையுடன் தூக்கித் தோளில் வைத்துக்கொண்டு ஆகாய மார்க்கமாகச் சென்றான்.

முன்னொரு காலத்தில், கிஷ்கிந்தையிலே பிறந்திருந்த வானரர்களுள் அரசனாயிருந்த வாலியோடு ஓர் அசுரன் யுத்தஞ்செய்து இளைத்தோடிப் பாதாளத்திற்குச் செல்லும் பிலத்துவாரத்துக்குள் புகுந்தான். வாலி அவனைப் பின்தொடர்ந்து அப் பிலத்திற்குள் நுழையும்போது தன் தம்பியை அத்துவாரத்தின் வாயிலில் காவல் வைத்துச் சென்றான். அவ்வாறு சென்றவன் நெடுங்காலம்வரை திரும்பி வராமையால் சுக்கிரீவன், தன் தமையன் அவ்வசுரனால் இறந்திருப்பானென்று நினைத்து அவ்வசுரன் திரும்பிவந்து துன்பஞ் செய்யா திருக்கும்பொருட்டு அப்பிலத்தை மலைகளால் அடைத்து விட்டு இராஜ காரியங்களைப் பார்த்துக் கொண்டிருந்தான். வாலி அப்பிலத்திற்குள் பல தினங்கள் வரை யுத்தஞ் செய்து அவ்வசுரனைக்

கொன்று விட்டுத் திரும்பிவந்து பிலம் அடைக்கப்பட்டிருப்பதைப் பார்த்துத் தன் தம்பி, தன்னை ஒழித்து விட்டு அரசைக் கைப்பற்ற அவ்வாறு அவ்வாயிலை அடைத்து விட்டானென்று தப் பெண்ணங் கொண்டு அங்கே மூடிக்கொண்டிருந்த மலைகளைக் காலால் உதைத்துத் தள்ளி விட்டு வெளியேறிச் சுக்கிரீவனுடன் பகைகொண்டு அவனைக் கொல்ல முயன்றான். வாலியென்பவன் முன்னொரு சமயம் துந்துபி யென்பவனோடு சண்டைசெய்து அவனுடலை ரிசியமுகபர்வதத்திலிருந்த மதங்கரிஷியின் ஆச்சிரமத்தில் வீழ்த்த அவர் சினந்து, வாலி அம்மலைக்குள் வந்தால் இறப்பானென்று அவனுக்குச் சாபங் கொடுத்திருந்த படியால் அவன், அங்கே வரமாட்டானென்று சுக்கிரீவன் அந்தப்பருவதத்தில் நளன், நீலன், அனுமான் முதலான வானரர்களோடு போய்க் குடியேறி யிருந்தான்.

மேற்கூறியபடி சீதையைக் கொண்டு சென்ற இராவணன் அந்த மலைக்கு நேரே போகும்போது ஜானகி அந்த வானரர்களைக் கண்டு, "நம் நகைகளை மூட்டையாகக் கட்டி இவர்களிடம் போட்டு விட்டுச் சென்றால் இவர்கள் நம் நாயகரிடம் கொடுத்து நாம் செல்லும் திக்கை யுணர்த்துவார்கள்" என்று தன் ஆபரணங்களை யெல்லாம் கழற்றி மூட்டையாகக் கட்டி அவர்களிடம் போட்டுவிட்டுப் போயினள். அவர்கள் அம்முடிப்பை யெடுத்து ஜாக்கிரதையாக வைத்திருந்தார்கள். அதன்மேல் இராவணன் சீதையை இலங்கைக்குக் கொண்டு போய் அசோகவனத்தில் சிறை வைத்து விட்டான்.

மாரீசனுல் சீதையைவிட்டுப் பிரிந்த இராமலக்கு மணருள் முன்னே சென்ற இராமர் மாரீசனே வதைத்து விட்டுத் திரும்பி வரும்போது தம்மைத் தேடி எதிரில் வந்த இலக்குமணனைப் பார்த்து, இராக்ஷ தருடைய மாயையால் சீதைக்கு அபாயம் வந்திருக்கு மென்று சந்தேகங் கொண்டு அவனுடன் பன்னக சாலைக்கு வந்து, சீதையைக் காணுமல் பெருங் கலக்க மடைந்து, இராவணன் சென்ற திக்கைச் சில குறிப்புக் களினுல் உணர்ந்து அவ்வழியே விரைந்து சென்று இராவணனுல் சிறகறுபட்டுக்கிடந்த சடாயுவைக்கண்டு வருந்தினுர். சடாயு இராவணன் சீதையை எடுத்துச் செல்லும் விவரங் கூறி உயிர் நீங்கினுர்.

பின்னர் இராமலக்குமணர்கள் சடாயுவுக்கு ஈமக் கிரியை செய்து விட்டு அவ்விடம் விட்டுச் சென்று இரண்டு தினங்களுக் கப்பால் ஓரிரவில் ஒரு பளிங்குக் கற்பாறையில் தங்கினுர்கள். அப்போது இலக்குமணன் இராமருக்கு ஜலங்கொண்டுவரப் போய்த் தன்னைத் தூக்கிச் சென்ற அயோமுகியை அவயவபங்கஞ் செய்து இராமரைச் சந்தித்தான். மறுநாள் அவர்கள் அங்கிருந்து புறப்பட்டு எதிர்ப்பட்ட கபந்தன் சாபத் தை நீக்கி மதங்கர் ஆச்சிரமத்தை அடைந்து சபரியைக் கண்டு அவளால் உபசரிக்கப் பெற்று, சுக்கிரீவன் முத லியவர்களிருக்கு மிடத்தையுணர்ந்து, அவளுக்கு மோக்ஷமளித்துப் பம்பாநதியை அடைந்து மறுநாள் ரிசியமுக பர்வதம் போய்ச் சேர்ந்தார்கள்.

அங்கே, சுக்கிரீவன், ஆஞ்சநேயர் மூலமாக இராம லக்குமணர்களிடம் சிநேகமாய்த் தன்னுடைய குறைகளைத் தெரிவித்தான். இராமர் தம்முடைய

வல்லமையைச் சுக்கிரீவனுக்குக் காட்டும் பொருட்டு ஏழு மரா மரங்களை ஒரே பாணத்தால் துளைத்தார். இலக்குமணன் துந்துபி யெலும்பைக் காலால் தள்ளினான். அப்போது சுக்கிரீவன், சீதையின் ஆபரண முடிப்பை இராமரிடம் கொடுத்தான். இராமர் ஆபரணங்களைப் பார்த்து ஆறாத்துயரமடைந்தார். சுக்கிரீவன், "சீதையைத் தேடிக்கொண்டு வந்து நான் சேர்ப்பிக்கிறேன்" என்று அவருக்குத் தைரியங் கூறினான். பின்னர் இராமர் வாலியை வதைத்துச் சுக்கிரீவனுக்கு இராஜ்ஜியத்தை நல்கி, மழைக்காலம் நீங்கும் வரை பொறுத்திருந்து, அதன்மேல் சுக்கிரீவன் வானர சேனைகளைச் சேகரிக்க, அவன்மூலம் வானரர்களை நாலா திக்குகளிலும் சீதையைத் தேடிவருமாறு அனுப்பச் செய்தார். அனுமார், அங்கதன் முதலியவர்களோடு தென்றிசைக் கேகினர். அவர் சீதா பிராட்டியாரைக் காணுவாரென்னும் நிச்சயத்தால் இராமர் அவரிடம் சீதைக்குக் காட்டும்படி தம்முடைய கணையாழியைக் கொடுத்தார்.

அங்ஙனம் தெற்கு நோக்கிச்சென்ற ஆஞ்சனேயர் பற்பல விடங்களுக்கும் போய் மகேந்திர பர்வதமடைந்து தெற்குச் சமுத்திரத்தைக் கண்டு, சடாயுவின் தமையனாகிய சம்பாதியால் சீதாபிராட்டியார் இலங்கையிலிருப்பதை யுணர்ந்து, அங்கதன், சாம்புவந்தர் முதலியவர்களை அங்கே நிறுத்திவிட்டு அந்த மகேந்திர பர்வதத்திலிருந்தபடியே விசுவரூபங் கொண்டு, இலங்கை நோக்கிச் சமுத்திரத்தின் மேல் ஆகாயத்திற் பாய்ந்து, இடையில் எதிர்ப்பட்ட மைநாகபர்வதத்திற்கு நன்மொழி கூறித் தம்மைப் பரீக்ஷிக்கவந்த சுரசைக்கனுக்கிரகஞ் செய்து, வழியில்

தடுத்த அங்காரதாரை வாய்க்குள் நுழைந்து அவளைக் கொன்று, பவளமலையிலிறங்கி இரவான பின் இலங்கை யிற் பிரவேசித்து அதைக் காவல்புரிந்த இலங்கணியை அடக்கி அந்நகரிற் பற்பல விடங்களிலும் புகுந்து பிராட்டியாரைத் தேடி முடிவில் அசோகவனத்தில் கண்டு- இராமர் கொடுத்த மோதிரத்தை அவளிட மளித்து, அவர் சொன்னவற்றையுங் கூறி, அவள் இராமரிடம் அளிக்கும்படி கொடுத்த சூடாமணியைப் பெற்றுக்கொண்டு, 'விரைவில் இராமர் உன் சிறையை நீக்குவார்' என்று அவளுக்குத் தைரியவார்த்தை யுரைத்துத் திரும்புகாலையில் இராவணனுடைய உத்தி யானவனத்தை யழித்துக் கிங்கரர்களை வதைத்து, ஜம்புமாலியைச் சாய்த்து, பஞ்ச சேனாதிபதிகளைத் துஞ்சச்செய்து, இராவணன் இளைய புத்திரனாகிய அக்ஷய குமாரனை ஆவிபோக்கி, இராவணனைக் காண வேண்டி இந்திரசித்திடம் கட்டுப்பட்டுச் சென்று இலங்காதிபனைக் கண்டு கலங்காத வார்த்தைகள் பேசி, இராவணன் கட்டளையால் இராக்ஷதர்கள், தம் வாலில் பந்தம்சுற்றிக் கொளுத்திய நெருப்பால் இலங்கா நகர முழுமையும் சுட்டெரித்துவிட்டு மீண்டு கடலைத்தாண்டி அங்கதன் முதலியவர்களுடன் இராம ரிடம் சென்று, சீதாபிராட்டியைக் கண்ட விவர முரைத்து, அவள் கொடுத்த சூடாமணியையும் அளித் தார்.

அப்பொழுதே இராமர் துக்கம் நீங்கி, இலங்கைக் குச் சென்று இராவணனை ஒழிப்பதற்கு வானர சேனை களுடன் புறப்பட்டுத் தெற்குச் சமுத்திரக்கரை யடைந்திருந்தார்.

அத்தியாயம்—14.

இராவண சம்மாரம்.

ஆஞ்சனேயர் இலங்காபுரியை எரித்துவிட்டு வந்தபிறகு இராவணன் அந்நகரைப் புதுப்பித்துக் கொண்டு, இராமர் முதலியவர்கள் சமுத்திரக்கரையை அடைந்திருக்குஞ் சமையத்தில் கொலுமண்டபத்தி லிருந்து, அனுமார் நடத்திய காரியங்களைப்பற்றி மந்திரி முதலியவர்களிடத்தில் விசனித்துக் கூறி, 'எதிரிகள், இனி எப்படியும் இங்கே வருவார்கள்; நாம், அவர்கள் பொருட்டென்ன செய்யலாம்?' என்று வினவினுன். அப்போது மந்திரிகளும், கும்பகர்ணனும், இந்திரசித்தும், "எதிரிகளுடன் போர்செய்வதே தக்க"தென்றுர்கள். விபீஷணன்மாத்திரம், இராமர் பெருமையை விளக்கிக்கூறி 'அவருடன் போர் செய்தால் நமக்கழிவுண்டாகும்' என்றுன். அதனுல் இராவணன் மிகுந்த கோபங்கொண்டு விபீஷணனைப் பலவாறு நிந்தித்துத் துரத்தினுன். அவன் இராமரிடம் வந்து அடைக்கலம் புகுந்தான். அனுமார் அவனுடைய நற் குணங்களைப் பற்றியும், அவன் குமாரத்தி திரிசடை சீதாதேவிக்குத் துணைபுரிந்து வருகின்றுளென்பதைப் பற்றியும் இராமரிடம் கூறியதன்மேல் அவர், விபீஷணனைத் தம்மோடு சேர்த்துக்கொண்டார். அதன் பின் விபீஷணன் இலங்கையின் இரகசியங்களையும், எதிரிகளின் தன்மைகளையும், இலங்கைக்குப் போகவேண்டிய மார்க்கத்தையும் இராமருக்குத் தெரிவித்தான்.

பின்னர், இராமர் வருணன் உதவியால், நளன் என்னும் வானர வீரனின் தலைமையின் கீழடங்கிய வானரர்களைக் கொண்டு சமுத்திரத்தில் திருவணைக்

கட்டி முடிப்பித்துச் சேனைகளுடன் கடலைத்தாண்டிப் போய் இலங்கைக்குச் சமீபத்திலுள்ள ஒரு மலையில் தங்கினார். அங்கே இரவில் இராவணனால் அனுப்பப் பட்ட சுகன், சாரணன் என்னும் ஒற்றர்கள் உளவறிய வந்தார்கள். வானரர்கள் அவர்களைக் கண்டுபிடித்து இராமரிடம் சேர்த்தார்கள். இராமர், 'நாங்கள் யுத்தத் திற்கு வந்திருக்கிறோமென்பதை இராவணனிடம் நீங் கள் போய்த் தெரிவியுங்கள்' என்று அவர்களைக் கொல்லாமல் அனுப்பிவிட்டார். அவர்கள் இராவண னிடம் சென்று, இராமர், விபீஷணர் முதலியவர்க ளுடைய செய்கைகளைக் கூறினார்கள்.

இராவணன், மந்திராலோசனை சபையிலிருந்து யுத்தத்தைப் பற்றி ஆலோசிக்கத் தொடங்கினான். அப்போது அவன் பாட்டனாகிய மாலியவான், யுத்தஞ் செய்வது கூடாதென்று இராவணனுக்குப் புத்தி கூறி னான். இராவணன், அவன் சொல்லைத் தட்டி யுத்தத் திற்கே ஒருப்பட்டு நின்றான்.

அத் தருணத்தில், இராமர் முதலியவர்கள் சுவேலாபர்வதத்திலேறி நின்று இலங்கையின் விநோ தங்களைப் பார்த்தார்கள். இராவணனும் இலங்கா நக ரத்தின் உத்தர கோபுரத்தின் மீதேறி நின்று இராமர் முதலியவர்களை நோக்கினான். அப்போது சுக்கிரீவன் மிகுந்தகோபத்தோடு இராவணன்மீது பாய்ந்து சிறிது நேரம் யுத்தஞ்செய்து முடிவில் அவனுடைய கிரீடங் களி லிருந்த பத்து ஜீவரத்தினங்களையும் பறித்துக் கொண்டு வந்து இராமர் பாதங்களில் வைத்து வணங் கினான்.

மறுநாள் இரண்டு கக்ஷியாரும் சேனைகளை அணி

வகுத்து நிறுத்தி யுத்தத்திற்கு ஆயத்த மானார்கள். இராமர் யுத்த தர்மத்தின்படி இராவண னிடத்தில், "நீ சீதையை விட்டு விடுகிறாயா? யுத்தஞ்செய்து மடிகி றாயா?" என்று கேட்டு வரும்படி அங்கதனைத் தூத னுப்பினார். அவன் சென்று அங்ஙனமே அக் கேள்வி களைக் கேட்டு, இராவணன் யுத்தத்திற்கு வருகிறே னென்று சொன்னதால், இராமரிடம் திரும்பி வந்து அதைத் தெரிவித்தான்.

அதன்மேல் இராமர் யுத்தத்தை ஆரம்பிக்கும்படி தம்முடைய சேனைகளுக்குக் கட்டளை யிட்டார். வான ரர்கள் இலங்கையின் நான்கு பக்கங்களிலும் புகுந்து போர்புரியத் தொடங்கினார்கள். இராக்ஷதர்களும் இரா வணன் கட்டளையால் அவர்களை எதிர்த்தார்கள். இந்த யுத்தத்தில் நான்கு கோட்டை வாயில்களிலும் வந் தெதிர்த்த அநேகம் இராக்ஷத படைத் தலைவர்களும் இராக்ஷதர்களும் மடிந்தார்கள். பின்னர் இராவணன் மிகுந்த கோபத்துடன் யுத்தகோலங் கொண்டு ஆயு தங்களைத்தாங்கித் தேரேறி நால்வகைச் சேனைகளுடன் போர்புரிய யுத்தபூமிக்கு வந்தான். அவன் வரவுணர்ந்த இராமரும் வீராவேசத்துடன் கோதண்டத்தைத் தாங்கி, இலக்குமணன் நின்ற முன்னணியிற் போய்ச் சேர்ந்தார். அப்போது சுக்கிரீவன் இராவணனோ டெதிர்த்து இளைத்தான். அதன்மேல் அனுமாரும் அவனோடு சண்டைசெய்து இளைத்து நின்றுவிட்டார்.

பின்னர் இலக்குமணனுக்கும் இராவணனுக்கும் சிறிதுநேரம் சண்டை நடந்தது. அந்த யுத்தத்தில் அநேகம் இராக்ஷதர்கள் மடிந்தனர். அப்பால் ஆஞ்ச னேயர் மீண்டும் வந்து இராவணனோடு சண்டையிட்டு

அவன், தமது கைக் குத்துக்குச் சாகா திருந்ததனால் அவனை நோக்கி, 'இனி உன்னோடு நான் யுத்தம் புரிவ தில்லை' என்று கூறி விலகி விட்டார். அதன்மேல் தசக்கிரீவன் இலக்குமணன் மீது பிரமன் வேலை விடுத்து அவனை மூர்ச்சிக்கச் செய்து தூக்கிக்கொண்டு போகப் பிரயத்தனப் பட்டான். அத்தருணம் அனுமார் அவனைத் தள்ளிவிட்டு இலக்குமணனைத் தூக்கிக்கொண்டு வந்து இராமரிடம் சேர்த்தார்.

பிறகு இராமர் கோபங்கொண்டு மாருதியின் தோள்மீதமர்ந்து இராவணனோடெதிர்த்துக் கோதண்டத்தை வளைத்துக் குணத்தொனி பண்ணி, எண்ணிறந்த பாணங்களை மாரிபோலப் பொழிந்தார். இராவணனும் அம்புகளை அவர் மீது செலுத்தினான். நெடுநேரம் வரை இவர்களுடைய வில்யுத்தம் நடந்தது. இராம பாணங்களால் எண்ணிறந்த இராக்ஷதர்கள் இறந்தொழிந்தார்கள். முடிவில் இராமர் கணக்கற்ற அஸ்திரங்களை ஏவி இராவணனுடைய படைகள், ஆயுதங்கள், தேர், குதிரைகள், கிரீடங்கள் முதலியவற்றை யெல்லாம் போக்கி அவனை வெறுங்கையனாகச் செய்து விட்டார். அவன் மிகவும் நாணமடைந்து தலைகுனிந்து நின்றான். அப்போது இராமர் அவனை நோக்கி, "நிராயுத பாணியாய் நிற்கும் உன்னை நான் கொல்லேன்; நீ இன்றுபோய் நாளைப் படைத்துணையுடன் வா" என்று சொல்லி யுத்தத்தை நிறுத்திவிட்டார்.

அபஜயமடைந்த இராவணன் வெட்கத்தோடும் துக்கத்தோடும் சென்று, மறுநாள் கும்பகர்ணனை மிகுந்த படைகளுடன் சண்டைக் கனுப்பிவிட்டு, மகோதரனைக்கொண்டு சீதைக்கு மாயாஜனகனைக் காட்

டும்படிசெய்து அவனை வெட்டப்போவதாகச் சொல்லி ஜானகியைத் துன்புறுத்திக் கொண்டிருந்தான். அப்போது கும்பகர்ணன் முதலில் இலக்குமணர் முதலியவர்களோ டெதிர்த்து மிக்க சாமர்த்தியத்துடன் யுத்தம் புரிந்து முடிவில் இராமரால் கொல்லப்பட்டான். அவனிறந்த செய்தியை ஓர் இராக்ஷதன் இராவணனுக்குத் தெரிவித்தான். துராத்மாவாகிய தசக்கிரீவன் ஜானகியைக் கலங்கச்செய்துகொண் டிருந்ததை விடுத்துப் புலம்பிக்கொண்டு போய்விட்டான். சீதைக்குத் துணையாயிருந்த விபீஷணர் புத்திரியாகிய திரிசடை இராவணன் செய்த காரியம் பொய்யென்பதை விளக்கினாள். ஜானகி மனந்தேறினாள்.

கும்பகர்ணன் இறந்ததற்கு வருந்திச் சென்ற தசகண்டன் அதன்மேல் இளையகுமாரனாகிய அதிகாயனை மிக்க வீரமுள்ள இராக்ஷதப் படைகளுடன் யுத்தத்திற் கனுப்பினான். அவன் சென்று இராமருடைய வானரப்படைகள் திடுக்கிடும்படி நெடு நேரம் போர் புரிந்தான். அப்போது அவனுடன் சென்ற இராவணன் பிள்ளைகளாகிய தேவாந்தகன், திரிசிரா முதலியவர்கள் ஆஞ்சனேயரால் கொல்லப் பட்டார்கள். முடிவில் இலக்குமணனுடைய பிரமாஸ்திரத்தால் அதிகாயன் விண்ணுலகடைந்தான். பின்னர் எஞ்சியிருந்த இராவணன் பிள்ளைகளாகிய நராந்தகன், கும்பகர்ணனுடைய பிள்ளைகள் முதலியவர்கள் அப்போரில் அங்கதன் முதலிய வானர வீரர்களால் கொல்லப் பட்டார்கள்.

அங்ஙனம் பிள்ளைகள் இறக்கவே இராவணன் ஆருத்துயரத்தில் மூழ்கினான். அப்போது அவன் புத்

திரனுகிய இந்திரசித்து, இராவணனுக்குத் தைரிய வார்த்தைகள் கூறிவிட்டு வரபலமுள்ள ஆயுதங்களுடனும், மிகுந்த சேனைகளுடனும் சண்டைக்குப் போனன். யுத்தம் தொடங்கிற்று. இந்திரசித்து முதலில் வானரப்படைகளைக் கலக்கி விட்டான். அப்போது சுக்கிரீவன், அனுமார், அங்கதன், நீலன் முதலியவர்கள் அவனேடு போர் செய்து இளைத்துப் போனர்கள். அப்பால் இலக்குமணன் அவனேடெதிர்த்தான். இருவருக்கும் பலமான யுத்தம் நடந்தது. இலக்குமணன் இந்திரசித்துடன் வந்த சேனைகளையெல்லாம் பாணங்களால் தொலைத்து அவனுடம்பெல்லாம் காயமாக்கி விட்டான். பின்னர் சூரியன் அஸ்தமித்த சமையத்தில் இந்திரசித்து ஆகாயத்தில் மேகத்துக்குள் மறைந்து நின்று நாகபாசத்தைப் பிரயோகித்து இலக்குமணன் முதலிய எல்லோரையும் மூர்ச்சையடையச் செய்து விட்டு இராவணனிடம் சென்று தன் வெற்றியைக் கூறி மகிழ்ந்திருந்தான். இலக்குமணனிடமிருந்த விபீஷணர் மாத்திரம் நாகபாசத்தாற் கட்டுப்படாமலிருந்ததால் எல்லோரும் மயங்கிக் கிடப்பதைப் பார்த்து வருந்தி இராமரிடம் போய் நடந்ததைக் கூறினர். இராமர் வந்து இலக்குமணன் முதலியவர்களைப் பார்த்து மனங் கலங்கிப் புலம்பினர். அப்போது கருடன் வந்து நாகபாசத்தை விலக்கிச் சென்றன். இலக்குமணன் முதலியவர்கள் மயக்கம் நீங்கி எழுந்து சந்தோஷ ஆரவாரம் செய்தார்கள்.

அதைக்கேட்ட இராவணன் சந்தேகித்துத் தூதுவரால், இலக்குமணன் முதலியவர்கள் தெளிந்தெழுந்த விவரத்தை யுணர்ந்து, இலக்குமணன்

பாணங்களால் தேகமெங்கும் புண்ணுகி வருந்தியிருந்த இந்திரசித்துவை மீண்டும் போர்க் கெழும்படி தூண்டினுன். அவன், 'இன்றிருந்து நான் வேதனையை ஆற்றிக்கொண்டு நாளைக்குப் போகிறேன்' என்றுன்.

அதன் மேல் இராவணன், தன் படைத்தலைவர்களாகிய யாககேது, சூரியகேது முதலியவர்களையும் மகாபாரிசன், தூமாக்ஷன் முதலியவர்களையும் சண்டைக்கனுப்பினுன். அவர்கள் சிறிது நேரம் சண்டைசெய்து இலக்குமணனுலும், மற்ற வானரவீரர்களாலும்ஒழிந்து போனுர்கள். அதன்மேல் தசகண்டன் கரன் புத்திரனுன மகரக்கண்ணனை யுத்தத்திற் கனுப்பினுன். அவன் சென்று இராமரோடெதிர்த்து அநேகம் மாய யுத்தங்களைப் புரிந்து கடைசியில் அவருடைய ஒரே பாணத்தால் உயிர் துறந்தான். அவனுடன் குரூராக்கண்ணன், சங்கன் முதலியவர்களும், மற்ற இராக்ஷத வீரரும் வானர வீரர்களால் கொல்லப் பட்டார்கள்.

இராவணன் அவர்களெல்லோரும் மடிந்த செய்தியை உணர்ந்து வருந்தி இந்திரசித்துவையே மீண்டும் சண்டைக்கனுப்பினுன். அவன் மனக்கொதிப்புடன் முன்னிலும் அதிகமான படைகளைச் சேர்த்துக் கொண்டு போய் இராம லக்குமணர்களுடன் எதிர்த்தான். அவர்கள் அவனுடன் வந்த இராக்ஷதப் படைகளை யெல்லாம் ஒழித்துவிட்டார்கள். பின்னர் இலக்குமணன் தானெருவனுகவே இந்திரசித்தைக் கொல்ல விரும்பி அதனை இராமரிடம் தெரிவித்து அதற்கனுமதி பெற்றுக்கொண்டு அவனேடு போர்புரிந்து, அவனுடைய படைகளை யெல்லாம் போக்கி அவனை ஒற்

றைத் தேருடன் நிற்கும்படி செய்துவிட்டான். அதன் மேல் இந்திரசித்து மேகத்தில் மறைந்தான். இலக்குமணன் அவனைக் கொல்லுதற்குப் பிரம்மாஸ்திரத்தை விடுக்கலாமென்று இராமரிடம் கேட்டான். இராமர், 'அதைத் தொடுத்தால் உலகங்களுக்கெல்லாம் நாசமுண்டாகும்' என்று அதனை ஏவாமல் இலக்குமணனைத் தடுத்து விட்டார். அப்போது இந்திரசித்து, தானும் பிரம்மாஸ்திரத்தைப் பிரயோகஞ் செய்ய நினைத்து அதைப்பற்றி இராவணனிடம் யோசிப்பதற்குப் போய்விட்டான். அச்சமையம் இராக்கால மானதால் விபீஷணன் வானர சேனைகளுக்கு ஆகாரம் தேடச் சென்றான்; இராமர் பாடிவீட்டில் அஸ்திர பூஜை செய்து கொண்டிருந்தார். இலக்குமணன் படைகளைக் காத்திருந்தான்.

அப்போது இந்திரசித்து இராவணனிடத்தில், "நாம் வேறுபடைகளை அனுப்பி எதிரிகளுடன் கலகம் விளைவிக்கச் செய்யவேண்டும். அவ்வாறு செய்தால் தான் நான் அப் படைகளுக்குப்பின் மறைந்து நின்று பிரம்மாஸ்திரம் தொடுக்கச் சௌகரியமா யிருக்கும்" என்றான். உடனே இராவணன் அவ்வாறு சண்டை விளைவிக்கும்படி மகோதரனை அனுப்பினான். அவன் அநேகம் வீரர்களுடன் சென்று இலக்குமணனோடெதிர்த்தான். அந்த யுத்தம் வெகு மும்மரமாக நடந்தது. அதில் அனுமார் அகம்பனைக் கொன்றார். அப்போது வானரர்கள் மிகுந்த இருளில் சிதைந்து நின்று கலங்கினார்கள். இலக்குமணன் பாசுபதாஸ்திரத்தைப் பிரயோகித்து வெளிச்சத்தை உண்டாக்கி வானர சேனைகளை ஓரிடத்திற் சேர்த்தான். மகோதரன் பயந்து ஆகாயத்தில் மறைந்தான்.

அப்போது சில இராக்ஷத தூதுவர்கள் இராவண னிடத்திற் சென்று, விபீஷணன் ஆகாரந் தேடப்போ யிருப்பதையும், இராமர் பாடிவீட்டி லிருப்பதையும், இலக்குமணன் வானரப்படைகளுட னிருப்பதையும், மகோதரன் ஆகாயத்தில் மறைந்திருப்பதையுங் கூறி ஞன். இந்திரசித்து, 'பிரமாஸ்திரந் தொடுப்பதற்கு இதுதான் தருணம்' என்று மூலயாகஞ்செய்து முடித் துக்கொண்டு எதிரிகளின் படைகளுக்குமேல் போய் மேகக்கூட்டத்திற் புகுந்து மறைந்தான். அவனைக்கண் டதும் மகோதரன் அவன் செய்கைக்குத் துணைசெய்ய நினைந்து, இராக்ஷதர்களைத் தேவர்களாக்கித் தான், இந்திரனைப்போல வடிவெடுத்து இலக்குமணனுக்கெதி ரில்சென்று சண்டைதொடுத்தான். அவன் மாயையை உணராமல் இலக்குமணன் முதலானவர்கள், 'தேவர் கள் நம்மோடுசண்டைக்குவரக் காரணமென்ன?' என்று சந்தேகித்து மருட்சியடைந்தார்கள். அச்சமையம் பார்த்து இந்திரசித்து இலக்குமணன்மீது பிரமாஸ் திரத்தைப் பிரயோகித்துவிட்டான். அதனுல் இலக்கு மணன் மயங்கி வீழ்ந்துவிட்டான். அனுமாரும் மயங்கி வீழ்ந்தார். மற்றவானரர்கள் எல்லோரும் மடிந்தார் கள். உடனே இந்திரசித்து இராவணனிடம் சென்று தன் வெற்றியைக் கூறி மகிழ்ந்தான்.

அப்போது அஸ்திரபூஜை செய்யப் போயிருந்த இராமர், அதனை முடித்துவிட்டுத் திரும்பி யுத்தபூமிக்கு வந்து எல்லோரும் ஆவியொடுங்கிக்கிடப்பதைக் கண்டு பிரலாபித்து இலக்குமணன்மீது வீழ்ந்து மூர்ச்சை யாகிவிட்டார். அவரும் அங்ஙனம் மூர்ச்சையடைந்த தைச் சில இராக்ஷத தூதர்கள் இராவணனிடம் தெரி

வித்தார்கள். அவன் மிகமகிழ்ந்து சீதையை அழைத்துப்போய் இராமர் முதலியவர்களை அவளுக்குக் காட்டும்படி சில இராக்ஷத ஸ்திரீகளுக்குக் கட்டளையிட்டான். அவர்கள் அங்ஙனமே ஜானகியை இரணகளத்திற் கழைத்துச் சென்றார்கள். அவள் மயங்கிக்கிடக்கும் இராமர் முதலியவர்களையும், மடிந்த வானரர்களையும் பார்த்துப் புலம்பினாள். அப்போது திரிசடை, எல்லோரும் பிரமாஸ்திரத்தால் மயங்கிக்கிடக்கிறார்களென்றும், ஏதேனுமோ ருபாயத்தால் பிழைத்துக் கொள்வார்க ளென்றும் அவளுக்குத் தேறுதல் கூறினாள். அதன்மேல் அவளை இராக்ஷதஸ்திரீகள் மீண்டும் அசோகவனத்திற் கழைத்துப்போய் விட்டார்கள்.

பின்னர் ஆகாரவஸ்துக்கள் கொண்டுவரப்போன விபீஷணன் திரும்பிவந்து யுத்தகளத்தில் நடந்திருக்கும் துக்கசம்பவத்தைப்பார்த்து மனங்கலங்கி உடனே தெளிந்து ஆஞ்சனேயரைக் கண்டார். அவர் சிரஞ்சீவியாதலின் மூர்ச்சையடைந் திருந்தார். விபீஷணன், அவருடைய நிலைமையை உணர்ந்துகொண்டான். அங்ஙனம் உணர்ந்ததால் அவர் மூர்ச்சையடைந் திருக்கின்றாரென்று துணிந்து அவருடைய மயக்கத்தைப் போக்கினார். அச்சமையத்தில் சாம்பவரும் இறக்காமல் மூர்சையடைந்திருந்தார். விபீஷணனும், அனுமாரும் அவரிடம் சென்றார்கள். அவர், 'நெடுந்தூரத்தி லிருக்கும் கருமலையிலுள்ள சஞ்சீவியைக் கொணர்ந்தால் எல்லோரும் உயிர்த்தெழுவார்கள்' என்றார். அப்பொழுதே ஆஞ்சனேயர் அதனைக் கொண்டுவரச்சென்றார். பின் விபீஷணனும் சாம்பவரும் இராமரிடம் சென்றார்கள். அவர் மூர்ச்சைதெளிந்து அவர்களைக்கண்டு வருந்

ினர். சாம்பவர், அனுமார் எல்லோரையும் எழுப்புவதற்குச் சஞ்சீவி கொண்டுவரப் போயிருக்கும் விவரத்தைக்கூறினர். இராமர் கலக்கம் நீங்கினர். அப்பொழுது அனுமார் சஞ்சீவியை மலையோடுபெயர்த்தெடுத்துக்கொண்டு வந்து விட்டார். சஞ்சீவியின் காற்றுப் படவே எல்லோரும் பிழைத்தெழுந்தார்கள். இராமர் அளவற்ற மகிழ்ச்சி யடைந்தார். அனுமார் மீண்டும் சஞ்சீவி மலையை, அஃதிருந்த விடத்தில் கொண்டு போய்ச் சேர்க்க அங்கே போய்விட்டார். எல்லோரும் அவரைக் கொண்டாடினர்கள். இங்கு நடந்தவற்றையெல்லாம் இராக்ஷத தூதுவர்கள் இராவணனிடம் தெரிவித்தார்கள்.

அப்போது இராவணன் என்ன செய்யலாமென்று ஆலோசித்தான். இந்திரசித்து "ஏதேனுமோருபாயத்தால் இராம லக்குமணர்களைக் கலங்கச் செய்துவிட்டு நான் நிகும்பலைக்குப்போய் எதிரிகள் நாசமாகும்படியான ஒரு யாகத்தைச் செய்து முடித்துக் கொண்டால் பின்னர் எல்லோரையும் ஒழித்துவிடலாம்" என்று இராவணனுக்குக் கூறினன். அவன் அங்ஙனமே அதனைச் செய்யும்படி இந்திரசித்துவுக்குக் கட்டளை யிட்டான்.

அதன்மேல் இராமலக்குமணரும், வானரர்களும் அம்புகளாலும் நெருப்பாலும் இலங்கையை எரித்தார்கள். அங்கே எஞ்சியிருந்த இராக்ஷதர்கள் கலங்கினர்கள். அத்தருணத்தில் அனுமார் சஞ்சீவி மலையை அதன் இருப்பிடத்தில் சேர்த்துவிட்டுத் திரும்பி வந்து இலங்கையின் மேற்குக் கோட்டை வாயிலில் வீரகர்ச்சனை செய்தார். அப்போது இந்திரசித்து மாயா

சீதையை உண்டாக்கிக் கொண்டு வந்து அவருக்கு முன்னே வெட்டி விட்டு, 'இனி அயோத்தியிலுள்ளவர்களையும் நான் நாசப்படுத்தி விடுகிறேன்' என்று அங்கே செல்பவன் போன்று போக்குக்காட்டி நிகும்பலைக்குப் போய் யாகஞ்செய்யத் தொடங்கினான்.

மாருதி, அங்கே இந்திரசித்தினால் வெட்டப்பட்டவளை மெய்யான சீதை யென்றே நினைத்து மனங் கலங்கி இராமரிடம் விரைந்தோடி இந்திரசித்தின் செய்கைகளைக் கூறினர். உடனே இராம லக்குமணர்கள் மூர்ச்சையடைந்து தெளிந்து புலம்பிப் பலவாறு மயங்கி, இந்திரசித்து அயோத்திக்குப் போயிருப்பானென்று நினைத்து அங்கே செல்ல ஆலோசித்தார்கள். அப்போது விபீஷணன் அவர்கள் பிரயாணத்தை நிறுத்திவிட்டு வண்டின் ரூபமாகப் போய்ச் சீதை அசோகவனத்தி லிருப்பதையும், இந்திரசித்து நிகும்பலைக்கு யாகஞ்செய்யப் போயிருப்பதையும் அறிந்து வந்து இராமரிடம் கூறினன். அப்பொழுதே இராமர் இந்திரசித்தை வதைத்துவரும்படி இலக்குமணனையும், விபீஷணனையும், மாருதி முதலியவர்களையும் நிகும்பலைக் கனுப்பினர். அவர்கள் அங்கே போய்ச் சேர்ந்தார்கள். அப்போது இந்திரசித்து எண்ணிறந்த படைகளின் காவலோடு யாகஞ் செய்துகொண் டிருந்தான்.

இலக்குமணன் எண்ணிறந்த பாணங்களைப் பிரயோகித்து அந்த யாகத்தைச் சிதைத்து இந்திரசித்துவின் சேனையில் பெரும்பாகத்தை யொழித்துவிட்டான். இந்திரசித்து ஆத்திரங்கொண்டு போருக்கெழுந்தான். முதலில், மாருதியும், அங்கதன் முதலியவர்களும் அவனோடெதிர்த்துக் கைசோர்ந்து போனர்

கள். பின் இலக்குமணனோடு இந்திரசித்து போர் புரியத் தொடங்கினான். அந்த யுத்தம் எவரும் பிரமிக்கக்கூடியதா யிருந்தது. அவ்விருவரும் தெய்வாஸ்திரங்களை மாறிமாறிப் பிரயோகித்தார்கள். அவற்றால் இரண்டு பக்கங்களிலும் அளவற்ற சேதங்களுண்டாயின. அப்பொழுது இந்திரசித்து விபீஷணனைக் கண்டு நிந்தித்து அவன்மீது சில ஆயுதங்களைப் பிரயோகித்தான். விபீஷணன் அவனுடைய தேர்க்குதிரைகளையும், சாரதியையும் கொன்றுவிட்டான். இந்திரசித்து வேறொரு தேரிலேறிக்கொண்டு வந்துதான் யுத்தஞ் செய்யவேண்டுமென்று மறைந்தோடி இராவணனிடம் போய், "இராம லக்குமணர்களை வெல்வதரிது" என்றான். இராவணன் அவனைக் கோபித்துத் தானே யுத்தத்திற்குப் புறப்பட்டான். இந்திரசித்து அவனை நிறுத்திவிட்டு 'இனி நாம் திரும்பி இங்கே வரமாட்டோம்' என்று நிச்சயம் செய்துகொண்டு கண்ணீர் விட்டபடியே சிவனுடைய தேரேறிப் போய் இலக்குமணன் மீது சரங்களைப் பொழிந்தான். இலக்குமணன் சிறிது நேரத்துக்குள் அவனுடைய ஆயுதங்கள், தேர், முதலிய எல்லாவற்றையும் போக்கினான். பின்னர் இந்திரசித்து ஆகாயத்தில் நின்று மலைகளைப் பிடுங்கி யெறிந்து போர் செய்தான். முடிவில் இலக்குமணன் ஓர் அர்த்த சந்திரபாணத்தால் அவன் தலையை அறுத்துத் தள்ளினான். இராக்ஷதர்கள் ஓட்டம் பிடித்தார்கள். பின்னர் இலக்குமணன் இந்திரசித்துவின் தலையை எடுத்துக் கொண்டுபோய் இராமர் பாதங்களில் வைத்து அவரை வணங்கினான். இராமர் மகிழ்ந்து இலக்குமணனையும் விபீஷணனையும் கொண்டாடினார்.

இராக்ஷததூதர்கள் இராவணனிடம் சென்று இந்திரசித்து இறந்த செய்தியைக்கூறினார்கள். இராவணன் அடங்காக் கோபங் கொண்டு அத்தூதுவர்களையே வெட்டி விட்டுக் கீழேவீழ்ந்து புரண்டழுது உடனே இரணகளத்திற்குச் சென்று இந்திரசித்துவின் தேகத்தைக் கண்டெடுத்துப் புலம்பிக் கொண்டே நகரத்துக்குப் போனான். இந்திரசித்துவின் தேகத்தைக் கண்டு அவன்தாய் மண்டோதரி முதலிய பெண்களெல்லாம் கதறினார்கள். இராவணன் கோபந்தாங்க முடியாமல் சீதையை வெட்டுதற்குப் புறப்பட்டான். மகோதரன் 'அது நீதியல்ல' என்று அவனைத் தடுத்து விட்டான். அதன்மேல் தசக்கிரீவன் தனக்கு மூலபலமாகவிருந்த இராக்ஷதசேனைகளை யெல்லாம் வரவழைத்து, இராமலக்குமணர்களோடு போர்செய்ய அனுப்பிவிட்டுத் தான்மாத்திரம் வானர சேனைகளை நாசஞ் செய்வதற்கு மற்றொரு பக்கத்தில் போனான்.

மூலபல சேனைகள் இராமர் முதலியவர்கள் இருக்குமிடத்திற்குச் சென்றன. அவை, மிகப் பயங்கரமான தோற்ற முடையவைகளா யிருந்தபடியால் அவைகளைக் கண்டவுடனே வானர சைனியங்கள் பயந்தோடிவிட்டன. அங்கதன் போய் வானரர்களுக்குத் தைரியங் கூறி மீண்டும் அவர்களை அழைத்து வந்தான்.

அதன்மேல் இராமர், இலக்குமணனையும், ஆஞ்சனேயரையும் வானரசேனைகளைக் காத்துக் கொள்ளும்படி நிறுத்திவிட்டுத் தாமொருவராகவே மூலபல சேனைகளுடன் எதிர்த்துச் சண்டை புரிந்தார். அந்த யுத்தம்மிகப் பயங்காமானது. அந்தப்போரில் மூலபல வீரர்கள் செய்த சாமர்த்தியச் செயல்களும், இராமர்

அவர்களைச் சின்னபின்னப் படுத்திவந்த அவருடைய வில் வித்தையின் திறமையும் எவராலும் அளவிடற் கரியனவா யிருந்தன. மூலபல சேனைகள் எவ்வளவோ வீரத்தோடு பயங்கரமான யுத்தஞ்செய்தும் இராமர் அவற்றை யெல்லாம் சிறிது நேரத்தில் தம்முடைய கோதண்டத்தின் வன்மையால் தொலைத்துவிட்டு இலக்குமணன் முதலியவர்க ளிருக்குமிடத்தை நோக்கிப் போயினர்.

அத் தருணத்தில், முன்னுரைத்தபடி சென்ற இராவணன், எஞ்சியிருந்து தனக்குத் துணையாக வந்த படைகளுடன் இலக்குமணன் முதலியவர்கள் இருந்த விடத்திற்குப் போய்ப் போர்தொடங்கினன். இலக்குமணனுக்கும் அவனுக்கும் மும்முரமான சண்டை நடந்தது. அப்போது இராவணன் விபீஷணனைக் கண்டு அடங்காக் கோபங்கொண்டு அவன்மீது பிரமனுடைய வேலாயுதத்தை ஏவினன். இலக்குமணன் விபீஷணனைக் காப்பாற்றும் பொருட்டு அதனைத் தன் மார்பிலேற்றுக் கீழே சாய்ந்தான். இராவணன், அதன்மேல் எதிர்த்த விபீஷணனையும், அனுமார் முதலியவர்களையும் அஸ்திரப் பிரயோகங்களால் கலங்கச் செய்துவிட்டுத் தனக்கு வெற்றி யுண்டானதாக நினைத்து இலங்கா நகரத்திற்குப் போய்விட்டான். விபீஷணன் இலக்குமணன் வீழ்ந்துகிடப்பதைப் பார்த்துப் புலம்பினன். உடனே ஆஞ்சனேயர் சஞ்சீவியைக் கொண்டு வந்து இலக்குமணனை எழுப்பி விட்டார். பின்னர் அவர்க ளெல்லோரும் அவ்விடத்தை விட்டு இராமர் சண்டைசெய்த திக்கை நோக்கிச் சென்றனர்கள். அப்போது அவர்களைத் தேடிவந்த இராமர் அவர்களுக்கெதிர்ப்பட்டு, அவர்களால் அங்கே நடந்தவற்றை

யுணர்ந்து எல்லோரையும் கொண்டாடி மூலபல சேனை களெல்லாம் ஒழிந்ததை அவர்களிடம்கூறினுர். அவர்க ளெல்லோரும் ஆனந்த சாகரத்தில் மூழ்கினுர்கள்.

ஜெயங் கொண்டோமென்ற செருக்குடன் சென்ற தசக்கிரீவன் தன் மாளிகை சேர்ந்து மகிழ்ந் திருந்தான். அத்தருணத்தில் தூதர்கள் யுத்தகளத்தில் இலக்குமணன்பிழைத்தெழுந்ததையும், மூலபலசைனி யங்கள்முற்றும் ஒழிந்ததையும் இராவணனிடம்சென்று தெரிவித்தார்கள். தசமுகன் அவர்கள் சொல்லை நம்பா மல் ஏதேதோ கூறினுன். அப்போது மாலியவான், அவனிடத்தில், "தூதுவர்கள் கூறியவை உண்மை யாகவேயிருக்கும்; இராமருடைய மகிமையும்வல்லமை யும் அளவிடற்கரியனவாகும்; அவரால் நீ அழிவது நிச்சயம்; ஆதலால், இனிமேலாவது அந்தச்சீதையை விடுத்து, அவரை வணங்கிச் சமாதானம் செய்து கொள்" என்றுன். இராவணன் அப்போதும் அந்நற் புத்தியைக் கேளாமல் மாலியவானை இழிவாகப் பேசி விட்டுக் கோபுரத்தின் மேலேறி யுத்தகளத்தைப் பார்த்து, தூதுவர் சொன்ன விஷயங்கள் உண்மையா யிருக்கக்கண்டு ஆத்திரத்தோடு கீழிறங்கி, மீதியா யிருந்த இராக்ஷதர்களை யெல்லாம் மகோதரனுல் திரட்டிவரச்செய்து யுத்தத்திற்கு ஆயத்தப்படுத்திச் சிவபூஜை செய்து, என்றும் கொள்ளாத போர்க் கோலங்கொண்டு, சிறந்த குதிரைகள் பூட்டிய உயர்ந்த இரதத்திலேறி அப்பொழுது மேற்கூறியபடி சேர்த்த இராக்ஷதப் படைகளுடன் புறப்பட்டு யுத்தகளம் போய்ச் சேர்ந்தான்.

அவன் வருகையை யுணர்ந்த இராமர் 'இன்றோடு

இராவணனுடைய ஆயுள் முடிந்துவிடும்' என்று யுத்த கோலங்கொண்டு அவனுடன் எதிர்க்க எழுந்தருளினர். அப்போது இந்திரன் பொன்னலாகிய தேரை இராமருக்கு அனுப்பினன். மாதலி அந்த இரதத்தை இராமருக்கு முன்னே கொண்டுபோய் நிறுத்தி அதன் வரலாற்றையும் கூறினன். இராமர் அதிலேறிப் புறப்பட்டார். இராவணன், மகோதரனை இலக்குமணனோடு போர் செய்யும்படி அனுப்பிவிட்டு, இராமர் தேர்வரும் திக்கை நோக்கிச் சென்றுகொண் டிருந்தான். அவனுடைய கட்டளைப்படியே மகோதரனும் இலக்குமணனிருக்கும் திக்கை நோக்கிச் சென்றன். அங்ஙனம் சென்றவனுக்கு ஆயுட்காலம் முடிந்துவிட்டபடியால் இராமபிரானுடைய தேரானது எதிர்ப்பட்டது. அதைக் கண்டவுடன் மகோதரன் தன் சாரதியை நோக்கி, "நீ நம்முடைய தேரை இராமனுடைய இரதத்தில் முட்டும்படி ஓட்டு" என்று சொன்னன். உடனே சாரதி அவனிடத்தில், "ஐயா! இன்று இராமருடைய உக்கிரத்தைப் பார்த்தால் பயங்கரமாயிருக்கின்றது; யார் அவருடன் எதிர்த்தாலும் மடிவார்கள்; நீர் வேறொருபக்கம் நழுவிவிடுவதே நல்லதாகும்" என்றன். மகோதரன் அவனைக் கோபித்தான். சாரதி அவனுடைய கோபத்திற்குப் பயந்து இராமருக் கெதிரில் தேரைச் செலுத்தினன். இராமருக்கும் மகோதரனுக்கும் மும்முரமான யுத்தம் நடந்தது. அதில் சிறிது நேரத்திற்குள் மகோதரனுடனிருந்த நால்வகைப் படைகளும் இராம பாணத்தால் ஒழிந்து அவன் மாத்ரம் தனித்து நின்று இராமருடைய தேர்மீதும், சாரதியின் மேலும், அவரது தோளிலும் எண்ணிறந்த பாண வருஷங்களைச் சொரிந்து ஆர்ப்பரித்தான்.

இராமர் புன்சிரிப்புக் கொண்டு நிமிஷ நேரத்தில் தம்முடைய பாணங்களைச் செலுத்தி, அவனுடைய வில்லையும், கவசத்தையும் தொலைத்து, தோளையும் கழுத்தையும் அறுத்துத் தள்ளினார். மகோதரன் தொலைந்து போனான்.

அவனிறந்ததைக் கண்ட இராவணன் மனங் கொதித்து, விரைந்துபோய் இராமரோ டெதிர்த்தான். அப்போது இராமர் அவன்மீது மனதிரங்கி, "இவனை முன்னே கொன்றுவிட லாகாது; இவனோடு வந்திருக்கும் சேனைகளை வதைத்து இவனைத் தனியனாகச் செய்துவிட்டால் இவன் மனந்தளர்ந்து நம்மைச் சரணமடைந்தாலும் அடைவான்; அவ்வாறு நற்புத்தி வந்து பணிவானானால் நாம்இவனைக் கொல்லாமல் விட்டு விடலாம்; அதன்மேல் கொஞ்சக் காலமாவது இவன் பிழைத்திருப்பான்" என்று மனதில் தீர்மானித்துக்கொண்டு அதனை வெளிக்குக் காட்டாமல் அவனோடு வந்த நால்வகைப் படைகளின் மீதும் அம்புகளை எய்தார். அப்போது இராவணனுக்குப் பல துர்நிமித்தங்கள் உண்டாயின. அவற்றைப் பார்த்தும் இராவணன் மனந் தளராமல், "இந்த மனிதனால் என்னை வெல்ல முடியுமோ" என்று அகங்காரங் கொண்டு சங்கத்தை வாயில் வைத்து ஊதினான். அப்போது பாஞ்சசன்யம் தானே வந்து இராமர் பக்கத்தில் நின்று அதற்கு எதிரொலியாக முழங்கிற்று. மாதலியும் இந்திரனுடைய சங்கத்தை யெடுத்து முழக்கினான். இராமரும், இராவணனும் விற்களை வளைத்திழுத்து விட்டுக் குணத்தொனி பண்ணினார்கள்.

அதன்மேல் இராவணன், "இந்த அற்ப மனித

ஞேடு நான் வில்யுத்தம் செய்துகொண் டிருப்பது எனக்குக் கேவலமாகும்; ஆதலின், இவனைத் தேரோடு தூக்கிப் பூமியிலறைந்து கொல்லுகிறேன்" என்று ஆர்ப்பரித்தான். பின்னர் அவனுக்கு, "அப்படிக் கொன்று விட்டால் நம்முடைய வில் வல்லமை உலகத்தாருக்குத் தெரியாது; ஆதலால் சிறிது நேரம் வில் யுத்தஞ் செய்துவிட்டு அதன்மேல் இவனைக் கொல்லலாம்" என்னும் எண்ணமுண்டாயிற்று. அதனுல் அவன் கொடிய அம்புகளை இராமர்மீது எய்தான். உடனே இராமர் தம்முடைய பாணங்களால் அவற்றை ஆகாயத்திலேயே துண்டித்துவிட்டார். அதன்மேல் இலங்காதிபன், உலகம் நடுங்கத்தக்க பாணங்களை அடுக்கடுக்காகச் செலுத்திக்கொண்டே யிருந்தான். இராமர் அவற்றைக் கண்டித்துக்கொண்டே யிருந்தார். தன்னுடைய வலிய அம்புகளெல்லாம் நாசமாவதைக்கண்டு இராவணன் மிகுந்த கோபங்கொண்டு எழுத்தடிகளையும், தோமரங்களையும், கோடரிகளையும், தண்டாயுதங்களையும், இருப்புலக்கைகளையும், சக்கராயுதங்களையும், சூலங்களையும் மேலும் மேலும் பிரயோகித்தான். இராமர் அவற்றையும் பொடியாக்கி விட்டார்.

அதன்மேல் இராவணன் தன்தேருடன் அந்தரத்தில்போய் நின்று பாணவருஷங்களைப் பொழிந்தான்; அவற்ருல் அனேகம் வானரர்கள் இறந்தார்கள். அப்போது இராமர் சினந்து தம்முடைய தேரையும் ஆகாயத்திற் செலுத்தும்படி மாதலிக்குக் கட்டளையிட அவன் அவ்வாறே செலுத்தினுன். இராவணனுடைய தேரும் இராமருடைய தேரும் நாலாதிக்குகளிலும் சென்று இடசாரி வலசாரியாகச் சுற்றி இலங்கைக்கு

வந்து சேர்ந்தன. அதன்மேல், இராவணன், இராமர் தேரிற் கட்டியிருந்த இடிக்கொடியை ஓர் அர்த்தசந்திர பாணத்தால் அறுத்துத்தள்ளி, குதிரைகளின் மேலும் அணியணியாகச் சரங்களையேவி, மாதலியின் மார்பில் பன்னிரண்டு அம்புகளை எவி, மேலும் அநேக பாணங் களை மாரிபோல் வாரியிறைத்து இராமர் உருவந் தோற் ருதபடி அவரை மறைத்து விட்டான். தேவர்களும், 'இராகவர் தோற்று விடுவாரோ' என்று சந்தேக முற் ருர்கள். இலக்குமணனும், வானர வீரர்களும் இராம ரைக் காணமுடியாமல் கலங்கினுர்கள்.

அப்போது, மாதலியின் மார்பில் தைக்கும்படி இராவணன் அம்பு செலுத்தியதற்கு இராமர் சினந்து நிமிஷநேரத்தில் அந்த இராக்ஷஸனுடைய அம்புகளை யெல்லாம் அறுத்துத்தள்ளி அவன் தோள்களிலும் மார்பிலும் இரத்த பானம் பண்ணும்படி கூரிய அம்பு களை யேவி, அவன் தேரிற்கட்டிய வீணைக்கொடியை யும் ஒரு பாணத்தால் அறுத்து விட்டார். அத்தரு ணத்தில் இராமருடைய தேரில் கொடியில்லாதிருப்ப தைக் கண்டு அதன் சிகரத்தில் கருடன் கொடியாக எழுந்தருளினுன். அதன்மேல் இராவணன் சிவாஸ்தி ரத்தை இராமர்மீது பிரயோகித்தான். இராமர் சிவா ஸ்திரத்தைக் கொண்டே அதனை அடக்கி விட்டார். அதைக்கண்டு இராவணன் கண்சிவந்து சீறி உலகங்களை யெல்லாம் அழிக்கத்தக்க குரூரமாகிய பாணங்களை இராமர் மீது எவினுன்; அவர், அக்கினியாஸ்திரத்தால் அவற்றை அறுத்துத் தள்ளிவிட்டார். அதன் மேலும் இராவணன், எமனைப் போன்ற அநேகம் அம்புக ளைப் பிரயோகித்தான்; இராமர் அர்த்த சந்திர பாணங் களால் அவற்றைப் பிளந்து தள்ளினுர்.

பின்னர் தசக்கிரீவன், மயனுல் தனக்குக் கொடுக்கப்பட்ட பாணத்தைத் தசரத குமாரர்மீது செலுத்தினன். அந்தப்பாணம், 'உலகத்தில் இனி மனிதப் பூண்டே இல்லாமற் செய்து விடுகிறேன்' என்று உக்கிரமாக வந்தது. உடனே இராமர் காந்தர்வாஸ்திரத்தைக் கொண்டு அதைத் துண்டுபடுத்தி விட்டார். அதன்மேல் இராவணன் அகஸ்தியரால் தனக்குக் கொடுக்கப்பட்ட கதாயுதத்தை யெடுத்தெறிந்தான். இராமர் தாமரை மொட்டம்பைப் பிரயோகித்து அதனை நூறு துண்டுகளாகச் செய்துவிட்டார். பின்னர் தசக்கிரீவன், 'இனி அற்ப ஆயுதங்களை ஏவுவதால் பயனில்லை' என்று மாயாஸ்திரத்தை யெடுத்துத் தொடுத்து விட்டான். அந்த அஸ்திரத்தின் மாயையால், முன் இறந்துபோன இந்திரசித்து முதலிய இராக்ஷத வீரர்களெல்லாம் எழுந்துவந்து இராமலக்குமணர்களையும், வானர வீரர்களையும் பெயர் சொல்லிக் கூப்பிட்டு யுத்தத்திற் கழைப்பது போலவும், அநேகம் பூதகணங்களும் பேய்க் கூட்டங்களும் ஆகாயமெங்கும் நிறைந்து வீரகர்ஜனை புரிவதுபோலவும் பயங்கரமான தோற்றங்களுண்டாயின. அந்தத் தோற்றங்களைக் கண்டவுடன் இராமர், மாதலியைப் பார்த்து, "இவை யெல்லாம் மாயா தோற்றங்களா? அல்லது இராக்ஷதர்கள், தாங்கள் பெற்ற வரங்களால் மீண்டும் உயிரைப் பெற்றெழுந்தார்களா?" என்று வினவ, அவன், "சுவாமி! இராவணன் மாயாஸ்திரத்தைப் பிரயோகித் திருக்கிறுன்; அதனுல் இந்தப் பொய்த் தோற்றங்களுண்டா யிருக்கின்றன; நீர் ஞானஸ்திரத்தைச் செலுத்தினுல் இவையெல்லாம் ஒழிந்து போகும்" என்று கூறினன். உடனே இராமர் அதனைப்

பிரயோகித்து இராவணனுடைய மாயாஸ்திரத்தின் செய்கைகளை யெல்லாம் போக்கிவிட்டார்.

அதன்மேல் இலங்காதிபன், யாவரும் நடுங்கத் தக்க சூலாயுதத்தை ஏவினன். அது வடவாமுகாக்கினியைப் போல் அதிக வேகமாய் வந்தது. அதைக் கண்டு தேவர்கள் பயந்து இராமபிரானை நோக்கி, "சுவாமி! இந்தச்சூலம் எவர்க்கு மடங்காது; உம்மால் தான் இதனை அடக்கல்முடியும்; இதனை ஒழிக்கத்தக்க பிரயத்தனத்தைச் சீக்கிரம் நீர் செய்யும்" என்று பிரார்த்தித்தார்கள். இராமர் விரைந்து பிரசண்ட மாருதம் போன்ற சில அம்புகளையும், தேவதாஸ்திரங்களையும் அதன்மீது செலுத்தினர். அவற்றால் அதனைத் தடுக்க முடியவில்லை. அப்போது இராமர் அதனைத் தடுக்கும் உபாயம் அறியாதவர்போல் சும்மா நின்றார். அவர் நிலையைப் பார்த்துத் தேவர்களும, முனிவர்களும், மானிடர்களும் நடுக்க முற்றார்கள். அந்தச் சூலம் இராமருடைய மார்பை ஊடுருவிச் செல்வதுபோல் சமீபத்தில் சென்றது; உடனே இராமர் கோபங் கொண்டு அதைப் பார்த்து உங்காரத் தொனியால் அதட்டினர். அந்தச் சப்தத்தின் அதிர்ச்சியால் அச் சூலமானது நொறுங்கித் தூளாகிவிட்டது. அதைக்கண்டு தேவர்கள் ஆனந்த ஆரவாரஞ் செய்து இராமர் மீது கற்பக மலர்களை வாரி யிறைத்தார்கள்.

சூலம் பொடியாய்ப் போகவே, இராவணன் பிரமை யடைந்து, "இந்த இராமனுக்குமுன் நம்முடைய வரங்களும், ஆயுதங்களும் பயனற்றுப் போகின்றன; ஆதலால் விபீஷணன் சொன்னபடி இவன் எல்லாவற்றிற்கும் முதற் காரண வஸ்துவாகவே யிருப்பான்"

என்று நினைத்தான். அடுத்த நிமிஷத்தில் அவனுடைய ஊழ்வினையால் அவனுக்கு அந்த எண்ணம் மாறிவிட்டது. அதனால் அவன், "இந்த இராமன் யாராயிருந்தாலு மிருக்கட்டும்; இவனை நான் வென்று கீர்த்தியடைவேன்; அப்படியே வெல்ல முடியாமல் இறந்தபோதிலும் இத்தகைய பெரியவனோடு எதிர்த்திறந்தேன் என்னும் கீர்த்தி எனக்குண்டு" என்று தென்மேற்குத் திசைப்பாலனாகிய நிருதியினுடைய நாகக்கணையை இராமர்மேல் ஏவினான். அந்த அஸ்திரம் ஆதிசேடனும் அஞ்சும்படி ஆகாய முழுவதும் வியாபித்த தேகத்தை யுடைய பல பாம்புகளாய் அநேகம் படங்களை விரித்து, எல்லா வாய்களிலும் சமுத்திர ஜலம்போல் விஷமொழுக, கண்களில் தீப் பொறிகள் சிதற, உயர்ந்த மலைகளைக் கவ்விக்கொண்டு உக்கிரமாக வந்தது. உடனே இராமர் கருடாஸ்திரத்தைப் பிரயோகித்தார். அது, பல கருடன்களாகத் தோன்றிப் போய் அந்த நாகங்களை யெல்லாம் விழுங்கி அந்த அஸ்திரத்தின் வல்லமையைக் குறைத்து விட்டது.

அதைக் கண்டு இராவணன் அக்கினிச் சுவாலைபோல் பெருமூச்சு விட்டுக் கோபித்து, இடிகளையொத்த அநேகம் பாணங்களை யேவினான். இரகுகுலோத்தமர் எண்ணிறந்த பாணங்களைச் செலுத்தி அவற்றைக் கண்டித்து இராவணனுடைய மார்பிலும் வலிய பாணங்களை யேவ, அவை அடிக்குதையும் தோற்றாதபடி அவன் நெஞ்சிற் பாய்ந்தன. அப்போது இராவணனுக்குப் புத்திமயங்கித் தனுர்வித்தையும் மந்திர வித்தையும் மறந்துபோகத் தலைப்பட்டன. இராமருக்குப் பராக்கிரமமும் வீரமும் அதிகரித்தன.

அதன்மேல் இராகவர் அர்த்தசந்திர பாணத்தால் இராவணனுடைய பத்துத் தலைகளில் ஒன்றை அறுத்துத் தள்ளினார். அந்தத் தலை நெருப்பைக் கக்கிக் கொண்டு போய்ச் சமுத்திரத்தில் வீழ்ந்தது. அதைக் கண்டு தேவர்களெல்லாம் கீழே யிறங்கி வந்து இராமரைத் துதித்துப் பாடினார்கள். அத்தருணத்தில் இராவணனுடைய அறுந்த தலைக்குப் பதிலாக வேறொரு தலை முளைத்து இராமரைப் பார்த்து அதட்டியது. அறுபட்டுக் கடலில் வீழ்ந்த தலையும் கர்ஜித்தது. அப்போது இராவணன், "எங்கும் ஜெயமே பெற்று வந்த நம்முடைய தலைகளில் ஒன்றை இந்த இராமன் அறுத்தானல்லவா!" என்று மிகுந்த கோப வெறி கொண்டு இராகவருடைய தோள்களில் பதினான்கு அம்புகளை எய்தான். இராமர் அவற்றைத் தடுத்து விட்டு அவனுடைய கைகளிலொன்றைப் பிறைமுகக் கணையால் அறுத்தார். அக் கை யறுந்த விடத்தில் மற்றொரு கை முளைத்தது.

இராவணன் அறுந்த கையை எடுத்து மாதலியின்மேல் எறிந்தான். அந்தக் கை மார்பில் படவே மாதலி வாயால் இரத்தத்தைக் கக்கினான். அதைக் கண்ட இராவணன், 'இதுதான் இவனைக் கொல்ல நல்ல சமயம்' என்று தோமராயுதத்தைச் சுழற்றி அவன்மே லெறிந்தான். இராமர் பஞ்சமுகாஸ்திரத்தால் அத்தோமரத்தைப் பொடித்துவிட்டுச் சிறிதும் ஓய்வடையாமல் அபரிமிதமான பாணங்களை இலங்காதிபன் மேல் எய்துகொண்டே யிருந்தார். அவற்றால் இராவணனுடைய தலைகள் அறுந்து பற்பலவிடங்களில் மலைகளைப்போல் வீழ்வதும், மீண்டும் முளைப்பதுமா

யிருந்தன. அவ்வாறு முளைத்துக்கொண்டே யிருக்கும் தலைகளையுடைய இராவணன் அடங்காச் சினத்தனை இத் தன் இருபது கைகளாலும் வாள், வேல், உலக்கை, தண்டம், கோடரி முதலிய ஆயுதங்களை இராமர் மார்பில் வாரி யெறிந்துகொண்டே யிருந்தான்.

இராகவர், அவற்றை யெல்லாம் தடுத்துக் கொண்டே, "நாம் அறுத்துத் தள்ளத்தள்ள இந்தக் கொடியனுடைய தலைகளும் கைகளும் முளைத்துக் கொண்டே யிருக்கின்றனவே ; இப்பேர்ப்பட்ட வரத்தையும் தேவர்கள் இவனுக்குக் கொடுத்ததால்தான் அவஸ்தைப் பட்டார்கள் ; இனி இவனை எந்த உபாயத்தாற் கொல்லலாம்" என்று ஆலோசித்து மிகுந்த கோபங்கொண்டு அவனுடைய எல்லா அவயவங்களிலும் பாயும்படி அளவில்லாத பாணங்களை எய்து உடம்பெங்கும் மூடி விட்டார் அப்போது தேகமெங்கும் அம்புகள்தைத்து ஒவ்வொரு அவயவங்களிலும் இரத்த மொழுகியபடியால் இராவணன் செயலற்று அறிவு கலங்கித் தேரில் தானே வீழ்ந்தான். அதைப் பார்த்துத் தேவர்களெல்லோரும் ஆனந்தக் கூத்தாடினார்கள். இராவணனுடைய சாரதி, "நம் தலைவன் மூர்ச்சித்துக் கிடக்கின்றானாதலால், இனி இங்கே இரதத்தை நிறுத்துவது தகுதியல்ல" என்று தேரைத் திருப்பி நடத்திக்கொண்டுபோனான் ; மற்ற இராக்ஷதர்களும் அத்தேரின் பின்னே சென்றனர்.

அப்போது மாதலி இராமரை நோக்கி, "சுவாமி! இத்துஷ்டன் மூர்ச்சை தெளிந்தால் பின்னர் இவனை ஒன்றுஞ் செய்யவியலாது ; ஆதலால் இப்பொழுதே கொன்றுவிட வேண்டும்" என்றான். அதற்கு இராமர்,

"மாதலி! இவன் அறிவு மயங்கிக் கிடக்கின்றான்; இத் தருணத்தில் இவன்மீது அஸ்திரப் பிரயோகஞ் செய்தல் யுத்த தர்மமாகாது; இவனுடைய யுத்தமோ சீக்கிரத்தில் முடிவாகப்போகின்றது; இவன் எழுந்த பின்பு தான் இவனோடு நாம் எதிர்க்கவேண்டும்; நீ யொன்றுக்கும் அஞ்சாதே" என்று கூறியருளினார். அவருடைய உத்தம குணத்தைக்கண்டு தேவர்கள் அவருக்கு நமஸ்காரஞ் செய்தார்கள்.

அதன் மேல் இலங்காதிபன் மூர்ச்சை தெளிந்தெழுந்து தனக்கெதிரில் இராமரைக்காணுமல் மற்ற மூன்று பக்கங்களிலும் திரும்பிப் பார்த்தான். அவர் பின் பக்கத்திலே நின்ருர். அப்போது இராவணன், தான் மூர்ச்சை யடைந்த சமையத்தில் தன் சாரதி பயந்து தேரைத் திரும்பிக் கொண்டு வந்திருக்கின்றானென்பதை யுணர்ந்து அவன் மீது மிகுந்த கோபங் கொண்டு அவனை நோக்கி, "அடா சாரதி! எதிரிகள் பார்த்து நகைக்கத் தேரைத் திருப்பிக் கொண்டு வந்து எனக்கு மிக்க அவமானத்தை யுண்டாக்கி விட்டாயே; உன் உயிரை இப்பொழுதே நான் போக்கி விடுகின்றேன்" என்று அவனை வெட்டுதற்கு வாளை உருவிக் கொண்டு ஓங்கினான். அப்போது சாரதி அவனுடைய பாதங்களில் வீழ்ந்து வணங்கி, "இராக்ஷஸகுல சிரேஷ்டரே! நீர் அப்போது மூர்ச்சித்திருந்தீர்; உம்மை அவ்விடத்தைவிட்டு அப்புறப் படுத்தாவிட்டால் உம்முடைய பிராணன் போய்விடுமென்று எனக்குத் தெரிந்தது ; அதனால் உம்முடைய உயிரைக் காப்பாற்றும் பொருட்டு நான் இரதத்தைத் திருப்பிக்கொண்டு வந்தேன்; அவ்வாறு உமக்கு நன்மை புரிந்த நிரபராதியாகிய என்னைக் கொல்லுதல் தர்மமாகாது" என்றான்.

அதன்மேல் இராவணன் கோபந்தணிந்து அவனை நோக்கி, "சாரதி! நடந்ததுபோகட்டும்; நீ இப்போது விரைந்து இராமன்மேல் தேரைச் செலுத்து" என்றான். அப்படியே அவன் இரதத்தை இராமருக் கெதிரில் கொண்டுவந்து நிறுத்தினான். உடனே தசக்கிரீவன், இராமர்மீது யமனுக்குச் சமானமாகிய அநேகம் அம்புகளை யேவி முன்னைக் காட்டிலும் மூன்று பங்கதிகமான யுத்தத்தைச் செய்தான். அப்போது இராமர், "இந்த இராவணன் கையில் வில்லிருக்கும்வரை இவன் யுத்தத்தை விட்டொழியான்; ஆதலின் இவனுடைய தனுசை யொழித்து விடவேண்டும்" என்று நாராயணாஸ்திரத்தைப் பிரயோகித்து அவனுடைய வில்லை இரண்டு துண்டுகளாகச் செய்துவிட்டார். அவன் மற்றொரு வில்லை யெடுத்தான். அதையும் இராமர் ஒடித்து விட்டார். இப்படியே அவன் மேலும் மேலும் பற்பல விற்களை எடுக்க எடுக்க அவற்றை யெல்லாம் இராமர் ஒழித்து விட்டார்.

அதன்மேல் இராவணன், "இனி வில்லெடுப்பதிற் பயனில்லை" என்று இருப்புலக்கை, தண்டு, வேல், ஈட்டி, தோமரம் முதலிய ஆயுதங்களை எடுத்தெடுத்து ஓயாமல் இராமருடைய மார்பில் தாக்கும்படி விட்டெறிந்து கொண்டே யிருந்தான். இராமர் அந்த ஆயுதங்களை யெல்லாம் அம்புகளால் அறுத்தறுத்துக் குவித்துவிட்டு, "நாம் இப்பொழுதெய்யும் பாணங்கள் இவனுயிரை வாங்கமாட்டா; அபரிமிதமான பாணங்கள் இவன் தேகத்தைத் துளைத்தும் இவனுடைய தைரியங் குறையவில்லை; ஆதாலால், இனித்தாமதிக்காமல் தக்க ஆயுதத்தை இவன் மீது பிரயோகித்து இவனுயிரை வாங்கிவிட வேண்டும்"

என்று, பூர்வத்தில் திரிபுரதகனஞ் செய்யும்படி சிருஷ்டிக்கப்பட்டதும், மாமரங்களைத் துளைத்ததும், வாலியின் மார்பை ஊடுருவிச் சென்றதுமாகிய பிரமாஸ்திரத்தை யெடுத்துக் கோதண்டத்தில் தொடுத்து இராவணனுடைய மார்புக்கு இலக்குப்பார்த்துப் பிரயோகித்துவிட்டார்.

அந்த அஸ்திரமானது அதிக வேகத்தையும் தீக்ஷ்ணியத்தையுங் கொண்டு, நான்கு முகங்களையுடையதாகித் தன்னுடைய பிரகாசத்தால் உலகத்திலுள்ள அந்தகாரத்தையெல்லாம் போக்கி, விஷ்ணுசக்கரத்தின் பூர்ணுமிசத்தைப் பெற்றுச் சகலரும் நடுங்கச் சென்று, துஷ்டனுகிய இராவணனுடைய மார்பில் தைத்து, அவன்பெற்ற வரங்களையும், ஆயுளையும், பலத்தையும் போக்கி, ஊடுருவி, உயிரையும் போக்கிவிட்டது. அப்பொழுதே இராவணன் மேகம் முழங்குவது போல் இருபது தோள்களையும் தட்டிப் பத்து வாய்களாலும் வீரகர்ஜ்ஜனை செய்து இருபது கண்களிலும் புகையும் இரத்தமும் பெருகத் தானேறியிருந்த உயர்ந்த இரதத்திலிருந்து குப்புற்றுக் கீழே வீழ்ந்தான். இராமர் மாதலியை நோக்கி, “அப்பா மாதலி! யுத்தம் முடிந்தது; இனி ஆகாயத்திற் செலுத்துகின்ற நம்முடைய இரதத்தைப் பூமியில் இறக்குவாயாக” என்று கட்டளையிட, அவன் தேரைப் பூமிக்குக் கொண்டுவந்தான்.

அதன்மேல் ஸ்ரீ இராகவர், அத்தேரை விட்டிறங்கி, அதனைச் சுவர்க்கலோகத்திற்கு ஓட்டிக்கொண்டு போகும்படி மாதலிக்குக் கட்டளையிட்டு அவனைத் தேருடன் அனுப்பிவிட்டு அப்பொழுது குதூகலத்துடன்

தம்மிடம் வந்து சூழ்ந்த இலக்குமணன், விபீஷணன், சுக்கிரீவன், அனுமார், அங்கதன் முதலியவர்களை அழைத்துக்கொண்டு பூமியில் வீழ்ந்து கிடக்கின்ற இராவணனிடம் போய், அவனை அவர்களுக்குக் காட்டி, "இவனைப் பார்த்தீர்களா; இவன் தன்னுடைய பராக்கிரமத்தால் திரிலோகங்களையும் தனக்குள் அடக்கினவனானலும் என்னுடைய பாணத்தால் இப்போ திறந்தான்; அப்படி யிறந்தாலும் இந்த ஜெயத்தைப் பற்றி எனக்கு மகிழ்ச்சி யுண்டாகவில்லை; ஏனென்றால் இவனுடைய முதுகில் அம்புகள்பட்ட வடுக்கள் காணப்படுகின்றன ; அதனால் இவன் முன்னே யாருக்கோ யுத்தத்தில் தோற்றோடி யிருக்கின்றானென்பது விளங்குகிறது. மேலும் இவன், முன்னொரு காலத்தில் கார்த்தவீரியார்ச்சுனனால் கட்டப்பட்டானென்பதையும், வாலியின் வாலில் கட்டி யிழுக்கப் பட்டா னென்பதையும் நான் கேள்விப்பட்டிருக்கின்றேன்; இவ்வாறு சிலருக்குத் தோற்ற இவனைக் கொன்றதால் எனக்கென்ன சிறப்புண்டு ; வீணாக இவனைக் கொன்று நான் அபகீர்த்தியைத் தேடிக்கொண்டேன்" என்று வீரந்தோன்றக் கூறினார்.

அப்போது விபீஷணன் கண்ணீரொழுக எழுந்து நின்று இராமரை வணங்கி அவர் முகத்தை நோக்கி, "வீர சிகாமணியே! முந்தி இந்த இராவணனுக்குத் தேவர்களுடைய சாபம் ஏற்பட்டிருந்ததால் ஆயிரந் தோள்களையுடைய கார்த்த வீரியனும், மிக்க பலசாலியாகிய வாலியும் மிக அருமையாக இவனை வென்றார்கள். அச்சாபம் இல்லாவிடில் அவர்களாலும் மற்றெவர்களாலும் இவனை வெல்லுதல் அருமை. இவன்

எப்பொழுதும் வீரனே; நீராகையினுலே இவனைக் கொன்றீர்; ஆதலின், இவனைக் கொன்றதால் உமக்கு மிக்க புகழே; அதனுல் இழிவுண்டாகுமென்று நீர் நினைப்பது தவறு; இவனுடைய முதுகில் தெரியும் வடுக்கள் வேறு காரணத்தால் உண்டானவை; முன்ஞெரு காலத்தில் இவன் எதிரிகளைத் தேடித் தன் தேரைச் செலுத்திக்கொண்டு உலகமுழுவதும் சுற்றித் தன்னேடு போர்செய்வாரின்மையால் முடிவில் திக்கஜங்களோடு போர் செய்து, அவை முட்டியதால் அவற்றின் தந்தங்கள் தன் மார்பில்பாய, அவற்றை அப்படியே திருகிமுறித்துத் தன்வெற்றிக் கறிகுறியாகவும், அலங்காரமாகவும் நெஞ்சிலேயே அழகாகஅராவி வைத்துக்கொண்டான். பின்ஞெரு காலத்தில் இவன் யமனேடு போர் செய்யும்போது அவனுடைய வஜ்ஜிர பாணங்கள் இவனுடைய மார்பில் பட்டதாலும், ஆஞ்சனேயர் யுத்தகளத்தில் குத்தியதாலும் அந்தத் தந்தங்கள் முதுகுபரியந்தம் பாய்ந்து உதிர்ந்துவிட்டன; அதனுலேயே இவன் முதுகில் இவ்வடுக்கள் காணப்படுகின்றன; இதனுலும் இவனுக்குத் தோஷமில்லை” என்று சொன்ஞன்.

அந்த வார்த்தைகளைக் கேட்டவுடன் இராமர் சந்தேகத்தை யொழித்துக் களித்து, விபீஷணனை நோக்கி, “அப்பா! உன் தமையன் கொடியனுயிருந்தாலும் அவனுக்கு நீயே ஈமக்கடன் செய்தற்குரியவனுயிருத்தலின், நீ சென்று பிரேதபூஜை, உத்தரகிரியை முதலியவற்றைச் செய்துவரக் கடவாய்; மற்ற பந்துவர்க்கத்தாருக்கும் செய்ய வேண்டுவனவற்றைச் செய்” என்று சொல்ல, அவன், இராவணன் இறந்து கிடந்த இடத்திற்குச் சென்ருன். அத்தருணத்தில்

இராவணன் இறந்த சந்தோஷத்தால், எல்லா வுலகங் களிலுமுள்ள சமஸ்த சாதுஜனங்களும், தேவர்களும் இராமரை ஸ்தோத்திரஞ் செய்து கொண்டு வந்து முறைப்படி அவரடியில் வணங்கினர்கள். இராமர் ஒரு பரிசுத்தமான விடத்தில் எழுந்தருளி அவர் களோடு வார்த்தையாடிக்கொண் டிருந்தார்.

இராமரிடம் விடைபெற்றுச் சென்ற விபீஷணன் இராவணனைக் கண்டான்; எப்படியிருந்தாலும் அவன் இரத்தக் கலப்புடையவனாதலின், 'தானுடாவிடினும் தன் சரீரம் ஆடும்' என்றபடி இராவணனுடைய மரணத்தைக்கண்டதும் அவனுடல் துடித்தது. ஆற்ற வொண்ணுத் துயரம் அவனுக் குண்டாகிவிட்டது. உடனே அவன் தன்னை மறந்து இலங்காதிபன்மேல் திடீரென்று வீழ்ந்து, "அந்தோ! அண்ணு! மகா பராக்கிரமசாலியாகிய நீ சகல ஐசுவரியங்களையும் இழந்து இப்படி மண்ணில் வீழ்ந்து மாண்டு கிடக்கின் ருயே! நீ மகான்களுக்குச் செய்த தீங்கன்ரு உன்னை இப்படி யழித்துவிட்டது. உன்னுடைய துராசாரத் தால் நீ யிறந்ததுமல்லாமல் உன்னுடைய குலமுழுவ தும் நாசமடைந்ததே; ஸ்ரீ இராகவருடைய பெருமை யைக் கொஞ்சமும் உணராமல் நீ இவ்வாறு நாச மடைந்தாயே; உன்னை நான் எப்போது காண்பேன்" என்று பலவாறு புலம்பி அழுதான். சாம்பவர் அவ னுக்குத் தேறுதல் கூறிக்கொண் டிருந்தார்.

இங்கே இவர்கள் இப்படியிருக்க, மண்டோதரி யானவள், தன் பர்த்தாவாகிய இராவணன் இறந்த செய்தி கேட்டு இலக்ஷக்கணக்கான இராக்ஷத ஸ்திரீ கள் கூந்தலை விரித்துப் போட்டுக் கோவென்று கதறிக்

கொண்டு தன் பின்னேவர, மார்பிலடித்துக்கொண்டு விரைந்தோடிவந்து இராவணன்மேல் வீழ்ந்து, "ஆ! என் பர்த்தாவே! சுவர்ணமுடிகளணிந்த உமது தலைகள் புழுதியில் உருண்டு கிடக்கின்றனவே; உமக்குச் சமீபத்தில் அழிவில்லையென்று நான் நினைத்திருந்தேனே; சீதையின் கற்பே உம்மை அழித்துவிட்டது; இதை நான் முந்தியே உணர்ந்திருந்தால் சீதையை நீர் விட்டு விடும்படி செய்திருப்பேனே; இராமபிரானுடைய மகிமையை நீர் உணராமல் இவ்வாறு மடிந்துவிட்டீரே; உமக்கு முன் நானே இறந்துவிட வேண்டுமென்று நினைத்திருந்தேனே; அந்த எண்ணம் கைகூடாமற் போயிற்றே; இனி நான் உயிர் வைத்திருக்கமாட்டேன்; இதோ உம்முடன் வந்து விடுகின்றேன்" என்று புலம்பி, அவள் மகா பதிவிரதையாதலின், கணவனைத் தழுவியபடியே அப்பொழுதே சோர்ந்து உயிரை விட்டாள். அவளுடைய கற்பை நோக்கி, தேவஸ்திரீகளும், மானிடப் பெண்களும் அவளைப் பலவாறு கொண்டாடினார்கள்.

அதன்மேல் விபீஷணன் மிகுந்த துக்கத்துடனே வேதவிதிப்படி பிரேதச் சடங்குகளைச் செய்து, சந்தனக் கட்டைகளையும் அகிற்கட்டைகளையும் அடுக்கி, அவற்றின் மேல் இராவணன் தேகத்தை யேற்றி, மற்ற கடன்களையும் செய்து முடித்து, மண்டோதரியையும் இராவணனுடன் கட்டைகளின் மேலேற்றி நெருப்பிட்டுத் தகனஞ்செய்து கண்ணீர்விட் டழுது கொண்டே அவர்களுக்கும், கும்பகர்ணன், இந்திரசித்து, கும்பன், நிகும்பன் முதலானவர்களுக்கும் நீர்க்கடன் முதலியவற்றைச் செய்துவிட்டுத் திரும்பிவந்து இராமருடைய சரணாரவிந்தங்களில் வீழ்ந்து பணிந்

தான். அவ்வாறு வணங்கிய விபீஷணனுக்கு இராமர் பல தேறுதலான வார்த்தைகளைக் கூறி அவனுடைய விசனத்தை மாற்றினார்.

அதன்மேல் இராமர் இலக்குமணனை நோக்கி, "தம்பி! சுக்கிரீவன், அனுமான் முதலியவர்களோடு நீ சென்று விபீஷணனுக்கு முடிசூட்டி வரக்கடவாய்" என்று கட்டளையிட்டார். அப்படியே செய்ய இலக்குமணன் விபீஷணனையும், மற்றவர்களையும் இலங்கைக்கு அழைத்துச் சென்றான். தேவர்களும், திக்குப்பாலகர்களும் கங்கை முதலிய தீர்த்தங்களையும், சுவர்ண கிரீடத்தையும், வஜ்ஜிரங்களிழைத்த சிம்மாதனத்தையும், மற்றும் மகுடாபிஷேகத்துக்கு வேண்டியவைகளையும் கொண்டுவந்தார்கள். பிரமன் கட்டளையால் தெய்வத்தச்சனாகிய விசுவகர்மா மணிமயமாகிய மண்டபமொன்றமைத்தான். சமஸ்த தேவர்களும் விபீஷணனுக்கு மங்களாபிஷேகம் செய்து அவனை அழைத்து வந்து சிம்மாதனத்தில் வீற்றிருக்கச் செய்தார்கள். அப்போது இலக்குமணன் இராமரைத் தியானித்து மகுடத்தை யெடுத்து, வேதமந்திரங்களைச் சொல்லி விபீஷணாழ்வான் சிரசில் சூட்டினான். தேவர்களும் மற்றவர்களும் மகிழ்ந்து அவன்மீது புஷ்பங்களை வாரியிறைத்து அவனை ஆசீர்வதித்தார்கள்.

அதன்மேல் விபீஷணன், இலக்குமணனை நோக்கி, "இராமாநுஜரே! நான் சென்று இராமபிரானை வணங்கிக்கொண்டு வருகின்றேன்; அதுவரை நீர் இங்குள்ளவர்களைக் காத்துக்கொண்டிரும்" என்று அவனை அங்கே நிறுத்தி அவனிடம் விடை பெற்றுக்கொண்டு, சுக்கிரீவன், அங்கதன் முதலியவர்கள் சூழச்சென்று

இராமருடைய திருவடிகளில் வீழ்ந்து வணங்கினான். இராமர் அவனை வாரியெடுத்து மார்போடணைத்துக் கொண்டு அவனுக்கு இராஜநீதிகளை யெல்லாம் சொல்லி, 'நீ என்றும் சுகமாக வாழ்ந்திருக்கக்கடவாய்' என்று அவனை வாழ்த்திவிட்டு உடனே ஆஞ்சனேயரை நோக்கி, "நீ சென்று இங்கு நடந்தவைகளை யெல்லாம் ஜானகிக்குத் தெரிவி" என்று கட்டளையிட்டார்.

அத்தியாயம்--15.

ஜானகி மகிமை.

அப்பொழுதே ஆஞ்சனேயர் அசோகவனத்திற்குச் சென்று சீதையினெதிரில் நின்று ஸ்ரீ இராமருடைய சகஸ்திர திருநாமங்களையும் பன்முறைபாடி ஆனந்தக் கூத்தாடிக்கொண்டு, இருகாங்களையும் உச்சிமேற்கூப்பி, "அன்னையாரே! உமக்கு மங்களமுண்டாகுக; அந்தப் பாபிஷ்டனாகிய இராவணன் குலத்தோடு மாண்டான்" என்று சொன்னார். அதைக் கேட்டவுடன் ஜானகி தனக்கு அடக்கமுடியாத மகிழ்ச்சி யுண்டானபடியால், இன்னதைத்தான் சொல்வதென்றுணராமல் சித்தப்பிரமை யடைந்தவள் போலிருந்தாள்.

அவளுடைய நிலைமையைப் பார்த்த ஆஞ்சனேயர், அவளை நோக்கி, "தாயே! நீர் சந்தோஷமிகுதியால் பேசாமலிருக்கின்றீரா, அல்லது என்னுடைய வார்த்தை பொய்யென்று நினைத்துப் பேசாதிருக்கின்றீரா? ஒன்றுஞ் சொல்லாமலிருப்பதற்குக் காரணமென்ன?" என்று வினவினார். அதற்குச் சீதை,

"ஆஞ்சனேயா! உன் சொல்லிலும் நான் சந்தேகம் வைப்பேனே? முன்னே நீ வந்திருந்தபோது, 'உம்மை நானே இச்சிறையிலிருந்து நீக்குகிறேன்' என்று என்னிடம் சொல்லியபடி இப்போது வந்து எனக்குச் சந்தோஷ செய்தி தெரிவித்த உனக்கு நான் என்ன பிரதி யுபகாரம் செய்வதென்று யோசித்து யோசித்துப் பார்த்தேன்; எனக்கொன்றும் விளங்க வில்லை; அதனாலும், அளவற்று என் மனத்திலெழுந்த சந்தோஷத்தினாலும் இன்னதைத்தான் சொல்வதென் னும் உணர்ச்சியின்றி நான் பேசாமலிருந்தேனேயன்றி வேறொன்றும் கருதவில்லை. உனக்கு நான் செய்ய வேண்டியது யாது? அதனை நீயே கூறக்கடவாய்" என்று சொன்னாள்.

உடனே அனுமார், "இறைவியே! நான் உம்மை அந்த இரகு குலோத்தமரிடம் கொண்டுபோய்ச் சேர்க்க நீர் திருவருள் புரிவதுதான் நான் பெற்றுக் கொள்ளத் தக்கவரம்; அது தவிர, இங்குள்ள திரிசடை யென்னும் என்தாய் தவிர, மற்ற இராக்ஷத ஸ்திரீக ளெல்லாம் உமக்குத் துன்பஞ் செய்தவர்களானபடி யால் அவர்களை யெல்லாம் ஒரே அறையால் நான் கொல்லும்படி எனக்கு நீர் உத்தர வளிக்கவேண்டும்; அதுவும் ஒரு வரந்தான்" என்றார்.

இதைக் கேட்டவுடன் அந்த இராக்ஷத ஸ்திரீக ளெல்லாம், "தாயே! நீர்தாம் எங்களைக் காப்பாற்ற வேண்டும்" என்று சீதையின் காலைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டார்கள். பிராட்டியார் 'அஞ்சாதீர் கள்' என்று அவர்களுக்கு அபயங்கொடுத்து விட்டு அனுமாரை நோக்கி, "புத்திரா! இவர்கள் இராவண

னுக்குப் பயந்து அவன் கட்டளைப்படி அக்கொடுங் காரியங்களைச் செய்தார்களே யன்றிச் சுயமாக ஒன்றும் செய்யவில்லை; ஆதலால் இவர்களை நீ கொல்ல வேண்டாம்" என்று கூறினாள். அனுமார், 'தாயே! உமது கட்டளைப்படியே நான் இவர்களை ஒன்றும் செய்யவில்லை' என்று அங்கே நின்றுகொண்டிருந்தனர்.

இப்படியிருக்க, ஸ்ரீ இராகவர், விபீஷணனை நோக்கி "நீ சென்று ஜானகியைச் சகல வைபவங்களோடும் இங்கே அழைத்துக்கொண்டுவா" என்று கட்டளையிட, அவன் உடனே சீதையிடம் சென்று வணங்கி அக்கட்டளையைத் தெரிவித்தான். ஜானகி அதைக்கேட்டவுடன் அங்கம் பூரித்து விபீஷணனை நோக்கி, "இராக்ஷஸகுல தீரனே! எல்லோரும் பார்த்து என் கற்பைக் கொண்டாடும்படி நான் இப்போதிருக்கும் நிலைமையுடனே வருவதுதான் எனக்குப் பெருமை. அலங்காரஞ் செய்துகொண்டு வருவது பெருமை யாகாது" என்று கூறினாள். அதற்கு விபீஷணன், "தாயே! ஸ்ரீ இராகவரே தங்களை அலங்கரித்துக் கொண்டு வரும்படி கட்டளை யிட்டிருக்கின்றார்" என்று சொன்னான். அதன்மேல் சீதை அதற்குச் சம்மதித்தாள். அங்குள்ள தேவர்கள் சீதைக்கு அலங்காரஞ் செய்யும்படி திலோத்தமை முதலிய தேவஸ்திரீகளுக்குக் கட்டளையிட்டனர். அவர்கள் வாசனைத் தைலம் முதலிய திருமஞ்சனத் திரவியங்களைச் சுமந்து கொண்டுவந்து சீதா பிராட்டிக்கு ஸ்நானஞ் செய்து வைத்துச் சடையாய்க் கிடந்த தலையைச் சிக்குநீக்கி வாரி முடித்துப் பட்டுவஸ்திரத்தை உடுத்திக் கலவைச்

சாந்தும் குங்குமச் சேறும் பூசிச் சகல ஆபரணங்களை யும் பூட்டி அலங்காரஞ் செய்தார்கள்.

அதன்மேல் விபீஷணன், ஜானகியை விமானத் தின்மேல் எழுந்தருளச்செய்து, சகல தேவஸ்திரீ களும், முனிவர் பத்தினிகளும் துதித்துப் புடைசூழ வும், பிராட்டியாரைக்கண்டு சேவிக்க நெருங்கிவரும் தேவர் முதலியவர்களைத் தன்னுடைய ஏவலாளராகிய இராக்ஷதர்கள் பொற்பிரம்புகளை யேந்தி அதட்டி விலக்கி முன்னே செல்லவும், அழைத்துக்கொண்டு இராமருக்குச் சமீபத்திற் போய்ச் சேர்ந்தான். அப் போது, திரிபுவனங்களிலுமுள்ள உத்தமபுருஷர்களும், கற்புடைய மாதர்களும், ஸ்ரீ இராமரையும், ஜானகியை யும் கண்டு சேவிக்கும்பொருட்டு அங்கே வந்து கூடிச் சீதைக்கு முன்னும் பின்னும் நிறைந்தார்கள். அக் கூட்டத்தால் ஜானகியின் விமானம் செல்வதற்கு வழி யில்லாமற் போயிற்று; அதனால் விபீஷணன் செய்த கட்டளைப்படி இராக்ஷதசேவகர்கள் அவர்களை அடித்து விலக்கினார்கள். அப்போது கடலிரைச்சல் போல் அக்கூட்டத்தாரிடும் பெருங்கோஷ்ட முண்டாயிற்று. அதைக்கேட்டு இராமர், 'எதனால் அந்தக்கோஷ்ட முண்டாகிறது?' என்று பக்கத்தில் நின்ற முனிவர் களிடம் கேட்டார். அவர்கள் அதன் காரணத்தைக் கூறினார்கள். அதற்குள் விபீஷணன் இராமருக்கெதி ரில் வந்து அவரை வணங்கினான்.

அப்போது இராகவர் கோபத்தோடு அவனைப் பார்த்து, "விபீஷணா! சாது ஜனங்களாகிய தேவர் களும் மற்றவர்களும், என்னைக் காணும் பொருட்டும் யுத்தகளத்தைக் காணும்பொருட்டும் இங்கே வந்து

கூடியிருக்கின்றார்கள் ; அவர்களை என் தூரத்தும்படி நீ செய்தாய் ? உனக்கு யார் அந்த உத்தரவு கொடுத்தவர் ?" என்று வெறுத்துக் கூறினார். விபீஷணன், 'சுவாமிக்குக் கோபம் வரும்படி நாம் நடந்து கொண்டேமே' என்று துக்க முற்றிருந்தான்.

அப்போது ஜானகி இராமரிடம் நெருங்கிவந்து, அவருடைய திவ்விய மேனியைக் கண்களாரக்கண்டு இழந்த உயிரை மீண்டும் அடைந்தவள்போல் ஆனந்தங்கொண்டு விமானத்தைவிட்டு விரைந்திறங்கி அவருக்கு முன்னே சென்று அவருடைய பாதங்களில் வீழ்ந்து வணங்கி யெழுந்து நின்றாள்.

உண்மையை நன்றாக ஆராயாமல் மேற்போக்கான சில விஷயங்களைப் பார்த்து அபிப்பிராய பேதப்பட்டு நல்லோர்மீதும் பழி சுமத்துதல் உலகத்தார் சுபாவமாதலின், அவ்வியற்கைப் படியே, சீதை சிறிது காலம் பிரிந்திருந்து மீண்டு வந்ததன் பொருட்டு அவர்கள் தோஷங் கூறுதிருக்கவும், சீதையின் மகிமையை யாவர்க்கும் விளக்கவும் இராமர் நினைத்து, அவ்வாறு ஆவலோடு சீதை வந்து தம்மைப் பணிந்தும் அவளிடத்தே சந்தோஷமான முகக்குறி காட்டாமல், வெறுப்புற்றவர் போல் சில நீதிகளை எடுத்துரைத்தார். அவற்றைக் கேட்டதும் சீதை மனம் நொந்து, தன்னுடைய தெய்விகத்தன்மை விளங்கும் பொருட்டு, எல்லோருடைய மனமும் உருகும்படியான சில வார்த்தைகளைப் பேசி விட்டுப் பின்னர் விபீஷணன் வேண்டுகோளின்படி இலங்கையிலுள்ளவர்களைக் காத்துக் கொண்டிருந்து அப்போது தன்னைப் பார்க்கவேண்டு

மென்னும் விருப்பத்தால் அங்கே வந்திருந்த இலக்கு மணனை நோக்கி, "இராமாநுஜரே! இச்சமயத்தில் என் நாதருடைய இன்மொழி கேட்கப்பெறாத நான் இனி எதற்காக உலகிலிருக்க வேண்டும்; நான் வீழ்ந்திறப் பதற்கு அக்கினியை மூட்டக் கடவீர்" என்று சொன் னாள். இலக்குமணன், சீதையின் வார்த்தையைக் கேட்டவுடனே மனம் பதைத்து இராமரை நோக்கி வணங்கி நின்றான். இராமர், சீதை சொற்படியே தீயை மூட்டும்படி அவனுக்குக் கண்சாடை காட்டினார். இலக்குமணன் கண்ணீர் விட்டழுதுகொண்டே சாஸ் திரவிதிப்படி நெருப்பை மூட்டினான். ஜானகி அக் கினியைச் சுற்றி வந்தாள். அப்போது தேவர்களும் தேவஸ்திரீகளும், மற்றையர்களும், கண்ணீர்விட்டுத் துக்கத்துடன் நின்றார்கள். அப்படி எல்லோரும் துக் கித்து அழுதுகொண் டிருக்கும்போதே நெருப்பை வலம்வந்த சீதா பிராட்டி, நெருப்பை நோக்கி, "அக்கினி பகவானே! நான் என் நாதருக்கு வெறுப் புடையவளா யிருப்பேனானால் என்னை நீ சுட்டெரித்து விடக் கடவாய்" என்று சொல்லிவிட்டு இராமரை வணங்கி அந்நெருப்பிற் குதித்தாள். அப்படிப் பாய்ந்த மாத்திரத்தில் சீதையின் கற்பென்னும் அக்கினியானது தீக்கடவுளைச் சுட்டெரித்து விட்டது. அவன் அந்த வெப்பத்தைச் சகிக்கமுடியாமல் துள்ளித் துடித்து ஜானகியைத் தன் கரங்களால் தாங்கிக்கொண்டுவந்து இராமருக்கெதிரில் நிறுத்தி, அவருக்கும், அங்குக் கூடி யிருந்த மற்றவர்களுக்கும், அவளுடைய மகிமை அள விடற்கரியதென்பதை எடுத்துக் கூறி விளக்கினான். அதன்மேல் இராமர் மிகக்களிப்புடன் ஜானகியைச் சமீபத்தில் அழைத்துக் கொண்டார்.

அப்போது பிரமாவும், சிவேந்திராதி தேவர்களும் மகாவிஷ்ணுவும், இலக்குமியுமே இராக்ஷஸ சம்மாரத்தின் பொருட்டு இராமரும் சீதையுமாக வந்திருக்கின்றார்களென்பதை யாவருமறியக் கூறி, இராமரைத் துதித்துச் சென்றார்கள். அதன்மேல் சிவபெருமான் இராகவரைப் பிரிந்த துன்பத்தால் மரணமடைந்து விஷ்ணுவின் உலகத்தை யடைந்த தசரத சக்கரவர்த்தியினிடம் உடனே சென்று "சக்கரவர்த்தியே! உம்முடைய புத்திரராகிய இராமர் இராக்ஷஸ ஸம்மாரம் செய்து இலங்கையில் குதூகலத்துட னிருக்கின்றார்; நீர் அவரிடம் சென்று பேசி அவரைப் பிரிந்த துன்பத்தை ஆற்றிக்கொள்ளும்" என்று சொன்னார். அப்பொழுதே தசரதர் புறப்பட்டு இராமருக்கெதிரில் வந்து நின்றார்.

இராமர் அவரைக் கண்டமாத்திரத்தில் அவருடைய பாதங்களில் வீழ்ந்து பணிந்தார். தசரதர் அவரை வாரியெடுத்து மார்புறத் தழுவிக்கொண்டு, "அப்பா! இராமா! கைகேயியால் நான் உன்னை விட்டுப் பிரிந்து உயிர் நீத்தும் ஆறாத்துயரத்தி லாழ்ந்திருந்தேன்; இப்போதுன்னைத் தழுவியதால் அத்துயரம் நீங்கப் பெற்றேன்; மேலும் உன்னை நான் பெற்றதனாலேயே தேவர்களெல்லாம் கொண்டாடத்தக்க மேலான பதவியையும் அடைந்தேன்" என்று பலவாறு கொண்டாடிவிட்டுச் சீதையின் பக்கத்தில் சென்றார்.

சீதை அவருடைய பாதத்தில் வீழ்ந்து பணிந்தாள். அவர் அவளை நோக்கி, "கற்பரசியே! இராமன் உன்னை அக்கினியிற் பிரவேசிக்கச் செய்தது உன் கற்

புயர்வை எல்லோருக்கும் விளக்கிக்காட்டற் பொருட்டேயாம்; நீயே மங்கையர்க் கரசியாகிய இலக்குமி” என்று கூறிப் புகழ்ந்து விட்டு, இலக்குமணனைக் கண்டு தழுவி, “என் அருமைப் புதல்வா! உன் தமையனுடன் நீ எப்பொழுதும் பிரியாதிருந்து அவனுக்குதவி புரிந்தனை; எவராலும் ஜெயிக்க முடியாத இந்திரசித்துவைக் கொன்றாய்; உலகத்தில் தருமத்தை நிலைநிறுத்தினாய் ; இத்தகைய உன்னைப் பிள்ளையாகப் பெற்ற எனக்கென்ன குறை?” என்று கொண்டாடி மீண்டும் இராமரிடம் வந்து, “இராமா! நீ என்னிடம் ஏதேனுமொரு வரம் பெற்றுக்கொள்” என்று சொன்னார்.

இராமர், அவரைநோக்கி, “தந்தையே! நான் உம்மைவிட்டுப் பிரிந்து நீர் இறந்த செய்தியைக் கேள்விப்பட்டு ஆறாத்துயரத்திலாழ்ந்து, இனி விஷ்ணு லோகத்திற்கு வந்து உம்மைக்கண்டுதான் அத்துயரத்தை ஆற்றிக்கொள்ள வேண்டுமென்று நினைத்திருந்தேன்; அப்படியிருந்த என்னிடம் நீரே வந்து இப்போதென் விசனத்தை மாற்றினீர்; இதைக்காட்டிலும் எனக்கு வேறேவரம் என்ன விருக்கின்றது?” என்றார். மனுஷியாவதாரத்திற் கேற்ப நடிக்கின்ற இராமருடைய வார்த்தையைத் தசரதர் கேட்டு அவரை மீண்டும் பார்த்து, “இராமா! உனக்கதுவே போதுமென்றாலும் நான் சொன்னதற்காவது எதையேனும் நீ கேட்கத்தான் வேண்டும்” என்றார்.

அதன்மேல் இராமர், “தந்தையே! நீர் வெறுத்திருக்கின்ற கைகேயியும் பரதனும், எனக்குத் தாயுந் தம்பியுமாகும்படி வரந்தர வேண்டும்” என்றார்.

அதைக் கேட்டவுடன் அவருடைய பெருங் குணத்தைப்பற்றிச் சகல ஜீவர்களும் சந்தோஷித்து ஆரவாரஞ் செய்தார்கள். அப்போது தசரதர் இராமரை நோக்கி, "என் புதல்வா! பரதன் உனக்குத் தம்பியாகத்தக்க வரத்தை வேண்டுமானுல் நான் தருகின்றேன்; கைகேயிமேலுள்ள வெறுப்பு மாத்திரம் எனக்கெப்பொழுதும் தீராது" என்ருர். அதற்கு இராமர், "தந்தையே! கைகேயி என்னைக் காட்டிற்கனுப்பியதால் சாதுக்களுக்கு நன்மை யுண்டாயிற்று; அதனுல் அவளை நான் தெய்வமாகவே கருதி யிருக்கின்றேன்; ஆதலால் நீர் அவள்மீதுள்ள வெறுப்பை விட்டுவிட வேண்டும்" என்ருர்.

தசரதர் அவள்மீதிருந்த கோபம் மாறி, இராமர் கேட்ட வரத்தைக் கொடுத்து அவரையும், இலக்குமணனையும், சிதையையும் ஆசீர்வதித்து எல்லோரிடத்திலும் விடை பெற்றுக்கொண்டு விமானத்தின் மீதேறித் தம் பதவிக்குச் சென்றனர்.

அதன்மேல் தேவர்களெல்லோரும் இராமரை நோக்கி, "ஸ்ரீ இராகவரே! எங்கள் துன்பத்தைப் போக்கிய நீர் எங்களிடத்தும் ஏதேனும் வரம்பெற்றுக் கொள்ளவேண்டும்" என்று சொன்னுர்கள். இராமர், "யுத்தத்தில் மடிந்த வானரர்களெல்லாம் பிழைக்கவும் அவர்கள் வசிக்குமிடங்களிலெல்லாம் காய்கனி கிழங்கு தேன் நீர் முதலியவைகள் விருத்தியடையவும் நீங்கள் வரந்தரவேண்டும்" என்று தேவர்களிடம் கூறினுர். அமரர்கள் அவ்வாறே வரங் கொடுத்தார்கள். அப்பொழுதே அனுமார் கொண்டுவந்த சஞ்சீவியால் பிழைத்தவர்கள் தவிர மற்ற வானரர்களெல்லாம்

தங்கள் தேகத்தோடு உயிர் பெற்றெழுந்து வந்து இராமரை வணங்கினார்கள். பின்னர் முன்னே யுத்த களத்தில் வந்து நாகபாசத்தை நீக்கிச் சென்ற கருடனும் வந்து இராமரிடம் வணங்கித் தன்னுடைய வரலாற்றையும், தனக்கும் இராமருக்கும் முன்னுள்ள சம்பந்தத்தையும் கூறிச் சென்றான்.

அத்தியாயம்---16.

இராமர் மீட்சி

அதன்மேல் பிரமன் முதலிய தேவர்கள் இராமரைநோக்கி, "எம்பெருமானே! உமக்கு வனவாசத்திற் கேற்பட்ட பதினான்கு வருடங்களும் இன்றோடு பூர்த்தியாகின்றன. நீர் பாதனுக்குச் சொல்லிவந்தபடி இன்றைக்கே அயோத்திக்குச் செல்லாவிடில் அவன் அக்கினிப் பிரவேசமாய் விடுவான்; ஆதலால் நீர் அங்கே விரைந்து செல்ல வேண்டும்" என்று கூறிவிட்டு அவரிடம் விடை பெற்றுக்கொண்டு தங்கள் இருப்பிடங்கட்குப் போனார்கள்.

இராமர் விபீஷணனை நோக்கி "இன்றே அயோத்திக்குப் போகத்தக்க வாகனமொன் றிருக்கின்றதோ?" என்று கேட்க, விபீஷணன், "சுவாமி! குபேரனுக்குப் பிரமதேவரால் முன்னே கொடுக்கப்பட்ட புஷ்பக விமானமொன்று இங்கே இராவணனுக்குச் சொந்தமாயிருக்கின்றது; அதன்மீது வானரசேனைகள் முழுவதும் ஏறினும் ஒருபக்கத்தில் அடங்கிப்போம்; அது, குறித்த விடத்திற்கு வெகுவிரைவிற் போய்ச் சேரத்தக்கது" என்று கூறினான். 'அப்படியானால் அதைக் கொண்டுவா' என்று விபீஷணனுக்கு இராமர் கட்டளை யிட்

டார். அவ்வாறே விபீஷணன் அதனைக் கொண்டு வந்தான்.

இராமர் மகிழ்ந்து அதன்மீதேறினார். சீதை அதன் மேல் எழுந்தருளப் போகும் போது திரிசடை அவளை நோக்கி நமஸ்கரித்து, "அன்னையே! அடியாளும் தேவரீரோடு அயோத்திக்கு வருகிறேன்" என்று சொன்னாள். சீதை, "திரிசடையே! இலங்கையைச் சிறப்பிக்கத் தக்கபெண்கள் உன்னைத் தவிர வேறொருவருமில்லை; ஆதலால், நீ இங்கே தானே இரு" என்று அவளுக்கு ஆக்ஞாபித்து விட்டு இராமர் பக்கத்தில் போய் அமர்ந்தாள். இலக்குமணனும் விமானத்தில் ஏறினான்.

அப்போது இராமர், விபீஷணனை நோக்கி, "தம்பி! நீ போய் இலங்காநகரத்தில் அரசு செய்து கொண்டு சுகமாக வாழ்ந்திரு" என்று சொல்லி விட்டுச் சுக்கிரீவனைப் பார்த்து, "வானராதிபதியே! நீ உன் சேனைகளுடன் கிஷ்கிந்தைக்குச் சென்று அங்கே செங்கோலோச்சி வாழக் கடவாய்" என்று சொல்லி, அங்கதன், சாம்பவந்தர், அனுமார், பனசன், நீலன் முதலியவர்களை நோக்கி, "நீங்கள் சுக்கிரீவனுடன் சென்று அவனுக்குத் துணையாயிருங்கள்" என்று கூறினார்.

இந்த வார்த்தைகளைக் கேட்டவுடனே விபீஷணன் முதலிய எல்லோரும், மனந் திடுக்கிட்டுக் கண்ணீர் ஆறுயப் பெருக இராமருடைய பாதங்களில் வீழ்ந்து வணங்கி அவர் திருமுகத்தை நோக்கி, "எம்பெருமானே! தேவரீரோடு நாங்களும் வந்து தங்களுடைய பட்டாபிஷேக மகோற்சவத்தைக் கண்டு களிக்

கும்படியான வரத்தை நீர் எங்களுக்குக் கொடுத்தருள வேண்டும்" என்று பிரார்த்தனை செய்தார்கள். அவர்கள் பிரிவாற்ருமையால் படுந் துன்பத்தைக் கண்ட இராமர் மனதிரங்கி அவர்களை நோக்கி, "அன்பர்களே! நீங்கள் துக்கப்படவேண்டாம்; உங்களை அயோத்திக்கு அழைத்துக்கொண்டு போகவேண்டும் என்னும் எண்ணம் எனக்குண்டு; எனினும், உங்களுடைய கருத்தை உணர்ந்து கொள்வதற்கே நான் இவ்வாறு கூறினேன்; நீங்கள் கவலையை ஒழித்து விமானத்தில் ஏறுவீர்களாக" என்று கட்டளையிட, எல்லோரும் விமானத்தில் ஏறினுர்கள். வானர சேனைகளும் ஏறின.

அதன்மேல், ஜானகி ஒரு பக்கத்திலும் இலக்குமணன் ஒரு பக்கத்திலு மிருக்க, இராமர் நடுவில் அமர்ந்துகொண்டு சுக்கிரீவன் முதலிய வானரர்களை நோக்கி, 'நீங்களெல்லோரும் மனிதவுருவங் கொண்டிருங்கள்' என்று கட்டளை யிட்டார். அவ்வாறே அவர்களெல்லோரும் மானிட வுருவங் கொண்டிருந்தனர். உடனே அந்த விமானம் இலங்காபுரியை வலம் வந்து ஆகாயமார்க்கத்தில் வடக்கு நோக்கி விரைந்து சென்றது.

அப்போது இராமர் அந்த விமானத்திலிருந்தபடியே ஜானகிக்கு, சேதுவைக்காட்டி அதன் மகத்துவத்தை விசேஷமாக எடுத்துக் கூறி, அதன்மேல் மைநாகபர்வதத்தையும், கந்தமாதனத்தையும், வருணன் தம்மைச் சரணமடைந்த விடத்தையும், பொதிகை மலையையும், திருமாலிருஞ் சோலையையும், சேஷகிரியையும் காட்டிக் கொண்டே சென்ருர். அப்போது ஜானகி இராமரை நோக்கி, "சுவாமி! தேவரீர்

அனுமானோடு சிநேகங் கொண்டது எவ்விடம்?" என்று வினவினாள். அத்தருணத்தில் விமானம் கிஷ்கிந்தைக்குச் சமீபத்தில் சென்றபடியால் இராமர் அதனைச் சீதைக்குக் காட்டி, "ஜானகி! இது தான் அவ்விடம்; சுக்கிரீவன் அரசு செய்யுமிடமும் இதுவே" என்று கூறினார்.

அதைக் கேட்டதும் ஜானகி, இராமரிடத்தில் "சுவாமி! தேவரீர் மிகுந்த படைகளுடன் செல்லும்போது நான் மாத்திரம் பெண்கள் துணையின்றி வருவது பெருமையாகாது; ஆதலின் கிஷ்கிந்தையிலிருந்து சில பெண்களை வரவழைத்து என்னுடன் விமானத்தில் ஏற்றிக்கொள்ள வேண்டும்" என்று கூற அவர் விமானத்தை நிறுத்தி அப்படியே வானரப் பெண்களை வரவழைக்கும்படி சுக்கிரீவனுக்குக் கட்டளையிட்டார். சுக்கிரீவன் ஆஞ்சநேயரை நோக்கி, "நீர் சென்று நமது பெண்களை அலங்கரித்துக் கொள்ளச் செய்து அழைத்துவாரும்" என்று சொல்ல, அவர் அவ்வாறே கிஷ்கிந்தைக்குச் சென்று அவர்களை அழைத்து வந்தார். அவர்கள் வந்து விமானத்திலேறி ஸ்ரீ இராமரையும், சுக்கிரீவனையும், ஜானகியையும் வணங்கித் தாங்கள் கொண்டுவந்த மங்கலப் பொருள்களைச் சீதையின் பக்கத்தில் வைத்து உட்கார்ந்தார்கள். அவர்களையும் மானிட ஸ்திரீகளின் வடிவம் எடுத்துக் கொள்ளும்படி இராமர் அவர்களிடம்சொல்ல அவ்வாறே அவர்களும் மானிட ஸ்திரீகளைப்போல வடிவெடுத்தார்கள். அதன்மேல் சீதை மகிழ்ச்சியுற்றாள். விமானம் அவ்விடத்தைவிட்டு விரைந்து சென்றது.

அவ்வாறு செல்லும்போது இராமர் மேலும் சீதைக்கு, தாம் சீதையை விட்டுப் பிரிந்த விடம்,

தண்டகாரணியம், சித்திரகூடம் முதலிய விடங்களைக் காட்டிக்கொண்டே சென்ருர். அதன்மேல் விமானம் பாரத்துவாசருடைய ஆச்சிரமத்திற்கு நேரே வந்தது. அதையும் இராமர் சீதைக்குக் காட்டினுர். அப்போது பாரத்துவாசர், இராமர் வருவதையுணர்ந்து மிக்க ஆனந்தத்தோடு பல முனிவர்கள் புடைசூழ இராமரை எதிர்கொண் டழைக்கவந்தார். அவர் வருகையை யுணர்ந்த இராமர், விமானம் பூமியில் தாழும்படி நினைக்க அஃது அவ்வாறே இறங்கிற்று. உடனே இராமர் விமானத்தை விட்டிறங்கிப் பாரத்துவாசருடைய பாதங்களில் வீழ்ந்து நமஸ்கரித்தார். அவர் இராமரை வாரியெடுத்துத் தழுவிக்கொண்டு ஆனந்தக்கண்ணீர் சொரிந்தனர். அதன்மேல் ஜானகி, இலக்குமணன், சுக்கிரீவன், விபீஷணன் முதலிய எல்லோரும் அம் முனிவருக்கு வணக்கஞ் செய்தார்கள். அவர் யாவருக்கும் ஆசிகூறினுர்.

அதன்மேல் அம்முனிவர் ஸ்ரீ இராமரை ஆசிரமத்திற்குள் ஜானகியோடு அழைத்துச் சென்று அவருக்குச் செய்யத்தக்க மரியாதைகளை யெல்லாம் செய்து, இராகவர் திருமுகத்தை நோக்கி, "ஐயனே! இராக்ஷதர்களை யெல்லாம் நாசஞ் செய்து எங்களுடைய துன்பத்தைப் போக்கிய உம்முடைய பெருமையை நாங்கள் எவ்வாறு புகழ்வோம்! நீர் இன்றைக்கு எங்களுக்கு நல்விருந்தினராக இருந்து போகவேண்டும்; பரதன் உம்மைப் பிரிந்தநாள் முதல் நீர் எப்போது வருவீரோ என்ற தியானத்துடன் நந்திக்கிராமத்திலேயே சகலத்தையும் வெறுத்துத் தென்றிசையை நோக்கிய வண்ணமா யிருந்துகொண் டிருக்கின்ருன்; நீர் விரைந்து

சென்று அவனையும் பார்க்கவேண்டும்; உமக்கு வேண்டிய வரத்தையும் என்னிடம் பெற்றுக்கொள்ள வேண்டும்" என்று சொன்னார்.

அதைக்கேட்ட இராமர், "சுவாமி! என்னோடு வந்திருக்கும் வானரர்கள் செல்லுங் காடுகளிலெல்லாம் எந்தக்காலத்திலும் மழைக்காலத்தில் உண்டாவது போல் காய்கனி கிழங்குகளும், மதுவும், நீரும் நிறைந்திருக்கவும், அவர்கள் எப்போதும் சுக ஜீவிகளாய் வாழ்ந்திருக்கவும் வரந்தரவேண்டும்" என்றார். அந்த முனிவர் அப்படியே வரங்கொடுத்துவிட்டு இராமருக்கு விருந்து செய்யக்கருதி, ஆகவநீயம், தக்ஷிணாக்கினி, காருகபத்தியம் என்னும் முத்தீயால் அமைத்த யாகத்தில் வேதமந்திரங்களைச் சொல்லி அவிர்ப்பாகஞ் சொரிந்தார். உடனே தேவலோகத்திலுள்ள நுகர் பொருள்களெல்லாம் அங்கே வந்திறங்கி விட்டன. எல்லோரும் முனிவர் வேண்டுகோளால் அவற்றை அனுபவித்து அமுதுசெய்ய ஆரம்பித்தார்கள்.

அப்போது இராமர் ஆஞ்சநேயரிடத்தில் தமது முத்திரை மோதிரத்தைக் கொடுத்து, "அனுமானே! இன்றைக்கே நான் அயோத்திபோய்ச் சேராததால் பரதன் தீமூட்டி அதில் வீழ ஆரம்பித் திருப்பான். ஆதலின் நீ விரைந்து சென்று அவனிடம் நான் வருகிறேனென்பதைத் தெரிவித்து அதற்கறிகுறியாக இந்த மோதிரத்தையுங் கொடுத்து அவன் வளர்த்திருக்கும் நெருப்பையும் அவித்துவிட்டுத் திரும்பி வரவேண்டும்" என்று சொன்னார். உடனே அனுமார் ஆகாய மார்க்கமாகப் பரதனிருக்கு மிடத்தை நோக்கிச் சென்று

குகனுக்கும் இராமர் வருகையைத் தெரிவித்துவிட்டுக் கங்கையைக் கடந்து போனூர்.

அவர் அவ்வாறு போய்க்கொண் டிருக்க, நந்திக் கிராமத்திலிருந்த பரதன், இராமர் திரும்பி வருதற்குக் குறித்த நாள் அன்றேயாதலின், அவர் அன்றைக்குத் தன்னிடம் வந்துசேராததால் மனங்கலங்கி, "அந்தோ! இராகவர் இன்றைக்கு வரவில்லையே; எனக்குப் பொய் கூறிவிட்டுப் போனூரோ? அல்லது அவர் போனவிடத்தில் ஏதேனும் சண்டை யேற்பட்டதால் வரத்தாமதமாய் விட்டதோ? அல்லது பரதனே இராஜ்ஜியத்தை ஆளட்டுமென்று அவர் தவத்தை விரும்பிக் காட்டில் தங்கி விட்டாரோ? அவர் எப்படியிருந்தாலும் சரி; என்னுடைய மரணத்தால் என்னைச்சார்ந்த குடும்பத்தாரெல்லோரும் இறந்தாலும் சரி; இனி நான் அரை நிமிஷமேனும் உயிர் வைத்திருக்க மாட்டேன்; அவருக்கு முன்னே நான்கூறியபடி நெருப்பிடை வீழ்ந்து இறந்து போகின்றேன்" என்று சத்துருக்கனை வரவழைத்துத் தழுவிக்கொண்டு கண்ணீர்விட்டழுது அவனை நோக்கி, "தம்பி! நீ எனக்கொரு வரந்தரவேண்டும். இராகவர் சொல்லிப்போன தவணைப்படி இன்று வராததால் நான் அக்கினியில் வீழ்ந்திறக்கப் போகின்றேன்; நீ அயோத்தியிலுள்ளவர்கள் வருந்தாதபடி அரசுரிமையைத் தாங்கிக் கொள்ளவேண்டும்; இதைத் தடுக்கக் கூடாது" என்று கூறினூன்.

அதைக் கேட்டவுடன் சத்துருக்கன் விஷத்தை யுண்டவன் போல் தலைசுழன்று இருசெவிகளையும் மூடிக்கொண்டு நிலத்தில் வீழ்ந்து புரண்டழுது கொண்டு, "அண்ணு! என்ன வார்த்தை கூறினீர்;

இலக்குமணர் தமையனுரைப் பிரியமுடியாமல் அவருடன் காட்டிற்குச் செல்ல, நீர் இராமர் வராததற்கு இறக்க, நான் மாத்திரம் இராஜ்ஜியத்தைத் தாங்கியிருக்கவா! உங்களில் சகோதரவாஞ்சையற்ற மகா பாவி நான்தானே!" என்று புலம்பினுன்.

பரதன் அவனை வாரியெடுத்து மார்புறத்தழுவி ஆறுத்துயரத்துடன் அவனிடத்தில், "தம்பி! அப்படியானல் நாமிருவரு மிறப்போம்; அதற்குமேலாவது அரச னில்லாமல் நாடு தத்தளிப்பதை யுணர்ந்து இராமர் வந்து அரசாட்சியைத் தாங்கிக் கொள்வார்; சீக்கிரம் நெருப்பை மூட்டு" என்று சொன்னுன். அவன், அவ்வாறே அக்கினியை வளர்த்தான். இவர்கள் செய்கையைக் கேள்விப்பட்ட கௌசலை வயிற்றில் மோதியடித்து, அந்நகரத்திலுள்ள ஸ்திரீகளெல்லாம் கதறிக் கொண்டு தன் பின்னே வர ஓடிவந்து பிள்ளைகளுக்கும் நெருப்புக்கும் மத்தியில் நின்று பரதனை நோக்கி, "அப்பா பரதா! சக்கரவர்த்தியார் இறக்க, இராமனும் காட்டிற்குப் போக எல்லோரும் ஆறுத்துயரத்தி லாழந்திருக்கும் போது நீங்களும் இறந்தால் நாங்கள் எப்படி உயிர் வைத்திருப்போம்; நானும் சுமித்திரையும் உங்களுடன் இறப்போம்; இந்தக் கோசலநாடு முழுமையும் அக்கினியில் வீழும்; தருமமும் அழியும்; அந்த இராமன் இன்றைக்கு வராவிட்டாலும் நாளைக்காவது வந்துவிடுவான்; அவன் சொன்ன சொல் தவற மாட்டான்; அவன் நாளைக்கும் வராவிட்டால் நாமெல்லோருமே மரணமடையலாம்; நீங்கள் இன்றைக்குமாத்திரம் பொறுத்துக் கொள்ளுங்கள்" என்று கண்ணீர்விட்டழுது கொண்டு சொன்னுள்.

அப்போது பரதன் கௌசலையை நோக்கி "தாயே! நான் உம்முடைய சொல்லைத் தடுத்து விட்டேனென்று நீர் என்மீது வருத்தப்படலாகாது; நான் செய்து கொண்ட வாக்குறுதியில் தவற மாட்டேன்; அங்ஙனம் தவறுவேனேயானால் சூரியகுலத்துக்கு இழிவுண்டாகும்; ஆதலால், நீர் எங்களைத் தடுக்க வேண்டாம்" என்று அங்குக் கூடியிருந்தவர்களெல்லாம் அழுது புலம்ப அக்கினியில் வீழ்வதற்கு இராமரைத் தியானித்துக்கொண்டு அதன் சமீபத்தில் போய் நின்றான். சத்துருக்கனும் அவனுக்குப் பின்னே போய் நின்றான்.

அத்தருணத்தில் ஆகாயமார்க்கமாக வேகமாய்ச் சென்ற அனுமார் அங்குச் சேர்ந்து பரதனுடைய நிலைமையைப் பார்த்து மனந்திடுக்கிட்டுத் திடீரென்று கீழே குதித்து, 'இதோ இராமர் வந்தார்! வந்தார்!!' என்று சொல்லிக்கொண்டு பரதனுக்கு முன்னே எரிந்து கொண்டிருந்த நெருப்பை அவித்துவிட்டுப் பரதனுடைய பாதங்களில் வீழ்ந்து பணிந்து எழுந்து நின்று அவனை நோக்கி, "பரதரே! இராகவர் சொல்லிப்போன தவணை நாள் இன்னும் கழியவில்லை; இன்றிரவு போய் நாளைப்பொழுது விடியும்வரை இருக்கின்றது; அதற்குள் அவர் உம்மிடம் வந்து விடுவார்; இன்று பாரத்துவாசர், எல்லோரும் தம்மிடம் விருந்துண்டுகளிக்க அவரை வேண்டிக் கொண்டபடியால், அவர் சிறிது நேரம் அவருடைய ஆச்சிரமத்தில் தாமதித்து விட்டார்; அதனால் ஒரு சமயம் நீர் அக்கினிப் பிரவேசம் செய்தாலும் செய்து விடுவீரென்று நினைத்து தம்முடைய வருகையை உம்மிடம் தெரிவித்து வரும்

படி என்னை அனுப்பினர்; அவருடைய அடையாள மும் உமக்குக் காட்டும்படி என்னிடம் கொடுத்திருக் கின்றார்; இதோ பாரும்" என்று இராமருடைய மோதிரத்தைக் காட்டினர்.

அதைப் பார்த்த மாத்திரத்தில் பரதனும் மற்ற யாவரும் சந்தோஷ ஆரவாரஞ் செய்தார்கள். உடனே பரதன் அந்த மோதிரத்தை வாங்கி முகத்திற் சேர்த் துக்கொண்டு அங்கு நின்றவர்களோடு சேர்ந்து இரா மருடைய கலியாண குணங்களைப் புகழ்ந்துபாடி ஆனந் தக் கூத்தாடி ஆஞ்சனேயரைப் பார்த்து, "நீர் பிரம சாரியாயிருப்பது வாஸ்தவமன்று; திரிமூர்த்திகளில் ஒருவராயிருப்பீரென்றே நான் நினைக்கின்றேன்; உண் மையாக நீர் இன்னாரென்பதை எங்களுக்குத் தெரி விக்கவேண்டும்" என்று கேட்க, அனுமார் தம்முடைய வரலாற்றைக்கூறி விசுவரூபங்கொண்டு இயற்கையான வடிவத்தைக்காட்டி நின்றார். அந்த உருவத்தைப் பார்த்தவுடன் அங்கு நின்றவர்களெல்லோரும் அஞ்சி னார்கள். அப்போது பரதன், அந்த வடிவத்தைக் குறுகச்செய்ய வேண்டுமென்று அனுமாரிடம் வேண் டிக் கொண்டான். ஆஞ்சனேயர் அப்படியே குறுகி நின்றார்.

அதன்மேல் பரதன் உயர்ந்த ஆடையாபரணங் களையும் திரவியங்களையும் அனுமாருக்குப் பிரீதியுடன் கொடுத்துவிட்டுச் சத்துருக்கனை நோக்கி, "தம்பி! ஸ்ரீ இராகவரை எதிர் கொள்ளுதற்கு அயோத்தியிலுள்ள வர்கள் அலங்காரத்துடன் புறப்படும்படியும், நகரத்தை அலங்கரிக்கும்படியும், நகரத்திலிருந்து பாரத்துவாசர் ஆசிரமம் வரைக்கும் அழகிய பந்தர் போடும்படிக்கும்

எங்கும் பறைசாற்றித் தெரிவிக்குமாறு வள்ளுவர்களுக்குக் கட்டளையிடக் கடவாய்" என்று தெரிவிக்க, அவன் அவ்வாறே கட்டளையிட்டான்.

வள்ளுவர்களால் விஷயங்கள் விளங்கும்படி எங்கும் முரசறையப்பட்டது; நகர மாந்தர்களால் நகரமும் அலங்கரிக்கப்பட்டது; பந்தரும் போடப்பட்டது; அயோத்தியிலுள்ள நான்கு வருணத்தார்களும் களிப்புடன் அலங்கரித்துக் கொண்டு புறப்பட்டார்கள்; அளவிடற்கரிய சேனைகளும் புறப்பட்டன; இராஜகுடும்பத்தார்களும், சேனாவீரர்களும், அவர்களுடைய பத்தினிமார்களும் பிரயாணமானார்கள். கௌசலை, சுமித்திரை, கைகேயி மூவரும் இரத்தின தண்டிகைகளில் ஏறிப் புறப்பட்டார்கள். எல்லோரும் நந்திக்கிராமம்வந்து கூடியபின், பரதன், சத்துருக்கனும் மற்ற பந்து ஜனங்களும், முனி சிரேஷ்டர்களும், இரத கஜதுரக பதாதிகளும் புடைசூழ, இராகவருடைய திருப்பாதுகைகளை முடியில் தாங்கி, வெண்பட்டுக் குடை நிழற்றவும், இருபுறங்களிலும் சாமரை வீசவும், ஆஞ்சனேயருடைய கையைப் பற்றிக்கொண்டு இராமரை எதிர்கொள்ளப் புறப்பட்டான். அப்போது சூரியாஸ்தமனமாயிற்று.

அந்த மாலைப்போதில் புறப்பட்ட பரதன், நடந்துகொண்டே அனுமாரிடத்தில், இராமர் இராவண சம்மாரம் நடத்திவந்த விவரங்களையெல்லாம் கூறும்படி வேண்ட, அவரும், இராமர் அயோத்தியைவிட்டு நீங்கியது முதல் பாரத்துவாசருடைய ஆசிரமத்திற்குத் திரும்பி வந்தது வரை நடந்தவைகளையெல்லாம் கூறிக்கொண்டே சென்றார். பரதன், இராமர் அடைந்த

வருத்தங்களை யெல்லாம் கேட்டுக் கண்ணீர்விட்டழுது கொண்டே இரவையெல்லாம் கழித்து விடியுந் தருணத்தில் கங்கைக்கரை போய்ச்சேர்ந்தான். அப்போது சூரியன் உதயமாயினுன்.

பரதன், காலைக் கடன்களை முடித்துக்கொண்டு இராமருடைய பாதுகைக்கு அருச்சனை செய்து விட்டுச் சமீபத்தில் தோன்றிய பாரத்துவாசருடைய ஆசிரமத்தில் யாதொரு அரவமுமில்லாதிருக்கக் கண்டு ஆஞ்சனேயரை நோக்கி, "வானர சிரேஷ்டரே! இராமர் வானர சேனைகளுடன் பாரத்துவாசருடைய ஆசிரமத்தில் இருக்கின்ருர் என்று நீர் சொன்னீரே; அப்படி யிருந்தால் அங்கே யாதொரு அரவமுமில்லாமலிருக்குமா? நீர் பொய்கூறி என்னை அழைத்துவந்திருக்கின்றீர்" என்று துக்கத்துடனும் கோபத்துடனும் சொன்னுன்.

அப்போது அனுமார் பரதனை நோக்கி, "சக்கரவர்த்தி குமாரரே! நீர் என் சொல்லில் சந்தேகம் கொள்ளவேண்டாம்; தேவர்கள் கொடுத்த வரத்தால் பெருகிய மதுவையும் கனிகளையும் உண்டதால் வானரர்கள் மயங்கி உறங்குகின்ருர்கள்; இன்னும் சிறிது நேரத்திற்குள் எல்லோரும் எழுந்திருப்பார்கள்; இராகவரும் அவர்களுடன் புஷ்பக விமானத்திலேறிப் புறப்படப் போகின்ருர்; நாம் அவர்களைப் பார்க்கவே போகின்ரும்" என்று சமாதானஞ் சொல்லிக்கொண்டிருந்தார்.

இவர்கள் இங்கே இப்படியிருக்க, அனுமாரை இராமர் பரதனிடம் அனுப்பியபின் பாரத்துவாசருடைய ஆசிரமத்தில் என்ன நடந்ததெனில், இராமர்

முன்னே சொல்லியபடி அனுமானை அனுப்பிவிட்டுப் பாரத்துவாசரால் இடப்பட்ட விருந்துணவைத் தம் முடன் சேர்ந்தவர்களோடு கூடி உண்டு களித்திருந் தார். அப்போது அனுமாரால் இராமருடைய வருகை யைக் கேள்விப்பட்ட குகன் வேடுவச் சேனைகளுடன் புறப்பட்டு வந்து இராமருடைய பாதங்களில் வீழ்ந்து வணங்கினான். இராமர் அவனை வாரி யெடுத்துத் தழுவிக்கொண்டு, "அப்பா குகனே! நீயும் உன் னுடைய மனைவி மக்களும், சுற்றத்தார்களும் க்ஷேமமோ?" என்று அன்புடன் வினவினார். அவன், "சுவாமி! உம்முடைய கிருபை யிருக்கும்போது எனக் கென்ன குறைவு! இலக்குமணரைப் போல் நானும் உம்முடன் வந்து உமக்குத் தொண்டு செய்யாமற் போயினேனே, அதுதான் குறை" என்று கூறித் துக்கித்தான். இராமர் அவனை நோக்கி, "தம்பி! பரத னிருந்த நிலையிலேயே நீயுமிருந்திருக்கின்றாய்; எனி னும் பாதகமில்லை. உங்கள் துக்கம் நிவிர்த்தியாக வேண் டிய காலம் வந்துவிட்டது; இனி நீ கவலைப்படவேண் டாம்; உட்கார்" என்று சொன்னார். அவன், இலக்கு மணனையும், ஜானகியையும் நமஸ்கரித்துவிட்டு உட் கார்ந்தான்.

அதன்மேல் இராமர் தம் தோழர்களுக்குக் குக னுடைய வரலாற்றைக் கூறினார். சுக்கிரீவன் முதலிய வர்கள் குகனோடு சிநேகமானார்கள். அப்போது சூரியன் அஸ்தமித்ததால் இராமர் மாலைக் கடன்களை முடித்துக்கொண்டு இரவானதும் சயனித்தார். மற்ற வர்களும் சயனித்துக்கொண்டார்கள். இலக்குமண னும் குகனும் விடியும்வரை இராமருக்குக் காவலாக நின்றார்கள். பின் சூரியோதயமாயிற்று; இராமர்

எழுந்து மற்றவர்களுடன் காலைக்கடன்களை முடித்துக் கொண்டு பாரத்துவாசரிடம் விடைபெற்று விமானத்தி லேறிப் புறப்பட்டார். விமானம் ஆகாயத்தில் செல்லவே அயோத்தி தெரிந்தது. இராமர் தோழர் களுக்கு அதனைக் காட்டினர். எல்லோரும் அயோத் தியைப் பார்த்து நமஸ்கரித்தார்கள்.

அதன்மேல் அந்த விமானம் முன்னே கூறியபடி அனுமாரும் பரதனும் பேசிக்கொண்டிருந்த விடத்திற் குச் சமீபத்திற் சென்றது. உடனே ஆஞ்சனேயர் பரதனை நோக்கி, "இதோ இராமபிரானும் மற்றவர் களும் விமானத்தில் வருகின்றார்கள் பாரும்" என்றார். விமானத்தைக் கண்டவுடன் அங்கு நின்றவர்களெல் லோரும் சந்தோஷத்தால் ஆரவாரம் செய்தார்கள். பரதன் இராமரைக் கண்டவுடனே தன்னை மறந்து கரங்களைச் சிரசில் கூப்பிக்கொண்டு நின்றான். அப் போது அனுமார் மேலெழுந்து விமானத்திற் பாய்ந்து இராமருக்கெதிரில் போய் நின்று வணங்கி, "சுவாமி! நான் போகாவிடில் பரதர் முதலிய எல்லோரும் மடிந்தே யிருப்பார்கள்; பரதர் நெருப்பில்வீழ ஆயத்த மாய் நின்றார்; அவர் பின்னே மற்றவர்களும் இறக்கத் துணிந்து நின்றார்கள்; நான் போய் அவர்களுக்கு உம் முடைய வரவைக்கூறி அவர்களுயிரைக் காப்பாற்றி னேன்; இதோ பரதர் முதலிய எல்லோரும் சமீபத்தில் வந்திருக்கின்றார்கள்" என்று சொன்னார். இராமர், "எனக்குத் துன்பங்கள் ஒன்றின்பின் ஒன்றாக வந்து கொண்டே யிருக்கின்றன; மாருதி! நீ யில்லாவிடில் நான் அத்துன்பங்களை அனுபவித்தே தீரவேண்டும்; நான் செய்த தவப்பயனாலேயே நீ எனக்குக் கிடைத் தாய்" என்று சொன்னார்.

அவர் அவ்வாறு சொல்லிக்கொண் டிருக்கும் போதே பரதன் இளைத்த தேகத்துடன் இராமருடைய பாதுகைகளைச் சிரசில் தாங்கிக்கொண்டு விமானத்துக்கு நேரே வந்தான். அனுமார் 'இதோ பரதர் வந்துவிட்டார்' என்று இராமருக்கு அவனைக் காட்டினார். உடனே இராமர் விமானம் கீழே யிறங்கவேண்டுமென்று நினைக்க, அஃது இறங்கிற்று. அயோத்தி நகரத்து ஜனங்களெல்லோரும் பரிமளப் பொடிகள், சந்தனம், முத்து, புஷ்பம், வாசனைத் தைலம் முதலிய வற்றை இராமர்மீது வாரி யிறைத்தும், ஒருவர்மீதொருவர் இறைத்துக்கொண்டும் சந்தோஷ ஆரவாரஞ் செய்து நெருங்கி இராமரைவணங்கினார்கள். கௌசலை சுமித்திரை, கைகேயி, பரதன், சத்துருக்கன், வசிஷ்டர் ஆகியவர்கள் விரைந்துவந்து விமானத்தில் ஏறினார்கள். ஸ்ரீஇராமலக்குமணர்கள் முதலில் வசிஷ்டரைவணங்கி, அதன்மேல் தாய்மாரை வணங்கினார்கள். அவர்கள் அவ் விருவருக்கும் ஆசி கூறி ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார்கள். ஜானகியும் அவர்களுக்கு முறைப்படி நமஸ்காரஞ் செய்தாள். அவர்கள் அவளையும் வாழ்த்தினார்கள்.

பின்னர், பரதன் இராமருடைய திருப்பாதுகைகளை அவர் பாதத்தில் வைத்து வணங்கிக் கண்ணீரொழுக நின்றான். அப்போது இராமர், அவனுடைய நிலைமைக்கு மனங்கரைந்து அவனுக்கு இன்னவிதமாகத்தான் ஆசிகூறுவதென்பதை யுணராமல், கதறியழுது அவனைத்தழுவி அவனுடம்பெல்லாம் நனையும்படி கண்ணீர் விட்டார். அதன்மேல் இலக்குமணன் பரதனுடைய பாதங்களில் வீழ்ந்து பணிந்தான். பரதன் அவனைத் தழுவிக்கொண்டான். அதன்மேல் சத்

துருக்கன் இராமரையும் இலக்குமணனையும் சேவித்துக் கொண்டான். அவர்கள் அவனை மார்புறத் தழுவிக் கொண்டார்கள். பின்னர் சத்துருக்கனும் பரதனும் ஜானகிக்கு நமஸ்காரம் புரிய அவளும் அவர்களை ஆசீர்வதித்தாள்.

அதன்மேல், பரதனுக்கும் சத்துருக்கனுக்கும் இராமர், தம்முடைய தோழர்களாகிய சுக்கிரீவன் முதலியவர்களுடைய விருத்தாந்தங்களைக் கூறினார். அவர்களெல்லோரும் பரதனையும் சத்துருக்கனையும் வணங்கினார்கள். அவ்விருவரும் முறைப்படி அவர்களெல்லோருக்கும் மரியாதை செய்தார்கள். பிறகு சுமந்திரனென்னும் மந்திரி, மற்ற அமைச்சர்களுடனும், சேனாதிபதிகளோடும், பந்துக்களோடும், இராஜ குமாரர்களோடும் இராமருக் கெதிரில் நின்று வணங்க, அவர், அவர்களெல்லோருக்கும் கிரமப்படி முகமன் கூறி அவர்களுடைய க்ஷேமங்களை ஒவ்வொருவரிடத்தும் விசாரித்தார். இலக்குமணனும் அவர்களைக் கொண்டாடினான். அதன்மேல் விமானத்தில் ஏறிக்கொள்ளும்படி இராமர் படைகளுக்குக் கட்டளையிட எல்லோரும் அதிலேறி இராமரைப் பணிந்து சந்தோஷ முழக்கம் செய்தார்கள். ஆகாயத்தில் வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்ற தேவர்கள் இராமருக்குப் பல்லாண்டு கூறினார்கள். வேதியர்கள் வேதபாராயணம் செய்தார்கள்; சகல வாத்தியங்களும் முழங்கின. எல்லா ஆனந்த கோஷ்டங்களும் நிறைய இராமருடைய கட்டளையால், புஷ்பக விமானம் அவ்விடத்தி லிருந்து மேலெழும்பித் தேவர்கள் தூவிய புஷ்பமாரியோடு அயோத்தியாபுரியைச் சேர்ந்தது.

அத்தியாயம்---17.

ஸ்ரீ இராமர் பட்டாபிஷேகம்.

இராமர் அயோத்தியைச் சேர்ந்தபின், எல்லாரோடும் விமானத்தை விட்டிறங்கி, அயோத்திக்குத் தென்மேற்குத் திசையிலுள்ள நந்திக் கிராமத்தையடைந்து, சடையைக் களைந்து க்ஷௌரம் செய்து கொண்டு தம்பிமாரோடு சரயுநதியில் மூழ்கி உபாசனமூர்த்தியைத் துதித்துத் திருமண்காப்பிட்டு ஆடையாபரணங்களால் அலங்கரித்துக் கொண்டு நான்கு வெள்ளைப் புரவிகள் பூட்டிய இரதத்தில் ஏறிச் சென்றார். இலக்குமணன் இராமருக்குப் பின்புறத்தில் நின்று வெண்கொற்றக் குடைபிடித்தான்; சத்துருக்கன் சாமரை வீசினன்; பரதன் தேர்ச் சாரத்தியஞ் செய்தான்; தேருக்கு இரண்டு பக்கங்களிலும் விபீஷணனும், சுக்கிரீவனும் யானைகளின்பேரி லேறிச் சென்றார்கள். அங்கதன் கொடிப்படையின் முன்னே போனன். ஆஞ்சனேயர் தேருக்குப் பின்வந்தார். யானைகளின் மேல் வானரப் படைவீரர்கள் மானிடவுருக்கொண்டு வந்தனர். வானர ஸ்திரீக ளெல்லோரும் தேவஸ்திரீகளைப்போல உருமாறி அலங்காரத்துடன் பெட்டை யானைகளிலும், பெண்குதிரைகளிலும் ஏறிச்செல்ல அவர்களுக்கு மத்தியில் ஜானகி விமானத்தி லேறிச் சென்றாள். கௌசலை முதலியவர்களும் சிவிகைகளி லேறிச் சென்றார்கள்.

இவ்வாறு சென்ற இராமர் எல்லாரோடும் அயோத்தியை அடைந்து இரதத்தை விட்டிறங்கித் தாய்மார் மூவரையும் வசிஷ்டரையும் வணங்கி அரண்மனையிற் பிரவேசித்து, விபீஷணன், சுக்கிரீவன் முத

லியவர்களுக்கு அரண்மனைச் சிறப்புக்களை யெல்லாம் காட்டும்படி பரதனுக்குக் கட்டளையிட்டார். பரதன் அப்படியே அவர்களுக்கு எல்லாவற்றையுங் காட்ட அவர்கள் கண்டு மகிழ்ந்தார்கள். பின்னர் எல்லோரும் ஓர் இரத்தின மண்டபத்தில் உட்கார்ந்தார்கள்.

அப்போது சுக்கிரீவன் பரதனைப் பார்த்து, "இன்னும் இராமபிரானுக்குப் பட்டாபிஷேகம் செய்ய நாள் குறிப்பிடாம லிருப்பதற்குக் காரணமென்ன?" என்று வினவினன். அதற்குப் பரதன், "சகல புண்ணிய தீர்த்தங்களும் இங்கே வந்து சேரவேண்டும்; அவை வந்த பின்புதான் மகுடாபிஷேக நாள் குறிப்பிடவேண்டும்" என்றான். உடனே சுக்கிரீவன், "நம்முடைய மாருதி யிருக்கும்போது அந்தத் தீர்த்தங்கள் இங்கே வந்து சேர்வது பிரயாசமாகுமோ?" என்று ஆஞ்சனேயரை நோக்கினன். ஆஞ்சனேயர் அக் குறிப்பையுணர்ந்துகொண்டு அப்பொழுதே அத் தீர்த்தங்களைக் கொண்டுவரப் போயினர்.

அதன்மேல் பரதன் வசிஷ்டரையும், கணிதசாஸ்திரிகளையும் அங்கே வரவழைத்து ஆசனங்களில் எழுந்தருளச் செய்து வசிஷ்டரை நோக்கி, "சுவாமி! இராகவருக்கு முடிசூட்டும் நாள் என்றைக்கு?" என்று கேட்டான். அவரும் சோதிடரும் ஆலோசித்து மறுதினமே அதற்குரியதென்று ஏற்படுத்தினர்கள். உடனே பரதன், மகுடாபிஷேக தினத்தைச் சகலருக்கும் அறிவிக்கும்படி காரியக்காரர்களுக்குக் கட்டளையிட அவர்கள் எல்லா அரசர்களுக்கும், முனிவர்களுக்கும், மற்றையர்க்கும் அச்செய்தி குறித்த திருமுகங்களெழுதித் தூதுவர்களிடம் கொடுத்தனுப்பினர்கள்.

சகல தேசத்தரசர்களும் அயோத்தியில் வந்து நிறைந்து கொண்டிருந்தார்கள்.

பின்னர் வசிஷ்டரும், பரதன் முதலியவர்களும் இராமரிடம் சென்று, "சூரியகுலத் தோன்றலே! உமக்குத் திருமுடி சூட்ட நாளைக்கு முகூர்த்தம் குறிப் பிடப்பட்டிருக்கிறது; ஆதலின், அதற்கு முன்னாளாகிய இன்றைக்குச் செய்யவேண்டிய காரியங்களைச் செய் தற்கு நீர் எழுந்தருளவேண்டும்" என்று சொல்ல அவர் அவ்வாறே சென்று அக்கிரியைகளை நிறைவேற் றினார்.

அதன்மேல் பிரமதேவர் அங்கே வந்து மகுடாபி ஷேக மண்டபத்தைச் சிறப்புடன் அமைக்கும்படி மயனுக்குச் சொல்ல, அவன், அவ்வாறே அதனை அழ குடன் கட்டி முடித்தான். ஆஞ்சநேயரும், நான்கு திசைகளிலுமுள்ள சமுத்திர தீர்த்தங்களையும், சப்த புண்ணிய நதிகளின் தீர்த்தங்களையும் கொண்டுவந்து சேர்த்தார். மறுநாள் அரசர்கள் பல யானைகளின்மேல் இரத்தினக் குடங்களில் சரயுநதி தீர்த்தத்தைக் கொண்டு வந்தார்கள். பளிங்குக் கற்களால் அமைத்த ஒரு சிங்கார மாளிகையில், மாணிக்கப் பலகை சேர்த்து வச்சிரக் கால்கள் அமைத்துப் பொன்னால் விளிம்பு செய்யப்பட்ட பீடத்தின்மேல் இராமபிரான் சீதா பிராட்டியோடு எழுந்தருளினார். சுமங்கல ஸ்திரீகள் மங்கள கீதங்கள் பாடவும், அந்தணர் வேதகோஷம் செய்யவும், பல வாத்தியங்கள் முழங்கவும், தேவர்கள் புஷ்பமாரி பெய்யவும், வசிஷ்டர் முதலிய முனிவர் களும், பிராமணர்களும், நல்லொழுக்கமுள்ள இராஜ புருஷர்களும், மந்திரிகளும் முறையே தீர்த்தங்களை யெடுத்து இராமருக்கு அபிஷேகம் செய்தார்கள். பின்

னர், சுக்கிரீவன், சாம்பவர், அனுமார், விபீஷணன், குகன் முதலியவர்கள் கிரமமாக அபிஷேகம் செய்தார்கள். அந்த அபிஷேகங்களை யெல்லாம் வசிஷ்டர் வைதிக மார்க்கத்தின்படி மந்திரங்களைச் சொல்லி நடத்திச் சுமந்தரனென்னும் முதல் மந்திரியைச் சமீபத்தில் வைத்துக்கொண்டு மற்ற சடங்குகளையும் சிறப்பாகச் செய்தனர்.

இவை யெல்லாம் நடந்த பின்பு, அனுமார் சிம்மாதனத்தைச் சுமக்கவும், அங்கதன் உடைவாளைப் பற்றி நிற்கவும், பரதன் வெண்கொற்றக் குடைபிடிக்கவும், இலக்குமணனும் சத்துருக்கனும் இருபுறங்களினும் நின்று வெண்சாமரை வீசவும், சீதாபிராட்டியார் பக்கத்தில் எழுந்தருளவும், அசுரகுல குருவாகிய சுக்கிரனும், தேவகுல குருவாகிய பிரகஸ்பதியும் குறித்த நல்ல முகூர்த்தத்தில் இராமர் இரத்தினமயமான சிம்மாசனத்தில் எழுந்தருளி யிருக்க, திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப முதலியாருடைய மரபினராகிய வேளாளர்கள் மாணிக்க கிரீடத்தை எடுத்துத்தர அதனை வசிஷ்டர் வாங்கி இராமபிரானுக்குச் சூட்டினர். சகல வாத்தியங்களும் முழங்கின; தேவர்களும் மண்ணுலகவாசிகளும் மலர்களை வாரி இராமர் மீது இறைத்தனர். பூமிதேவியும், இலக்குமியும், சரஸ்வதியும் மகிழ்ச்சி யுற்றார்கள். வசிஷ்டர் முதலிய முனிவர்களும் பிராமணர்களும், இராமருக்குத் திருஷ்டிதோஷம் படாதிருக்கும் பொருட்டு மங்களாசாசனம் செய்து வேதாங்கங்களாலும் வேதமொழிகளாலும் அவரைத் துதி செய்தார்கள். சகல ஜனங்களும் இராமருக்கு மங்களமுண்டாகுக என்று சந்தோஷ ஆரவாரம் செய்தார்கள்.

பின்னர், வசிஷ்ட முனிவர் வேதமந்திரங்களைச் சொல்ல ஸ்ரீ இராகவர் சாஸ்திரவிதிப்படி தம்பிமார்கள் மூவருக்கும் கிரீடங்களைத் தரித்து, இராஜ காரியங்களை நடத்தும் பொறுப்பைப் பரதனுக் களித்தார். இவ்வாறு மகுடாபிஷேகம் நிறைவேறின பிறகு இராமர் வித்வான்களுக்கும், வேதியர்க்கும், யாசகர்க்கும் நல்லுணவளித்தும், விருந்துசெய்து வேண்டுவன நல்கியும் களித்திருந்தார்.

அப்படி யிருக்கும்போது ஸ்ரீ இராகவர் ஒரு நாள் சகல சிறப்புக்களுடனும் கொலுக் கூடத்திற்குச் சென்று சிங்காசனத்தி லமர்ந்தார். அங்கே மந்திரிகளும், பெரியோர்களும் வந்து கூடினார்கள். வானரசேனைகள் சூழ்ந்து வர சுக்கிரீவனும், இராக்ஷஸ குலவீரரோடு விபீஷணனும், வேடுவச்சேனைகள்சூழக் குகனும்வந்து இராமருக்குத் தண்டம் ஸமர்ப்பித்து அவருக்கு முன்னே கைகளைக் கூப்பிக்கொண்டு நின்றார்கள். இராமர் அவர்களைப் பார்த்து உட்காரும்படி சொன்னார். எல்லோரும் உட்கார்ந்தார்கள். மற்றவர்களும் ஆசனங்களில் அமர்ந்தார்கள்.

அப்போது இராமர், அங்கே வந்திருந்த வேதியர்களுக்கும், அரசர்களுக்கும் ஆடையாபரணங்களையும், நிதிகளையும், நிலங்களையும் கொடுத்து அவர்களைத் தங்கள் தங்கள் இருப்பிடங்கட்குச் செல்லுமாறு அனுப்பிவிட்டு, சம்பராசுரனை ஜெயித்த தசரதர்க்கு இந்திரனால் கொடுக்கப்பட்டு அரண்மனையிலிருந்த கட்கத்தையும், யானைகளையும், தேர்களையும், குதிரைகளையும், சுவர்ண வஸ்திரங்களையும் சுக்கிரீவனுக்குக் கொடுத்தும், தம்முடைய பரம்பரையிலிருந்த இட்சுவாகு சக்கரவர்த்திக்குப் பூர்வத்தில் பிரமதேவனால் கொடுக்கப்பட்டுத் தம்

வழியில்வந்து ஆபரணச் சாலையிலிருந்த வாகுவலயத்தையும், விலையுயர்ந்த இரத்தினஹாரத்தையும், பீதாம்பரத்தையும், குதிரைகளையும், யானைகளையும் அங்கதனுக்குக் கொடுத்தும், அவனை நோக்கி, "அப்பா! நீ எப்போதும் சுக்கிரீவனை விட்டு நீங்காதிரு" என்று சொல்லியும், அனுமாரை நோக்கி, "மாருதி! நீ செய்த சகாயத்திற்கு நான் என்ன கைம்மாறியற்றப் போகின்றேன்; ஆயினும் நான் அன்புடன் கொடுப்பதை நீ ஏற்றுக்கொள்" என்று தம்முடைய மார்பிலணிந்திருந்த வஜ்ஜிர ஹாரத்தையும், மெல்லிய பீதாம்பரத்தையும், யானை குதிரைகளையும் அவருக்குக் கொடுத்தும், ஜானகியும் ஏதாவது கொடுக்கவேண்டுமென்ற குறிப்பு விளங்கும்படி கடைக்கண்ணால் அவளைப் பார்த்தார்.

அக்குறிப்பையுணர்ந்த ஜானகி, வாணி தனக்குக் கொடுத்த முத்தாரத்தை யெடுத்து அனுமாருக்குக் கொடுத்தாள். அதன்மேல் இராமர், இந்திரன் தரித்துக்கொள்ளும் முத்தாரத்தையும், பீதாம்பரத்தையும் சாம்பவருக்குக் கொடுத்து, அப்படியே மற்ற வானரப் படைத் தலைவர்களுக்கும், மற்ற வானரர்களுக்கும் வேண்டிய ஆடையாபரணங்களையும் மற்ற பொருள்களையும் நல்கி, அதன்மேல் விபீஷணனைப் பலவாறு புகழ்ந்து அவனுக்கும், முன்னே தேவர்கள் தமக்கு ஸமர்ப்பித்த இரத்தின கடகத்தையும், மதயானைகளையும், குதிரைகளையும், இரதங்களையும், இரத்தினாபரணங்களையும், பொன்னாடைகளையும், சந்தனத்தையும் வழங்கி, குகனுக்கு யானை குதிரைகளையும், விலை உயர்ந்த ஆடையாபரணங்களையுங் கொடுத்து முடிவில் அனுமாரையும், அங்கதனையும், சாம்பவரையும், சுக்கிரீ

வனையும் நோக்கி, "உங்களுடைய பிரிவு எனக்கு வருத்தத்தைச் செய்கின்றது; எனினும் கிட்கிந்தை அரசானது நீங்களில்லாமல் நடைபெறாதாதலின் நீங்கள் அங்கே போகவேண்டியது அவசியமாகின்றது; ஆதலால் நீங்கள் போய் அரசாட்சியை அழகுபெற நடத்திக்கொண் டிருங்கள்; விரும்பியபோது வந்து என்னைப்பார்த்துக் கொள்ளலாம்" என்று உபசார வார்த்தைகள் கூறி, அப்படியே விபீஷணனிடத்தும் நன்மொழி நவின்று, குகனுக்கும் குதூகலமான வார்த்தை கூறி, எல்லோரும் அவரவருடைய இருப்பிடங்கட்குச் செல்லும்படி யாவருக்கும் கட்டளையிட்டருளினார்.

அவ்வாறு இராமர் விடை கொடுத்தவுடனே அவர்களெல்லோரும் சந்தோஷத்தோடு அங்குள்ள யாவரிடத்தும் வணங்கி விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டு ஒரே கூட்டமாய்ப் போனார்கள். கங்கைக் கரையை அடைந்தவுடன் குகன் மற்றவர்களிடம் விடை பெற்றுத் தன்னிருப்பிடஞ் சேர்ந்தான். கிஷ்கிந்தையை அடைந்தவுடன் விபீஷணன், சுக்கிரீவன் முதலியவர்களை அங்கே நிறுத்திவிட்டு அவர்களிடம் விடை பெற்றுக்கொண்டு இலங்காநகரம் போய்ச் சேர்ந்தான். இராமர் தம்பிமார்களுடனும், தாய்மார்களுடனும், பெரியோர்களுடனும் சகல தர்மங்களும் தழைத்தோங்க அயோத்தியில் அரசு செய்துகொண்டிருந்தார்.

சுபம்.

85518

"ஆனந்தபோதினி" அச்சுக்கூடம், சென்னை.